# இந்தியாவின் விடிவெள்ளி சீகன்பால்கு



எஸ்.லாரன்ஸ்

டி. அருள்தாஸ்

# இந்தியாவின் விடிவெள்ளி
# சீகன்பால்கு

எஸ். லாரன்ஸ்

டி. அருள்தாஸ்

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்

THE CHRISTIAN LITERATURE SOCIETY
Post Box 501, Park Town, Chennai - 600 003

**INDIAVIN VIDIVELLI : ZIEGENBALG**

by

S. Lawerence
D. Aruldoss

© C.L.S.

*First printed, 1990*
*Reprinted 1997*

விலை ரூ. 35.00

Printed at The C.L.S. Press, Chennai 600 007. L 6283

# ஆசியுரை

'இந்தியாவின் விடிவெள்ளி சீகன்பால்கு' என்ற பயனுள்ள நூலுக்கு ஆசியுரை வழங்குவதில் பெரிதும் மகிழ்வடைகிறேன். சீகன்பால்கின் வாழ்க்கை வரலாறு சிறு நூலாக பல்லாண்டுகட்குமுன், நாம் பயன்படுத்தும் நூலாக இருந்தது. அதற்குப்பின் நீண்டகால இடைவெளியேற்பட்டு சீகன்பால்கைப் பற்றிய செய்தியறிய வேண்டிய நூலொன்று அச்சிடப்படாமலேயேயிருந்தது. இப்பெருங் குறையை நீக்கும்பொருட்டு மறைதிரு. எஸ். இலாரன்ஸ், மறைதிரு. டி. அருள்தாஸ் ஆகிய ஆயர்கள் இச்சிறப்புப் பணியை மேற்கொண்டு எளிய மொழியில், இனிய நடையில் அனைவரும் புரிந்துகொள்ளும் வகையில் இந்நூலைப் படைத்திருக்கின்றார்கள். அவர்களது நன் முயற்சிக்காகவும், சிறந்த பணிக்காகவும் எனது பாராட்டுக்களையும், ஆசியையும் வழங்குகிறேன்.

சீகன்பால்கு, புளூச்சௌ ஆகிய அரும்தொண்டர்கள் இருவரும் லுத்தரன் திருச்சபையைச் சேர்ந்தவர்களாயினும் இன்று 282 ஆண்டுகட்கு முன்னர் தரங்கம்பாடியில் கரையிறங்கிய முதல் பிராட்டஸ்தந்து தொண்டர்கள் வரிசையில் முன்வைக்கப்படுபவர்கள்.

இவர்கள் லுத்தரன் திருச்சபை மக்களுக்கு மட்டுமல்ல இந்தியாவிலுள்ள அனைத்து பிராட்டஸ்தந்து திருச்சபையும், தோன்ற வித்திட்டு வழிவகுத்த இறைத்தொண்டர் ஆவார். இந்நூல் இந்தியாவிலுள்ள அனைத்து கிறிஸ்தவ மக்களுக்கும் பயன்படும் நூலாக அமைந்துள்ளது. இந்நூலை திருச்சபையிலுள்ள மக்களும், அனைத்து கல்வி நிலையங்களிலும் பயிலும் மாணவர் சமுதாயமும், இளைஞர்களும் பயன்படுத்தி நற்

செய்தித் தொண்டர்களாக ஆர்வம் கொண்டு அரும்பணி யாற்ற அனைவரும் முன்வருவார்களாக.

இந்நூலாசிரியர்களை மீண்டும் இறைமைந்தர் இயேசு கிறிஸ்துவின் திருமுன்னர் நிறுத்தி ஆசி கூறுகிறேன்.

> 'உங்களுக்குக் கடவுளின் செய்தியை எடுத்துச் சொன்ன, உங்கள் தலைவர்களை நினைத்துப் பாருங்கள்; அவர்கள் எவ்வாறு வாழ்ந்து, எவ்வாறு வாழ்க்கையை முடித்தார்கள் என்பதை எண்ணிப்பார்த்து அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையையே நீங்களும் கொண்டிருங்கள்' *(எபி. 13:7).*

*27–7–1988*
திருச்சி

**ஜெயசீலன் ஜேக்கப்**
*தரங்கைப் பேராயர்*

## பொருளடக்கம்


1. இந்தியாவில் கிறிஸ்தவம் ... 1
2. சீகன்பால்குவின் வாழ்க்கை வரலாறு ... 5
   (i) பிறப்பும் இளமையும்
   (ii) சீகன்பால்குவின் கல்வி
3. இந்தியாவை நோக்கி சீகன்பால்கு ... 14
4. தமிழகத்தில் வரவேற்பு ... 19
5. தமிழ்மொழியைக் கற்றலும் தமிழுக்கு ஆற்றிய தொண்டும் ... 22
6. நற்செய்தித் தொண்டர்கள் அடைந்த இன்னல்கள் ... 29
7. பலவகைப் பணிகள் ... 41
8. நற்செய்திப் பணி விரிவடைதல் ... 47
9. பல இடங்களுக்குச் சுற்றுப்பயணம் ... 51
10. திருமறை திருப்புதல் ... 56
11. சீகன்பால்கு தாயகம் சென்றது ... 63
12. இறுதிகாலப் பணிகள் ... 69
13. சீகன்பால்குவின் மரணம் ... 74
14. சீகன்பால்குவின் பணிபற்றிய ஒரு மதிப்பீடு ... 80

# 1. இந்தியாவில் கிறிஸ்தவம்

சீகன்பால்குவைச் சரியாக அறியவேண்டுமானால் அவருக்கு முன்னிருந்த இந்தியாவின் கிறிஸ்தவநிலையை அறிவது நலம்.

இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலர்களில் ஒருவரான திதிமு எனப்பட்ட தோமாவின் வருகையோடு இந்தியாவில் கிறிஸ்தவம் உதயமானது என்ற ஓர் பாரம்பரியம் உண்டு. தோமா இந்திய மண்ணில் முதல் கிறிஸ்தவ நற்செய்தித் தொண்டராக அடியெடுத்து வைத்து நற்செய்தி அறிவித்து கிறிஸ்தவத்திற்கு வித்திட்டார் என்றும், நற்செய்தியை ஏற்றுக்கொள்ளாதவர்களால் குத்திக் கொல்லப்பட்டு இந்தியாவில் முதல் இரத்தசாட்சியாக இறந்தார் என்றும் கூறப்படுகின்றது.

தோமாவுக்குப்பின் 1498இல் வாஸ்கோடகாமா என்பவர் கேரளத்திலுள்ள கள்ளிக்கோட்டையை அடைந்தபோது, இந்தியக் கிறிஸ்தவத்தில் ஒரு புதிய திருப்பம் உருவானது. இவர் இரண்டாம் முறை இந்தியா வந்தபோது, கொச்சின் துறைமுகத்தை வந்தடைந்தார். அப்பொழுது கொச்சினிலிருந்து சீரியாக் கிறிஸ்தவர்கள் தாங்கள் போர்த்துக்கீசியரின் உதவியை விரும்புவதாகத் தோமாவிடம் கூறினபோது வாஸ்கோடகாமா அதை ஏற்றுக்கொண்டு தமது தாயகம் திரும்பி ரோமன் கத்தோலிக்கக் கொள்கையை ஏற்றுக்கொண்ட தமது நாட்டு மன்னனிடம் இதுபற்றி எடுத்துக்கூறி இந்தியாவில் ரோமன் கத்தோலிக்கக் கொள்கை வேர்விட வழிவகுத்தார்.

இதைத் தொடர்ந்து இயேசு சங்கத்தைச் சேர்ந்த (Jesuits) பிரான்சிஸ் சேவியர் 1541ஆம் ஆண்டு இந்தியா வந்தபோது, ரோமன் கத்தோலிக்க சபை இந்தியாவில் பரவ

ஆரம்பித்தது. பிரான்சிஸ் சேவியருக்குப்பின் பல ரோமன் சபை இறைத் தொண்டர்கள் மேல்நாடுகளிலிருந்து இந்தியாவிற்கு வந்து கத்தோலிக்க சபையை இந்தியாவில் பலப்படுத்தினார்கள்.

## இந்தியாவில் சீர்திருத்த (Protestant) சபைகளின் துவக்கம்

மார்ட்டின் லூத்தர் தவறான கொள்கைகளை விட்டுவிட மறுத்த போப்புகளுக்கும், உதவியாளருக்கும் எதிராகப் பெரும் ஆன்மீகப் புரட்சி செய்து திருச்சபையில் பெரிய சீர் திருத்தங்களை 1517ஆம் ஆண்டு முதல் ஏற்படுத்தினார். இதனால் சீர் திருத்த சபைகள் உருவாயின. கத்தோலிக்கரின் மத்தியில் சீர்திருத்தலின் காரணமாகக் கண்டுகொள்ளப்பட்ட மெய் போதகத்தை நிலைநிறுத்துவதில் கவனம் செலுத்தி விட்டதால் கிறிஸ்துவை அறியாத நாடுகளுக்குச் சென்று நற் செய்திப் பணி செய்யமுடியாமல் போனது.

ஆனால் கிறிஸ்தவ நாடுகள் என்று அழைக்கப்பட்டு ஐரோப்பிய நாகரீகம் பரவி இருந்த நாடுகளில் மட்டுமே சீர் திருத்த சபைகள் தங்கள் போதகங்களை நிலைநிறுத்திக்கொண் டிருந்தன. இதன் காரணமாக அறிவுப் புரட்சியும் ஆன்மீக மறுமலர்ச்சியும் தோன்றின என்பதை மறக்கலாகாது.

காலம் செல்லச் செல்ல சீர்திருத்த சபைகளுக்கிருந்த பிரச்சினைகள் குறையத் தொடங்கினபோது நற்செய்தியைப் பிற நாடுகளுக்கும் கூறி அறிவிக்கவேண்டும் என்ற ஆர்வத்தைச் சீர் திருத்த சபைகள் பெற்று செயல்படத் துவங்கின.

இந்தியாவிற்கு சீர்திருத்தச் சபையின் நற்செய்தித் தொண்டர்களை (Missionaries) அனுப்பவேண்டும் என்று முதன் முதலில் விரும்பியவர் டென்மார்க் நாட்டு மன்னரான நான்காம் பிரடெரிக் (King Fredrick IV) ஆவார். இவர் தனது அரசவைக் குருவிடம் இந்தியாவிற்கு அனுப்புவதற்கு ஏற்ற ஒரு சிலரைத் தேடி அழைத்து வருமாறு கூறினார். இவர் குறிப்பாக இந்தியாவிற்கு நற்செய்தித் தொண்டர்களை அனுப்ப விரும்பியதற்கு காரணம் உண்டு. டென்மார்க்கைச் சேர்ந்த வியாபாரக் குழு அப்போது இந்தியாவில் தமிழகத்

தின் கடற்கரைப் பகுதியான தரங்கம்பாடியை தங்களின் வாணிப மையமாகக்கொண்டு செய்து வந்தார்கள். ஆகவே தமது ஆளுகையும் ஆட்களும் உள்ள இடத்திற்கு நற்செய்தித் தொண்டர்களை மன்னர் அனுப்ப விரும்பினார்.

**மன்னர் நான்காம் பிரடெரிக்**

சீர்திருத்த சபையின் நற்செய்தித் தொண்டர்களை முதன் முதலில் இந்தியாவிற்கு அனுப்பிவைத்தவரும், இந்திய நாடு நற்செய்தி என்ற நறுமணத்தை நுகர காரணமாக அமைந்தவருமான மன்னரைப்பற்றி ஒருசில குறிப்புகளை அறிவது நலம்.

மன்னர் நான்காம் பிரடெரிக் லுத்தரன் திருச்சபையைச் சார்ந்தவர். டென்மார்க்கை ஆண்ட அரசர்களில் தலைசிறந்தவர். நற்செய்திமீது ஆர்வம்கொண்ட உத்தம கிறிஸ்தவர்.

திருச்சபையிலும் அமைதியும், ஒழுங்கும் நிலவவேண்டும் என்று விரும்பி அதை நிலைநாட்டியவர். தன் நாட்டு மக்கள் அனைவரும் நற்செய்தியை அறிந்து, அதன்படி வாழவேண்டும் என்ற அவாகொண்டதோடு தான் பெற்ற இன்பம் இவ வையகமும் பெறவேண்டும் என்ற பேரவாவும் கொண்டவர். இந்த அவா தான் தமது அரசுக்கு சொந்தமாக வணிகக் குழு வாங்கியிருந்த நிலப்பகுதியில் வாழும் மக்களும்கூட இயேசு பெருமானை அறிந்து வளரவேண்டும் என்ற ஆவல் அவரைத் தூண்டியது. தமது சொந்த செலவிலேயே இறைத் தொண்டர்களை இந்தியாவிற்கு அனுப்ப முன்வந்து அதைத் தன் அரசவையின் ஆயரிடத்தில் கூறினார்.

'யாரை நான் அனுப்புவேன். யார் எனது காரியமாய்ப் போவான்?' (ஏசா. 6:8) என்ற அடிப்படையில் மனபாரத்தைத் தமக்குள்ளே கொண்டிருந்த மன்னரின் விருப்பத்தை நிறைவேற்ற அரசவையின் ஆயர் பிரான்ஸ் யூலியஸ் லூயட் கென்ஸ் (Franz Julius Luet Kens) முயற்சி செய்தார். இருப்பினும் டென்மார்க்கு நாட்டில் இப்பணிக்கு எவரும் தகுதியானவர்கள் இருப்பதாகக் கருதவில்லை. எனவே ஜெர்மனி

நாட்டிலுள்ள தமது நண்பர்களிடம் இதுபற்றி எடுத்துக்கூறி நண்பர்கள் வாயிலாக அப்போது இறையியல் படித்துக் கொண்டிருந்த இளைஞர்களான பர்தொலோமியோ சீகன் பால்கு, ஹென்றிச் புளுச்சோ ஆகிய இருவர் இந்தியா செல்ல முன்வந்ததை மன்னரிடம் கூறினர். மன்னர் மகிழ்ந்து அவ் விருவரையும் இந்தியாவிற்கு அனுப்ப எல்லா ஏற்பாடுகளை யும் செய்தார்.

ஜெர்மனி நாட்டில் இருந்தபோது சீகன்பால்குவும் புளுச் சோவும் தனி ஆள் பக்தியை வலியுறுத்தும் பக்தி இயக்கத்தி லும் (Pietism) பெரிதும் நாட்டம் கொண்டிருந்தார்கள். ஆனால் டென்மார்க் நாட்டின் பேராயரும், ஆயர்களும் இவ் வியக்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்தார்கள். ஆகவே சீகன்பால்குவுக்கும் புளுச்சோவுக்கும் அருட்பொழிவு (Ordination) கொடுத்து அனுப்புவது என்பது கேள்விக்குறி யாகிவிட்டது. இந்த இக்கட்டான நிலையில் மன்னர் தலை யிட்டு இவர்கள் இருவரும் டென்மார்க்கிலேயே அருட் பொழிவு பெற வழிவகுத்தார். அதோடுகூட இவர்கள் இருவ ருக்கும் அரசவை நற்செய்தித் தொண்டர்கள் (Royal Missio-naries) என்ற தனி உரிமையையும் மன்னர் வழங்கி இவர்களை இந்திய நாட்டின் தமிழக கடற்கரைப் பகுதியான தரங்கம் பாடி என்ற சிற்றூருக்கு அனுப்பிவைத்தார். தாம் ஏற் கெனவே எடுத்த முடிவுப்படி இவர்களுக்குரிய அனைத்து செலவுகளையும் மன்னரே ஏற்றார்.

சீர்திருத்த சபையின் முதல் நற்செய்தித் தொண்டர்களை அனுப்பிய பெருமை டென்மார்க்கு நாட்டிற்கும் மன்னர் நான்காம் பிரடெரிக்குக்குமே உரியது. நற்செய்தித் தொண் டர்களைத் தந்த பெருமை ஜெர்மன் நாட்டிற்கே உரித்தானது முதல் நற்செய்தித் தொண்டர்கள் 1706ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 9ஆம் நாள் தங்களது பாதங்களை இந்திய கடற்கரை மண்ணில் எடுத்துவைத்து புதிய சகாப்தத்தை ஏற்படுத்தி னார்கள்.

# 2. சீகன்பால்குவின் வாழ்க்கை வரலாறு

## I. பிறப்பும்—இளமையும்

1682ஆம் ஆண்டு ஜூன் 10ஆம் நாள் ஜெர்மனி நாட்டில் தென்கிழக்குப் பகுதியில் இருந்த சக்சோனியா பிரதேசத்தில் இருந்த புல்ஸ் நிட்ஸ் என்ற சிற்றூரில் பர்தொலோமியோ சீகன்பால்கு பிறந்தார்.

இவரது தந்தையின் பெயரான பர்தொலோமியோ என்ற பெயரும் இவருக்குச் சூட்டப்பட்டு இவருக்குத் திருமுழுக்கு கொடுக்கப்பட்டது. இவரது தந்தை வசதி படைத்தவர். இவருக்கு சொந்தமான வீடுகள், வேலையாட்கள், வயல்கள் இருந்தன. இதோடு நவதானியங்களை விற்கும் தொழிலும் செய்துவந்தார். ஆயினும் உலகப் பொருளைவிட பரம் பொருளையே அதிகமாக ஆசித்தார். உலகப் பொருளைத் தேடுவதைவிட பரலோக வாழ்வையே அதிகமாக விரும்பினார்.

இவர் தனது மரணத்தை எப்போதும் நினைக்கும் பொருட்டு தனக்கு ஒரு சவப்பெட்டியைச் செய்வித்து அதை எப்போதும் தனது பார்வையில் படும்படியாக வைத்திருந்தார்.

சீகன்பால்குவின் தாயாரின் பெயர் காத்ரீனாள். இவர் சிறந்த பக்தி உள்ளவர். இவர் தனது மரணப்படுக்கையில் படுத்திருக்கும்போது, இவரது பிள்ளைகள் இவரது படுக்கையைச் சுற்றி நின்று அழுதார்கள். அப்போது இவர் தனது பிள்ளைகளிடம் அன்பான பிள்ளைகளே! நான் உங்களுக்காகப் பெரிய ஆஸ்தியை சேமித்து வைத்திருக்கிறேன் என்று ஆறுதல் படுத்தினார்.

அப்போது இவரின் மூத்த மகன் இவளிடம், அம்மா அந்த ஆஸ்தி எங்கே இருக்கிறது? என்று கேட்க, இவர் தனது பிள்ளைகளிடம், 'என் அருமைக் குழந்தைகளே! அந்த ஆஸ்தி திருமறையில் இருக்கிறது. ஆகவே அதைத் திருமறை யில் தேடுங்கள் அங்கே கண்டுபிடிப்பீர்கள். நான் ஒவ்வொரு பக்கத்தையும் என் கண்ணீரால் நனைத்திருக்கிறேன்' என்றார். இவ்வாறு சீகன்பால்குவின் தந்தையும், தாயாரும் கடவுள் பக்தியைப் பிள்ளைகளிடத்தில் அதிகமாய் விதைத்த அருமைப் பெற்றோர்களாக இருந்தார்கள்.

சீகன்பால்குவின் தாயார் இறந்தார். அவர் இறந்த இரண்டாண்டுகள் கழித்து அவரது தந்தையும் இறந்தார்.

சீகன்பால்குவிற்கு அப்போது வயது ஆறு. ஒருநாள் புல்ஸ் நிட்ஸ் ஊரில் தீப்பற்றி சீகன்பால்குவின் வீட்டிற்கும் தீ பரவி வீடு எரிந்துபோனபோது, நோய்வாய்ப்பட்டு படுக்கை யிலிருந்த சீகன்பால்குவின் தந்தை அதிகம் பாதிக்கப் பட்டார். அவசரத்தினிமித்தம் சீகன்பால்குவின் தந்தை யைத் தனக்காக செய்துவைத்திருந்த சவப்பெட்டியிலேயே வைத்து, மருத்துவரிடம் எடுத்துச் சென்றபோது, வழியிலேயே அப்பெட்டியில் இருக்கும்போதே இறந்தார்.

தந்தை இறந்த அதே ஆண்டில் சீகன்பால்குவின் சகோ தரியும் இறந்தார். சிறுவனை சீகன்பால்குவினால் இவ்வாறு ஒன்றன்பின் ஒன்றாக நடந்த துயரத்தைத் தாங்கிக்கொள்ள முடியாமல் இருந்தது. இது அவரைப் பெரிதும் பாதித்தது. சொல்லமுடியாத வேதனையால் சீகன்பால்கு துடித்தார்.

பெற்றோர் இறந்ததினால் சீகன்பால்கு தனது மூத்த சகோதரி அன்னாளுடன், அவளது பராமரிப்பில் வாழ்ந்து வந்தார். இவள் தாய்போல் இருந்து நல்லொழுக்கத்திலும் வேதப் பயிற்சியிலும் சீகன்பால்குவை வளர்த்து வந்தார்.

## II. சீகன்பால்குவின் கல்வி

சீகன்பால்குவிற்கு இளமையிலேயே கல்வியில் நாட்டம் இருந்தது. எதையும் அறிந்துகொள்ள வேண்டும்

என்ற அவா அவருக்குள் அதிகம் இருந்தது. இளவயதிலேயே மோட்சம் – நரகம் போன்றவைகளைப் பற்றி மிக நுட்பமாய் அறிய விரும்பினார். எவராவது இறந்தால் அவரது உயிர் எங்கே போகும் என்று கேட்பார். தவறுக ஏதாவது செய்து விட்டால் மனசாட்சியால் அதிகம் வாட்டப்பட்டார்.

சீகன்பால்குவின் பெற்றோர் இறந்ததால் அவர் தமது சொந்த ஊரான புல்ஸ்நிட்ஸில் தங்கி கல்வி கற்றது மிக மிகக் கொஞ்சக் காலம்தான்.

இவர் இளவயதிலேயே ஆன்மீகக் காரியங்களில் ஆர்வம் காட்டி வந்தார். தாம் படித்த பள்ளியில் ஒவ்வொரு நாளும் மன்றாட்டுக் கூட்டத்தை நடத்தி பக்திக்குரிய காரியங்களில் அதிக அக்கறையும் ஆர்வமும் காட்டி வந்தார். இதனால் இவரிடம் ஆசிரியர்களும் பல பெரியவர்களும் அன்பும் பாசமும் காட்டி இவரைப் பாராட்டினார்கள்.

இவருக்கு ஒரு பக்கத்தில் ஆறுதல் இருந்தாலும் பெற்றோரும் சகோதரியும் உடனுக்குடன் இறந்தது இவரை பெரிதும் பாதித்துக் கொண்டேயிருந்தது. அதோடு இவரது தாயார் மரணப்படுக்கையில் கூறின வார்த்தைகள் இவரது மனத்தை விட்டு நீங்காமல் இருந்தது. இறையியல் (Theology) படிக்க வேண்டும் என்ற அவாவை இவருக்குள் நாளுக்கு நாள் அதிகரிக்கச் செய்தது. இதற்காக இவர் தம்மைப் பல்கலைகழகப் படிப்புக்காக எப்போதும் ஆயத்தப் படுத்தியவராகவே வாழ்ந்தார்.

### தொடக்கக் கல்வி

சீகன்பால்கு முதலில் காமென்ஸ் (Kamenz) என்ற இடத்தில் பள்ளியில் சேர்ந்து கிரேக்கு இலத்தீன் மொழி களைப் படித்தார். இவர் இங்கிருந்தபோது அங்குள்ள பள்ளி மாணவர்கள் உலகப் பிரகாரமான கேளிக்கை, கூத்து, நடனம் என்ற வீணான ஆடம்பரங்களில் அதிக நாட்டம் கொண்டிருந்தார்கள். சிற்றின்ப சோதனை இவரையும் அணுக ஆரம்பித்தது. ஆனால் கடவுளின் காக்கும் கரம் இவரை இவைகளில் ஈடுபடாதபடிக் காத்து வழி நடத்தியது.

இவர் தன்னைப் பிற மாணவர்களிடமிருந்தும், அவர்களது செயல்களிலிருந்தும் தனிப்படுத்திக் கொண்டு அடிக்கடித் தனிமையான இடங்களுக்குச் சென்று தமக்கு கடவுள் ஞானத்தை அருளும்படி ஊக்கமாகவும், உருக்கமாகவும் வேண்டிக் கொண்டு தம் வாழ்க்கையை நடத்தி வந்தார். 'விளையும் பயிர் முளையிலேயே தெரியும்' என்பதற்கேற்ப தமது இளவயதிலேயே வயது வந்த ஒருவரைப் போல ஆன்மீகத்தில் வளர்ந்த நிலையை எய்திய மனப்பக்குவத்தை அடைந்திருந்தார்.

### மேல்நிலைக் கல்வி

இலத்தீன் கற்றபின்பு இவர் 1694ஆம் ஆண்டு தனது 12 வயதில் கொய்ர்லிட்ஸ் (GOerlitz) என்ற ஊரிலுள்ள பள்ளியில் தனது மேல்நிலைப் படிப்பான எட்டாண்டு காலப் படிப்பை முடிக்க அங்கு போய்ச் சேர்ந்தார். இவர் இங்கிருந்த காலத்தில், எதிர்காலத்தில் தாம் படிக்க வேண்டும் என்று விரும்பிக்கொண்டிருந்த இறையியல் கல்விக்குத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டதோடு அவ் வூரிலிருந்த திருச்சபைகளோடு நெருங்கிய தொடர்பும் கொண்டு தமது பக்தியை இன்னும் அதிகமாகப் பெருக்கிக் கொண்டார்.

இவரது 17ஆவது வயதில் இசையில் அதிக ஈடுபாடு கொள்ளலானார். இவர் ஒருமுறை தம் நண்பர்களோடு இசைக்கருவிகளை வாசிக்கக் கூடியிருந்தபோது 'கடவுளோடு ஆவிக்குரிய சரியான உறவு வைத்திருப்பவர்களாலேயே மட்டும் இசையைப் புரிந்துகொள்ள முடியும். பாவத்தால் பாழ்பட்டிருக்கும் உள்ளம் இன்னிசையின் இரகசியங்களை, அதன் இரகசிய இன்பத்தை நுகர்தல் என்பது இயலாத ஒன்று' என்று இவரது நண்பர்களில் ஒருவரால் சொல்லப் பட்டபோது இவ்வார்த்தைகள் இவரை அதிகமாகக் கவர்ந்தன. அதுமுதல் இவர் இசையை அதிகமாக விரும்பிக்கற்றார். இசையைப்பற்றிக் கூறிய அதே நண்பன் இவரிடம் நீ உலக நட்பை விட்டால் எனது நண்பன் ஆகலாம் என்றான். அந்

நாள் முதல் இவர் அந்த நண்பனோடு நெருங்கிப் பழகி இருவரும் ஜெபத்திலும் வேதத்தைத் தியானிப்பதிலும் ஒருமித்து ஈடுபடலானார்கள்.

பக்தி வாழ்வில் நாளுக்கு நாள் வளர்ந்து முன்னேறிய இவர் அப்போது ஜெர்மனி நாட்டில் நிலவிய பக்தி இயக்கம் (Pietism) அதாவது தனி தியானத்தாலேயே உண்மையையும் பரம்பொருளையும் காணமுடியும் என்ற கொள்கையால் ஈர்க்கப்பட்டார். இது இவருக்குள் வேரூன்றியது. இவர் இக்கொள்கையை ஒப்புக்கொண்டதி லிருந்து தம்மைத் தனிப்படுத்தி, தீமையான எல்லாவற்றை யும் வெறுத்து பக்தியை விரிவுபடுத்தி தனித்தியானத்தில் ஈடுபட்டார். முன்னுள் நண்பர்களையும், சிற்றின்பத்தையும் வெறுத்து ஆன்மீகத்தில் ஈடுபடத்துவங்கினர். இதைக் கண்ட அவரது நண்பர்கள் இவரைப் பழிக்கவும், துன்புறுத்தவும் துவங்கினார்கள். ஆயினும் சீகன்பால்கு இதையெல்லாம் சகிக்கவும், மேற்கொள்ளவும் கூடியவரானார். 'என் உள்ளம் தெய்வ இன்பத்தையும், மகிழ்ச்சியையும அனுபவித்திருக் கின்றது. ஆகையால் உலக இன்பத்தை வெறுக்கவும் உலகப் பகையை ஏற்றுக்கொள்ளவும் என்னால் எளிதில் கூடும்' என்று கூறினார்.

உலகப் பகையைவிடக் கடவுளின் அன்பு சிறப்பானது என எண்ணத் துவங்கினார். திருமறையில் அடங்கின திரவியத்தைத் தோண்டி எடுக்க விரும்பி அதில் அதிக ஈடு பாடு கொண்டார். கர்த்தர் எவரை உயர்த்தச் சித்தமா யிருக்கின்றாரோ அவரை முதலில் தாழ்த்துகின்றார். இது சீகன்பால்குவின் வாழ்விலும் உண்மையாய் இருந்தது.

இவருக்கு பதினெட்டு வயதானபோது இன்னும் அதிகத் தீவிரமாகப் பக்தி இயக்கத்தில் நாட்டம் கொண்டார். இதனால் இவர் இதற்கு முன் படித்த படிப்பு, கற்ற பல மொழி கள் அனைத்தும் வீண் என்ற நிலைக்கு வந்தார். தனித் தியானமே சிறந்தது. கடவுள் அரசில் செல்ல அதுவே வழி என்ற முடிவுக்கு வந்தார். இதைக் குறித்து இரவு பகலாக புத்தகங்களைப் படித்து தியானம் செய்துகொண்டே இருந்த

தால், இவரது உடல் நிலை பெரிதும் பாதிக்கப்பட்டது. இவரைக் கண்ணுற்ற இவரது ஆசிரியர்கள் இவர் உடலள விலும், ஆன்மா அளவிலும் இன்னும் வளர்ச்சிபெறவில்லை என்று முடிவுசெய்து இவரைப் பள்ளியிலிருந்து 1702ஆம் ஆண்டில் அனுப்பி விட்டார்கள்.

இருப்பினும் கொய்ர்லிட்ஸில் சீகன்பால்கு ஆன்மீக வாழ்வில் வளர்ந்தார் என்பதை மறுக்க முடியாது. இந்திய நாட்டை நோக்கி வர இருந்த இவர் இந்திய நாட்டின் சமயத்தைப்பற்றி அறியாத நேரத்திலேயே இந்து சமயம் வலியுறுத்தும் 'தியானம்' பற்றி அறிந்து அதைத் தன் வாழ் வில் நடைமுறைப்படுத்தி தன்னை அறியாமலேயே எதிர் காலப் பணிக்கு தம்மைத் தயார் படுத்திக்கொண்டார் என்றால் அது மிகையாகாது. இவர் இந்தியா வந்தபோது கொய்ர்லிட்ஸின் அனுபவம் இவருக்குப் பெரிதும் உதவியாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. கடவுள் தாம் தெரிந்து கொள்ளும் அடியார்களை எவ்வளவு அற்புதமாகப் பக்குவப் படுத்துகின்றார் என்பதை இவரது வாழ்க்கை எடுத்துக் காட்டுகின்றது.

1702இல் கொய்ர்லிட்ஸிலிருந்து வெளியேறிய சீகன் பால்கு பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படிக்கத் திட்டமிட்டார். அதற்காக அவர் தன்னை ஆயத்தம் செய்தபோது அவரது இன்னொரு சகோதரி இறைவனடிச் சேர்ந்த துக்கச் செய்தி யால் பெரிதும் பாதிப்புக்குள்ளானார். இருந்தாலும் இவை யெல்லாம் தாங்கிக்கொண்டு நேரம் கிடைக்கும்போதெல் லாம் இறையியல் புத்தகங்களைத் தொடர்ந்து படித்து வந்தார். இதனால் ஒரு பக்கம் ஆவிக்குரிய வாழ்வில் சிறந்தார் என்றாலும் அதிகப் படிப்பு அவரது உடலைப் பெரிதும் பாதித்து அவரை மிகவும் வாட்டியது. ஆயினும் இறையியல் படிக்கவேண்டும் என்ற ஆசை அவருக்குள் பசு மரத்து ஆணிபோல் பதிந்திருந்தது. எந்தச் சூழ்நிலையிலும் அவரது விருப்பத்தை அவர் விடவே இல்லை.

## இறையியல் கல்வி

ஆகஸ்டு ஹெர்மன் பிராங்கே என்பவரின் உதவியால் சீகன்பால்கு தனது இறையியல் கல்வியை ஹல்லே பல்கலைக் கழகத்தில் படித்தார். அங்கு புதிய அனுபவத்திற்குள் வந்ததற்காக மகிழ்ச்சி அடைந்தார். கொய்ர்லிட்ஸில் இருந்தது போன்றில்லாமல் இங்கு ஆசிரியர்களும் உடன் மாணவர்களும் தன்னோடு நெருங்கி அன்புடன் பழகினது சீகன்பால்கிற்கும் பெரிய ஆறுதலாக இருந்தது. இவர் தனது உடன் மாணவர்களுடன் நெருங்கிப் பழகி, திருமறை கருத்துக்களைச் சிந்தித்து, ஐயங்களை அகற்றி ஆன்மீகத்தில் இன்னும் அதிகமாக வளர்ந்தார். ஆனால் அவரது உடல்நலக் குறைவு அவரை அங்கு இரண்டு மாதங்கள் மட்டுமே தங்க அனுமதித்தது.

எனவே திரும்பவும் இவர் தான் பிறந்த ஊரான புல்ஸ்நிட்ஸிக்கு சென்று ஒன்பது மாதங்கள் உடல்நோயினால் அதிக வேதனையை அனுபவித்தார். 1703ஆம் ஆண்டில் மீண்டும் ஹல்லே பல்கலைக் கழகத்தில் சேர்ந்து இறையியல் கற்றார். இவர் தங்குவதற்காக இடம்தேடி அலைந்தபோது ஒரு பக்தியுள்ள மாணவன் இவரைத் தன் அறையில் ஏற்றுக்கொண்டான். இதனால் இருவரும் ஒருவருக்கொருவர் தங்களது அனுபவத்தைப் பகிர்ந்து ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்தார்கள்.

இவர் இறையியல் பேராசிரியர்களின் உபதேசங்களுக்கு ஆர்வத்தோடு செவிமடுத்து பல புதிய உண்மைகளைக் கற்றுக் கொண்டார். அங்கு ஓர் புதிய அனுபவத்திற்குள் வந்தார். இதற்குமுன் தனி பக்தியின் மூலமாகத்தான் ஒருவர் உண்மையையும் பரம்பொருளாகிய கடவுளையும் அறிந்துகொள்ள முடியும் என்று நம்பிய இவர் இப்போது நற்செய்தியின் மூலம் உண்டாகும் விசுவாசத்தினாலே இதை அறிந்து கொள்ள முடியும் என்ற உணர்வைப் பெற்றார். எனவே திருமறையை ஆர்வத்தோடும், ஆழத்தோடும் கற்கத் துவங்கினார்.

சீகன்பால்கின் உடல் நலம் குன்றியதால் பிராங்கே என்பவர் இவரை மெர்சேபர்கில் ஒரு தனி ஆசிரியராக (Private Tutor) பணிபுரிய அனுப்பினார். சீகன்பால்கு அங்கு சென்று அங்கும் பக்கத்து ஊரான எர்புர்த் நகரிலும் தனது உடல் பலவீனத்தையும் பொருட்படுத்தாது கடினமாக உழைத்தார். நேரம் கிடைக்கும்போதெல்லாம் நற்செய்தியைப் பலரோடு பகிர்ந்துகொண்டார்.

ஆயினும் உடல் பலவீனத்தால் சீகன்பால்கு இங்கும் அதிகநாள் தொடர்ந்து இருக்க முடியவில்லை. ஆகவே ஆசிரியப் பணி வேலையை விட்டு மீண்டும் தனது பிறப்பிடமான புல்ஸ் நிட்ஸிக்குச் சென்றார். இவர் இங்கு இருக்கையில் சீகன் பால்கு உடல் பலகீனம் நீங்கப்பட்டு ஆவிக்குரிய புத்துணர்வோடு காணப்பட்டார். இங்கு இருக்கையில் நற்செய்திப் பணியை முன்பைவிட தீவிரமாகச் செய்தார். அதை எல்லோருக்கும் அறிவிக்க வேண்டும் என்ற உள்ளுணர்வு அவருக்குள் உண்டானது. இதற்காகத் தன்னை அதிகமாக ஆயத்தப்படுத்தினார். ஒவ்வொரு நாளும் அட்டவணை போட்டு திருமறையைப் படித்தார். இரவு ஏழு முதல் ஒன்பது மணி வரை புல்ஸ் நிட்ஸ் பள்ளியில் மக்களை வரவழைத்து அவர்களுக்குத் திருமறையை விளக்கிக்காட்டி ஆராய்ச்சி கூட்டங்கள் நடத்தினார்.

பல இடங்களில் உள்ள சபைகள் சீகன்பால்குவிற்கு அருளுரை ஆற்றும்படி அழைப்புகள் விடுத்து அவரை வரவேற்றன. அவரால் போகமுடியாத அளவிற்கு அழைப்புகள் அதிகமாக வந்துகொண்டேயிருந்தன. இதோடு புல்ஸ் நிட்ஸ் ஊரில் இருந்த சபையின் குருவுக்கு உதவியாக அருளுரை ஆற்றவும் வழிபாடு நடத்தவும் உதவி செய்துகொண்டிருந்தார். இவருக்கு மக்களின் உள்ளத்தைத் தொடும்படி பேசும் ஆற்றலைக் கடவுள் கொடுத்திருந்தார். போதிக்கிற தானே தவறு செய்து விடாதபடி இருக்க கடவுள் தன்னை காக்க அவர் எப்போதும் தனக்காக ஜெபித்துக்கொள்வார்.

'ஐரோப்பாவில் ஒருவர் நூறு ஆத்துமாக்களை ஆண்டவருக்காக ஆயத்தப்படுத்துவதும், கடவுளை அறியாத அயல்

நாட்டிலுள்ள ஒரு தனி மனிதனைக் கடவுளிடம் கொண்டு வருவதும் சமமதிப்புடைய அருஞ்செயல்' என்று சொல்லப் பட்ட வார்த்தைகள் சீகன்பால்கின் உள்ளத்தில் ஆழமாய்ப் பதிந்திருந்தது.

சீகன்பால்கு கல்வி ஆர்வம் மிக்கவர். ஆனால் உடல் நலம் குன்றியவர். பலமுறை நோய்வாய்ப்பட்டமையால் கல்விப் பயிற்சியை இவர் விரும்பிய வண்ணம் முழுவதுமாக முடிக்காவிட்டாலும் விரும்பிய கல்வி அனைத்தையும் கற்றார். தனது சொந்த ஊரில் மேலே கண்ட வண்ணமாக சபை குருவுக்கு உதவியாகப் பணியாற்றிக்கொண்டிருந்தபோது அயல்நாடு செல்ல ஒப்புதல் கொடுத்தார். இவரோடு கல்வி கற்றவரும் மெக்கன்பர்க்கைச் சார்ந்தவரும் இவருடைய நண்பருமான ஹென்றி புளுச்சோவும் இவரோடு வருவார் என்ற செய்தி இவரை உற்சாகப்படுத்தியது.

# 3. இந்தியாவை நோக்கி சீகன்பால்கு

1705ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 7ஆம் நாள் ஆகஸ்டு ஹெர்மன் பிராங்கே என்பவருக்கு பெர்லின் நகரிலிருந்து எழுதிய பிரியாவிடைக் கடிதத்தில் (Farewell Letter) 'கடவுள் எவ்வளவு ஆச்சரியமாகவும், ஞானமாகவும் என்னை இதுவரை நடத்தி இருக்கின்றார். ஆபிரகாமிடம் அவர் செய்ததுபோல என்னுடைய தாய் நாட்டையும் என்னுடைய நண்பர்களையும் விட்டுவிட்டு அவர் எனக்கு காட்டும் நாட்டுக்குப் போகும்படி என்னை இப்போது அழைக்கின்றார்' என்று எழுதினார். எத்துணை உருக்கமான வார்த்தைகள்! மனோபலங்கொண்டு தைரியமாயிரு, திகையாதே, கலங்காதே நீ போகும் இடமெல்லாம் உன் கடவுளாகிய கர்த்தர் உன்னோடு இருக்கின்றார்' (யோசு. 1:9) என்ற வார்த்தைகள் சீகன் பால்குவிற்கு எவ்வளவு பொருத்தமானவைகள் என்பது இப்போது புலப்படுகிறது.

மன்னன் நான்காம் பிரடெரிக், பிரான்ஸ் யூலியுங் லூயிட்கென்ஸ் (Franz Juliung Luetkens) என்பவரிடம் இந்தியாவிற்கு அனுப்ப நற்செய்தித் தொண்டர்களைக் கண்டு கொள்ளும் பணியை ஒப்படைத்திருந்தார். இதை 1704ஆம் ஆண்டு அதாவது தாம் பதவிக்கு வந்த ஐந்தாம் வருடத்தில் செய்ய விரும்பினார். இத்தருணத்தில் சீகன்பால்கு உதவி சபை குருவாக தன் பிறப்பிடத்தில் பணியாற்றிக்கொண்டு இருந்தார். லூட்சின்ஸ் என்பவர் யோயாக்கிம் லங்கே (Joachion Lange) என்பவரை சீகன்பால்குவோடு தொடர்பு கொண்டு அவரது விருப்பத்தை அறியும்படி பணித்தார். இப்படிப்பட்ட முன்பின் அறியாத வெளிநாட்டிற்குச் சென்று கடவுளின் பணியைச் செய்யும்படியாகத் தனக்கு வந்த அழைப்பைக் கண்டபோது ஒரு கணம் அதிர்ச்சியுற்றார்.

அதை மறுக்கவும் செய்தார். ஆனால் கலப்பையில் தன் கையை வைத்துப் பின்னிருக்கிறவைகளைத் திரும்பிப் பார்க்கிற எவனும் கடவுள் ராஜ்யத்துக்கு உகந்தவன் அல்லன் என்பதை உணர்ந்து இறுதியிலே அந்த அழைப்புக்கு சம்மதம் கொடுத்தார். எனவே சீகன்பால்குவின் பெயரும் புளூச்சோவின் பெயரும் டென்மார்க் மன்னருக்கு அறிவிக்கப்பட்டன.

திரும்பவும் அக்டோபர் திங்கள் முதல் நாளில் நடந்த கூட்டத்தில் இந்த இரு இறையியல் மாணவர்களும் இந்தியா போக முழுமையான சம்மதம் தெரிவிக்கிறார்களா என்று கேட்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

இதற்கிடையே டென்மார்க் அரசவையிலிருந்து இந்த இருவரையும் சோதித்து அறியும்படியான உத்தரவு டென்மார்க் நாட்டுப் பேராயருக்கு வரவே அவர்களது பக்தியைப் பேராயரும் சோதித்துப் பார்த்து வியந்தார். ஏனென்றால் ஏற்கெனவே குறிப்பிட்டபடி இவர்கள் பக்தி இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்ததால் பேராயர் இவர்களை வெறுத்தார். ஆனால் அவர்களின் பக்தியை சோதித்த பின்னர் பேராயரும் தமது ஒப்புதலை வழங்கினார். எனவே இவ்விருவருக்கும் குருப்பட்டம் கொடுக்க ஒப்புதல் வழங்கப்பட்டு அறிவர் போர்ன்மேன் (Dr. Bornemann) என்பவரிடம் அப்பொறுப்பு கொடுக்கப்பட்டது. இவ்விருவரும் 1705 அக்டோபர் மாதம் குருக்களாக அருட்பொழிவு பெற்றார்கள்.

இந்த ஒழுங்குகள் அனைத்தும் செய்யப்பட்டபின் மன்னர் நான்காம் பிரடெரிக் இந்த இரு நற்செய்தித் தொண்டர்களையும் நேர்முகமாகக் கண்டு அவர்களைப்பற்றி அறிந்துகொள்ள விரும்பினார். சீகன்பால்கு அப். 26:17–18இல் அருளுரை ஆற்றும்படி மன்னரால் கேட்டுக்கொள்ளப்பட்டார். சீகன்பால்குவிற்கு அப்போது வயது 24. 'நீங்கள் பேச வேண்டியவைகளைத் தூய ஆவியானவர் அந்நேரத்தில் உங்களுக்குப் போதிப்பார்' (லூ. 12:12) என்ற வாக்குத்தத்தம் சீகன்பால்கு வாழ்விலும் அப்போது நிறைவேறியது. சீகன்பால்குவின் அருளுரையைக் கேட்டு அரசரும் அவரது குடும்பத்தின

ரும் வியந்தார்கள். சீகன்பால்குவின் மரணம் மட்டும் அரசக் குடும்பத்தினர் அவரிடம் அன்பும் பாசமும் காட்ட இந்த அருளுரை உதவியது.

புளுச்சோ அருளுரை ஆற்றும்படி சொல்லப்படவில்லை. இதன் காரணமும் நமக்குத் தெரிவதில்லை. அதிக வரமும், திறமையும் பெற்ற சீகன்பால்கு இந்திய நாட்டில் சீர்திருத்த சபையின் முதல் நற்செய்தித் தொண்டராக வந்தது கடவுளின் பரிபூரணமான வழிநடத்துதல் என்பதை மறுக்க இயலாது.

ஜாதிகளுக்குள் கடவுளின் மகிமையையும், சகல ஜனங்களுக்கும் அவர் அதிசயங்களையும் விவரித்துச் சொல்ல (2 நாளா. 16:24) 1705ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29ஆம் நாள் இரு நற்செய்தித் தொண்டர்களும் 'அரசிளங்குமரி சோபியா ஹெட்விக்கா' என்ற கப்பலில் ஏறினார்கள், இக் கப்பல் மன்னரின் தங்கையின் பெயரால் அழைக்கப்பட்டது. நற்செய்தித் தொண்டர்களை வழியனுப்ப பக்தர்களும் நண்பர்களும் திரளாகக் கூடி வந்து உளமாற வாழ்த்தி அனுப்பியதோடு பல உயரிய பரிசுப் பொருள்களையும் திருப் பணிக்கென அளித்தார்கள்.

நவம்பர் மாதம் 30ஆம் நாள் கப்பல் புறப்படத் துவங்கினது. 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்பது நம் தமிழ் நாட்டுப் பழமொழி. ஆனால் நற்செய்தித் தொண்டர்களான இந்த இருவரோ இப்பழமொழிக்கு மாறாக எல்லாவற்றையும் இழந்து இயேசுவுக்காக இன்னல்களை ஏற்க கப்பலேறினார்கள்.

கப்பல் பயணம் இருவருக்கும் புதிய அனுபவம். பயணத்தின்போது இடையிடையே ஏற்பட்ட ஆபத்துகளும் அந்த ஆபத்துகளால் இவர்கள் இருவருக்கும் ஏற்பட்ட அதிர்ச்சிகளும் அந்த அதிர்ச்சிகளிடையே காக்கும் கரம் செயல்பட்டதையும் இவ்விருவரும் கண்டு வியந்து கடவுளைப் புகழ்ந்து மகிமைப்படுத்திக்கொண்டே வந்தார்கள். கடவுளின் இரக்கம் கடலைவிட ஆழமானது என்று உணர்ந்து சீகன் பால்கு வியந்தார். கடல் பயணத்தில் ஏற்பட்ட ஒவ்வொரு

நிகழ்ச்சியும் அவர்கள் இறைவனிடம் நெருங்கி அவரைத் துதிப்பதற்கு வழிவகுத்தன. அக்காலத்தில் கப்பலில் மாலுமிகளைச் சேர்த்து 400 பயணிகள் இருப்பின் கரையிறங்கும்போது 300 பேரே இருப்பர். சுமார் 100 பேர் பயணக் கொடுமைகளைத் தாங்காமல் இறந்துவிடுவார்கள்.

இவர்கள் இருவரும் கப்பலில் பயணம் செய்த காலம் ஏழு மாதங்கள். இறையருளால் கப்பலில் இருவருக்கும் ஒரே அறை கொடுக்கப்பட்டிருந்தது. இதனால் இருவரும் பல காரியங்களைக் குறித்துப் பேசவும் கருத்துக்களைப் பரிமாற்றம் செய்துகொள்ளவும் இவர்களுக்கு வாய்ப்பிருந்தது. இந்தக் கப்பல் 1706ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நன்னம்பிக்கை முனையை அடைந்தபோது அங்குள்ள இயேசுவற்றவர்களாய் வாழ்ந்த ஆதிவாசி மக்களைக் கண்டு அவர்களோடு பழகி அவர்களுக்கு நற்செய்திப் பணியாற்ற விரும்பினார்கள். ஆனால் அவர்களின் சேவையோ இன்னொரு நாட்டிற்குத் தேவையாய் இருந்தது.

நன்னம்பிக்கை முனையைவிட்டுக் கப்பல் புறப்பட்ட போது இருவரும் ஓர் தீர்மானம் செய்தார்கள். உள்ளத்தைப் பரவசப்படுத்தக்கூடிய சிறந்த ஒரு பொருள்பற்றி ஆராய்ச்சி செய்து அதன்மூலம் நீண்ட கப்பல் பயணத்தை முடிக்க முடிவெடுத்தார்கள். இதன்படி சீகன்பால்கு 'ஞானம்' என்ற பொருளையும், புளுச்சோ 'உண்மை' என்ற பொருளையும் தெரிந்துகொண்டார்கள். இவ்வாராய்ச்சி சிறந்த இன்பத்தையும் அளித்தது. உண்மையான ஞானத்தின் பொதுமையான கல்விக்கூடம் (The general school of True wisdom) என்ற நூலை சீகன்பால்கு எழுதி அதை அரசரின் தங்கைக்குக் காணிக்கையாக்கினார். இந்தச் சிறு நூல் 1710ஆம் ஆண்டு பேப்சிக் என்ற நகரில் வெளியிடப்பட்டது.

கப்பல் இலங்கைக்கு அருகாமையில் வந்தபோது இவர்களின் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டது. கப்பலில் பயணம் செய்தவர்கள் எல்லோரும் தங்களது இறுதிக் கட்டத்திற்குள் வந்துவிட்டதாக அலறினார்கள். ஆனால் நற்செய்தித் தொண்டர்களோ 'உன் வழிகளிலெல்லாம் உன்னைப் பாது

காக்கும்படி அவர் உன்னைக் குறித்து தம் தூதருக்குக் கட்டளையிடுவார்' (சங். 91:11) என்ற வார்த்தையில் நம்பிக்கை கொண்டவர்களாய்ப் புயற் காற்றினால் அசைக்கப்படாத குன்றுபோல இருந்தார்கள்.

நீண்ட நெடும் கடல் பயணத்தை மரணத்தின் போதனைக்கூடம் (Academy of Death) என்று சீகன் பால்கு வர்ணித்தார். கப்பல் பயணத்தை விசுவாசத் தேர்வு என்றும் அவர் கூறினார். அதே நேரத்தில் அதிசயங்களை எல்லா இடங்களிலும் நடப்பிக்கும் அதிசயநாதரின் அற்புதம் செய்யும் ஆற்றலையும் கடற் பயணம் வெளிப்படுத்தினது என்றார். 'மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன். தேவரீர் என்னோடு கூட இருக்கின்றீர். உமது கோலும், தடியும் என்னைத் தேற்றும்' (சங். 23:4) என்ற சங்கீதக்காரரின் விசுவாச வார்த்தைகள் நற்செய்தித் தொண்டர்களின் வாழ்க்கையில் உண்மையாயிருந்தது.

1706ஆம் ஆண்டு ஜூலை 9ஆம் நாள் 'சோபியா ஹெட்விகா' என்ற நற்செய்தித் தொண்டர்களை ஏற்றி வந்த கப்பல் தரங்கம்பாடிக்கு எதிரே வந்து நின்றபோது, 'இம்மட்டும் கர்த்தர் எங்களைக் காத்தார்' என்று உவகையும், உணர்ச்சியும் பொங்க சீகன்பால்கு கூறினார்.

# 4. தமிழகத்தில் வரவேற்பு

கப்பல் கடற்கரைக்குச் சற்றுத் தொலைவில் நங்கூரம் போடப்பட்டு நிறுத்தப்பட்டது. சிறு படகுகள் மூலம் பயணிகள் கடற்கரைக்கு கொண்டுவரப்பட்டார்கள். ஆனால் சீகன்பால்குவையும், புளுச்சோவையும் அழைத்துவர எவரும் படகுகள் அனுப்பவில்லை. வந்த படகையும் கப்பல் தலைவன் திரும்பி அனுப்பிவிட்டு, நற்செய்தித் தொண்டர்கள் இருவரையும் எவரும் கரைக்கு எடுத்துச் செல்லக் கூடாது என்று மறுத்துவிட்டான். காரணம் கப்பல் தலைவன் ஒரு வாலிபப் பெண்ணைக் கப்பலில் துன்புறுத்த நினைத்த போது நற்செய்தித் தொண்டர்கள் அத்துன்பத்தினின்று அப் பெண்ணைக் காப்பாற்றியதால் கப்பல் தலைவனின் கோபத்திற் குள்ளானார்கள்.

மூன்று முழு நாட்கள் நற்செய்தித் தொண்டர்கள் கப்பலி லேயே இருக்கவேண்டியதாயிற்று. நற்செய்தித் தொண்டர் களின் உள்ளம் 'தழலது கண்ட மெழுகுபோல' உருகிடத் துவங்கினது. இதன் பின்னர் அருகில் நங்கூரம் போடப்பட்டு இருந்த மற்றொரு கப்பலின் அதிகாரி இவர்கள்பால் இரக்கம் பாராட்டி தனது கப்பலுக்குச் சொந்தமான படகு ஒன்றை அனுப்பி இவ்விருவரும் கரைசேர உதவினான். இவ்விருவரும் இந்திய மண்ணில் காலடி எடுத்தவைத்த நன்னாள் ஜூலை 9ஆம் நாள். இந்தப் பொன்னாள் இந்திய சரித்திரத்தில் பொறிக்கப்படவேண்டிய நாள். இந்தியாவில் காலடிவைத்தபோது சீகன்பால்குவிற்கு வயது 24.

கரைசேர்ந்த நற்செய்தித் தொண்டர்கள் நகருக்குள் செல்ல ஆளுநர் ஜே. சி. ஹசியுஸின் (J. C. Hassius) உத்தர விற்காகக் கோட்டை வாயிலில் சுடும் மணலில் கொளுத்தும் வெயிலில் காலை முதல் மாலை வரை காத்து நின்றார்கள்.

மாலையில் ஆளுநர் தனது பரிவாரங்களோடு வந்தார். நற்செய்தித்தொண்டர்கள் டென்மார்க் நாட்டு அரசரிடமிருந்து பெற்றுவந்த கடிதங்களைப் பார்வையிட்டார். இவர்களது வருகை ஆளுநருக்கும்-அவரைச் சார்ந்தவர்களுக்கும் கொஞ்சமும் பிடிக்கவில்லை. இவர்களது வருகையால் தங்களது உண்மை நிலை அம்பலமாகிவிடும் என்று பயந்தார்கள்.

ஆயினும் மன்னரே கடிதம் எழுதிக் கொடுத்து இருந்ததால் இவர்களது வருகை தனக்கு மிகுந்த வேதனையையும் எரிச்சலையும் மூட்டியுள்ளது என்பதை வெளிக்காட்டாமல் மறைமுகமாக அதைக்காட்டி, எந்தப் பதிலையும் இவர்களுக்கு சொல்லாமல் இருந்துவிட நினைத்தார். ஆனால் அரசரின் முத்திரை இவர்கள் கொடுத்த கடிதத்தில் இருந்ததால் தயங்கி டென்மார்க் பிள்ளைகளுக்காக நடத்தப்பட்ட பள்ளியில் ஏதாவது வேலை கொடுக்கத் தீர்மானித்தார். அப்போது அந்தப் பள்ளியில் ஆசிரியர்கள் யாரும் இல்லாததால் இந்த முடிவிற்கு வந்தார்.

இவ்விருவரும் எங்கு தங்குவது என்று எவரும் அக்கறை காட்டவில்லை. ஆளுநரிடம் இதுபற்றி மன்றாடி வேண்டியும் அவர் இவர்களின் வேண்டுகோளுக்குச் செவிமடுக்கவே இல்லை. இந்தியாவில் இவர்கள் இருவரும் எதிர்பார்ப்புக்கு எதிராகவே எல்லாம் நடந்தன. முன்பின் அறியாத மக்கள், முன்பின் தெரியாத மொழி—இப்படிப்பட்ட இக்கட்டான நிலையில் கொழுகொம்பற்ற கொடிபோல் இருவரும் கலங்கித் தவித்தார்கள். இதற்கிடையில் இவர்களை டென்மார்க் அரசனால் அனுப்பப்பட்ட உளவாளிகள் என்று கூறி ஏசவும், பேசவும் செய்தார்கள். 'எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு' என்ற கருத்திற்கு இணங்க முன்வைத்த காலைப் பின் வைக்கவே இல்லை. இந்நிலையில் ஜெர்மன் மொழி பேசக்கூடிய சாதாரண அதிகாரி அட்ரூப் (Attrup) என்பவர் இவர்கள்மீது இரக்கம்காட்டி தனது மாமனார் பால்கன் வீட்டில் இரவு தங்க ஒழுங்கு செய்தார். அதன்பின் பால்கன் இவர்களைப் போர்த்துக்கீசியர்கள் தங்கும் இடத்தில் தங்கவைத்தார். இவர்கள் வாழ்ந்த

பகுதி ஏழைகளும், இந்திய அடிமைகளும், ஐரோப்பியர் களால் புறக்கணிக்கப்பட்டவர்களும், இனக்கலப்பு செய்த வர்களும் வாழ்ந்த வசதியில்லாத பகுதியாகும். இவர்கள் அதிகாரத்தால் புறக்கணிக்கப்பட்டார்கள். ஆனால் கடவு ளால் கைவிடப்படவில்லை. முதலியப்பா என்ற 20 வயதுடைய தமிழ் இளைஞன் இவர்களுக்கு வேலைக்காரனாகிப் பெரிதும் உதவிசெய்தான். ஆயினும் இவன் தமிழ் மொழி மட்டும் பேசுபவனாக இருந்ததால் இவர்களோடு தொடர்புகொள்ளவோ விளக்கிச்சொல்லவோ முடியாமல் இருந்தான்.

இந்நிலையில் பால்கன் என்பவரின் ஆலோசனையின்பேரில் போர்த்துக்கீசிய மொழியைக் கற்றார்கள். ஏனென்றால் இம்மொழிதான் ஐரோப்பியர்களுக்கும் இந்தியர்களுக்கும் தொடர்பை ஏற்படுத்தும் மொழியாக அப்போது இருந்தது.

இந்தியாவில் நற்செய்திப்பணி செய்ய வந்த ரோமன் கத்தோலிக்கச் சபையின் ஊழியர்கள் தங்கள் நாட்டு அரசாங்க அதிகாரிகளின் ஆதரவையும், உதவியையும் தங்களது ஊழியத்திற்கு ஆதரவாகப் பெற்று வந்தார்கள். ஆனால் சீர்திருத்த சபையின் நற்செய்தித் தொண்டர்கள் அரசாங்க அதிகாரிகளாலும் தங்கள் சொந்த கண்டத்தாரா லும் பெரும் இன்னல்களுக்குள் ஆக்கப்பட்டார்கள் என்பதை வேதனையோடு குறிப்பிடவேண்டியிருக்கின்றது.

# 5. தமிழ்மொழியைக் கற்றலும்— தமிழுக்கு ஆற்றிய தொண்டும்

தமிழ்மொழியைக் கற்றாலே ஒழிய தமிழ் மக்களுக்கு நற்செய்தியைப் பரப்ப இயலாது என்பதை சீகன்பால்கு உணர்ந்தார். தமிழைக் கற்கவும் தமிழ் ஓலைச்சுவடிகளை பொருள்கொடுத்து வாங்கக்கூடிய வசதியும் அவருக்கு இல்லை. எனவே திண்ணைப் பள்ளியில் தமிழைக் கற்கவே அவருக்கு வாய்ப்பு கிட்டியது.

சிறு பிள்ளைகள் அமர்வதைப்போன்று மணலில் உட்கார்ந்து அச்சிறுவர்களுடன் சேர்ந்து மணலில் கைவிரலால் எழுத்துக்களைக் கொஞ்சமும் வெட்கமோ அல்லது கூச்சமோ இன்றி எழுதிப் பழகினார். சோர்ந்தவனை நன்மொழி சொல்லி ஆதரிப்பதற்குக் கர்த்தராகிய ஆண்டவர் பாடங் கேட்டு சொல்பவனின் நாவை எனக்குத் தந்தார் என்ற வார்த்தைகளின்படி தமிழை இவர் கற்றாலும் தமிழ் சொற்களின் பொருளை விளங்கிக்கொள்ள சிரமப்பட்டார். எனவே தமிழ் சொற்களின் பொருளை விளக்கிக்காட்ட தமிழ் மொழியோடு தமக்குத் தெரிந்த வெளிநாட்டு மொழி ஒன்றை கற்ற ஒருவருக்காக ஏங்கி இருந்தார்.

தமிழ் மொழியோடு சிறிது போர்த்துக்கீசிய மொழியையும் கற்றிருந்த அழகப்பன் என்பவரைக் குறித்து கேள்விப்பட்டு 1706ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அவரை தமக்கு தமிழ்மொழியைக் கற்றுக்கொடுக்கவும் தமிழ் சொற்களின் பொருளை விளக்கிக்காட்டவும் கேட்டுக்கொண்டார்.

போர்த்துக்கீசிய மொழியை சீகன்பால்கு ஏற்கெனவே கற்றுக்கொண்டார் என்பதை மேலே கண்டோம். இதனால் ஓரளவு போர்த்துக்கீசிய மொழிபேசும் அழகப்பனைக் கொண்டு

தமிழ் சொற்களின் பொருளை அறிந்துகொண்டார். சீகன் பால்கு புளுச்சோவைவிட மொழியைக் கற்றுக்கொள்ளும் வரம்பெற்றவர். இதனால் சீகன்பால்கு எட்டே மாதங் களில் தமிழைப் படிக்கவும் பிறருடன் பேசவும் கற்றுக் கொண்டார். 'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்' என்ற குறளுக்கேற்ப புளுச்சோ போர்த்துக்கீசியரிடையே பணியாற்றவும் தமிழ் தெரிந்த சீகன்பால்கு தமிழ் மக்களிடையே பணியாற்றவும் தங்களுக் குள் ஒப்பந்தம் செய்துகொண்டு அவ்வாறே செய்து வந்தார்கள்.

நற்செய்தித் தொண்டர்களான சீகன்பால்குவும், புளுச்சோவும், மூன்று ஆண்டுகள் மட்டுமே இந்தியாவில் பணிபுரிய அரசால் அனுமதிபெற்று வந்தார்கள். ஆனால் தமிழ் மொழியைப் படித்து அதன்பின் பணி செய்ய அதிக காலம் செல்லுமென்று சீகன்பால்கு அறிந்து இன்னும் சில ஆண்டு களை இந்தியாவிலிருந்துவிட்டுவர அரசரிடம் அனுமதி கேட்டு அதற்கு தாமும் தயாராக இருப்பதாக உறுதியளித் தார்.

மக்களைச் சந்தித்து அவர்களோடு உரையாடி பழகு தமிழை சீகன்பால்கு கற்றார். அப்பழகு தமிழிலேயே தமிழ் நூல்களை எழுதினார். இன்று அக்காலத்தில் நிலவிய பழகு தமிழை ஆய்வுசெய்ய அவரது நூல்கள் தமிழ் இலக்கிய உலகுக்கு இன்று பயன்படுகிறது (Now it is useful to Research of the contextual Tamil Terminalogy of that century).

அவர் உணவு உண்ணும்போதும் தமக்குமுன் தமிழ் மொழியை வாசிக்கச் செய்து தமிழ் உச்சரிப்பை நுட்பமாகக் கற்றுக்கொண்டார். தமது தாய்மொழியான ஜெர்மன் மொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கும் ஆற்றலை வெகு விரைவாகக் கற்றுத்தேர்ந்தார். தமிழைக் கற்ற இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக 20,000 வார்த்தைகள் அடங்கிய ஓர் தமிழ் அகராதியையும் தமிழ் இலக்கணத்தை யும் எழுதியதோடு ஜெர்மன் மொழியிலிருந்த பல நூல்

களைத் தமிழில் மொழிபெயர்க்கவும் ஆரம்பித்தார். ஜெர்மன் மொழியிலிருந்து இவர் முதன் முதலில் மொழி பெயர்த்த நூல் லுத்தரின் சிறிய ஞான உபதேசம் ஆகும். இதை 1707 ஜுன் 28ஆம் நாள் செய்துமுடித்தார்.

1708ஆம் ஆண்டில் சீகன்பால்கு தமிழகத்தில் தாம் சேகரித்த ஓலைச்சுவடிகளைத் தொகுத்து தமது நூலகத்தில் வைத்தார். அச்சுவடிகள் தற்போது லண்டனிலுள்ள பிரிட்டிஷ் பொருட்காட்சிசாலையிலுள்ளது. அதில் உலக நீதி என்கின்ற ஓலைச்சுவடியும் ஒன்று. அந்நூல் தீமையை விலக்கி நன்நடை பழகுவதை வலியுறுத்தும் செய்திக ளடங்கியது. சீகன்பால்க் இதனை ஜெர்மன் மொழியில் மொழிபெயர்த்தார். அவரது நோக்கம் தமிழக மக்களின் வாழ்க்கைநெறி எப்படிப்பட்டது என்பதை அறிந்து கொள் வதற்காகவே. சீகன்பால்க் பல இடங்களில் இந்நூலைப்பற்றிய செய்திகளை மக்களிடம் கேட்டபொழுது அதன் உண்மை யான பொருளை எவரும் உணர்ந்து கற்றதாகத் தெரியவில்லை எனக் குறிப்பிடுகிறார். இந்த ஜெர்மானிய மொழிபெயர்ப்புச் சுவடி டென்மார்க் நாட்டிலுள்ள கோப்பனுகன் அரசு பொருட்காட்சிசாலையில் உள்ளது. இது சீகன்பால்க்கினல் தாளில் எழுதப்பட்டு சிறு நூல் வடிவத்தில் 53 பக்கங்கள் உடையதாக உள்ளது. இந்நூலில் பாதிக்குமேல் விளக்க மான நீண்ட ஒரு முன்னுரையை எழுதி உள்ளார். அதில் உலக நீதி நூலின் சிறப்பைக் குறித்து விவாதிக்கிறார். அது காட்டும் சிறந்த ஒழுக்கநெறியைப் பாராட்டி எழுதுகிறார். சீகன்பால்குவுக்கு பொருளதவி செய்யும் ஐரோப்பிய நண்பர்களுக்கு இவர் இந்து மதத்தைக் குறித்து ஆய்வு செய்வதையும், தமிழ் மக்களுக்கு சிறந்த ஒழுக்கநெறி உண்டு என்பதை சீகன்பால்க் தெரிவிப்பதையும் விரும்ப வில்லை. அம் முன்னுரையில் எல்லா தமிழ் சொற்களையும் இயன்றவரையில் தம்மால் ஜெமானிய மொழியில் மொழி பெயர்க்க இயலும் என்றும் சில நேரங்களில் தம்மோடிருக் கும் தமிழ்க் கவிஞர் ஒருவர் உதவுவதாகவும் குறிப்பிடுகிறார். மேலும் தமது கடிதங்களில் தரங்கம்பாடியிலுள்ள கற்றறிந்த பிராமணர்களும் தமக்கு உதவுவதாக எழுது

கிறார். 17ஆம் நூற்றாண்டின் தமிழ்மொழி நடையின் அமைப்பை சீகன்பால்கின் கடிதங்களில் காணலாம்.

சீகன்பால்க் தமக்குமுன் ரோமன் சபை குருக்கள் எழுதிய ஓலைச்சுவடிகளை எல்லாம் வாசித்து அதில் நற்செய்திக்குப் புறம்பான கருத்துக்கள் இருந்ததைச் சுட்டிக் காட்டினார். இதனால் பெஸ்கி என்ற வீரமாமுனிவர் போன்ற ரோமன் சபையின் நற்செய்தித் தொண்டர்கள் சீகன்பால்குவை அதிகமாகக் குறைகூறியதோடு சீகன் பால்குவின் தமிழையும் இழிவாக இழித்துரைத்தார்கள். ஆயினும் மதுரை ஆதீன சேசு சபையைச் சார்ந்த வீரமா முனிவருக்கு பொருள் கொடுத்து ஓலைச்சுவடிகளை வாங்கவும், பொருள் செலவழித்து புலவர்களை அமர்த்தி தமிழ் மொழி யைக் கற்கவும் வாய்ப்புகள் இருந்தது. இத்தகைய வாய்ப்பு சீகன்பால்குவுக்குக் கிட்டவில்லையெனினும் தமிழ் மொழி யின் சிறப்பை தமிழர் நாகரீகத்தின் தொன்மையை ஐரோப்பிய நாடுகளுக்கு அறிமுகப்படுத்தியவர் சீகன்பால்க் ஆவார். இதற்கெல்லாம் சீகன்பால்க் கொஞ்சமும் கவலைப் படாமல் தமது பணியை அதிக ஆர்வத்துடனும் அக்கறை யுடனும் தமிழகத்திற்கு செய்து வந்தார்.

சரியான முறையில் தமிழ்மொழியைக் கற்றதுபற்றி சீகன்பால்க்:

'எந்தெந்த தமிழ் நூல்கள் என் சொல்லையும் உச்சரிப் பையும் தமிழ்மயமாக்குமோ அவைகளையே நான் மூன்று ஆண்டுகளாகப் படித்தேன். நான் தமிழ்மொழியின் நூல் களைப் படிக்கத் துவங்கியதிலிருந்து ஜெர்மன் லத்தீன் மொழியில் எழுதப்பட்ட நூல்களைப் படிப்பதை நிறுத்தி னேன். தமிழரோடு சேர்ந்து தமிழ் நூல்களையே படித்தேன். இதனால் தமிழை தாய்மொழிபோல் என்னால் பேசவும் பல நூல்களைத் தமிழில் எழுதவும் முடிந்தது' என்று குறிப் பிட்டிருக்கின்றார்.

சீகன்பால்க் உருவாக்கிய தமிழ் அகராதி நான்கு ஆண்டு களுக்குப் பின் 40,000 வார்த்தைகளுடன் காணப்பட்டது

இதோடு செய்யுள் அகராதி ஒன்றையும் உருவாக்கி அதில் 17000 சொற்களைத் தொகுத்தார். குறிப்பாக இதில் விளங்கிக்கொள்ள கடினமான சொற்களை அதிகமாக சேர்த்து தொகுத்தார். இந்த அகராதியைக் குறித்து 'இது எனக்கு நான் படிக்கும்போதும் அருளுரை ஆற்றும்போதும் ஒருவேளை அதிகமாகப் பயன்படாமல் போனாலும், கற்றறிந்த கவிஞருடனும் தமிழ் அறிஞருடனும் நான் பேசும் போது எனக்கு பயன்படும். ஏனென்றால் இவர்கள் பெரும் பாலும் செய்யுளையே அதிகமாக சொல்லி செய்யுள் நடையி லேயே உரையாடுகின்றார்கள். எனவே அவர்களின் கூற்றை அறிந்து தக்க பதிலளிக்க இந்த அகராதி எனக்கு மட்டு மல்லாது நற்செய்தி தொண்டர் எவராயினும் அவர் சமய உரையாடலில் ஈடுபடும்போது இது பேருதவியாக இருக்கும்.'

சீகன்பால்க் தமிழை மட்டுமல்லாது தமிழ் மக்களையும் தமிழர் கலாச்சாரத்தையும் பெரிதும் பாராட்டினார். இது பற்றி அவர் கூறும்போது 'தமிழர் பெரும்பான்மையானவர் கள். இவர்கள் இந்துக்கள் என்று அழைக்கப்படுகின்றார்கள். எழுத்தாணியால் பனை ஓலையில் அழகாக தமிழ் எழுத்துக்களை எழுதும் திறமைகொண்டவர்கள்.

மிகப் பழமையான மொழிகளில் தமிழும் ஒன்று. தமிழர் எல்லா கலைகளிலும் சிறந்தவர்கள். இவர்கள் எழுதாத நூல் இல்லை. வியாபாரத்திலும் சித்திரக்கலையிலும் கைதேர்ந்தவர்கள். தமிழர் யார் என்று தெரியாதவர்கூட அவர்கள் எழுதிய நூல்களைப் படித்து அவர்களின் சிறப்பை உணர்ந்துகொள்ளமுடியும்.

ஐரோப்பியக் கிறிஸ்தவர்கள் தமிழரின் வெளித் தோற்றத்தை மட்டும் கண்டு தமிழரை அஞ்ஞானிகள் நாகரீகம் இல்லாதவர்கள் என்று நினைத்தார்கள். தமிழர் களைப்போல தமிழ் மொழியும் அற்பமானதென்றும், தமிழ ரின் வாழ்க்கை தரங்கெட்டதென்றும் நானும் முதலில் எண்ணிவிட்டேன். ஆனால் தமிழ் மொழியைப் பயின்று

தமிழரோடு பழகி தமிழ் இலக்கியங்களை ஆராய்ந்த பின்னர் என் எண்ணத்தை முற்றிலும் மாற்றிக்கொண்டேன்.

தமிழ் இலக்கண விதிகள் சிறந்த முறையில் அமைக்கப் பட்டுள்ளன. நாட்டை ஆட்சி செய்வதற்குரிய சட்டங்களும் நீதிநெறி விளக்க நூல்களும் மக்களின் வாழ்க்கையைப் பாது காக்கின்றன. மனோதத்துவ இறையியல் பொருள்கள்பற்றி இவர்கள் எழுதியிருப்பவைகள் ஆச்சரியப்படும்படி இருக் கின்றன. இறையியலை ஆழமாகவும் உயர்ந்த முறையிலும் ஆராய்ச்சி செய்திருக்கின்றார்கள்.'

தமிழையும் தமிழர் நாகரீகத்தையும் பாராட்டிய சீகன் பால்க் மக்கள் பல தெய்வங்களை வணங்குவதைக் கண்டு வருந்தினர். Bibliotheca Tamulica என்ற நூல் மிஷனெரிகள் எழுதிய, சேகரித்த நூல்களைப்பற்றிய விவரத்தை உள்ளடக் கிய ஒரு நூல். இது ஒரு ஜெர்மன் மிஷனெரியால் 1731ஆம் ஆண்டு தொகுக்கப்பட்டது. Bibliotheca Tamulica என்ற நூலடங்கில், சீகன்பால்கு சேகரித்த நூல்களின் பட்டியல் காணப்படுகின்றது. சீகன்பால்கு சேகரித்த மொத்த நூல்கள் 112. இவைகள் அனைத்தும் இந்து சமய கலாச்சாரத்தைப் பற்றியவைகளாகும். இத்தொகுப்புக்குமுன் ஓர் முன்னுரை காணப்படுகிறது அதில்:

'மிகுந்த துன்பங்களின் நடுவில் பணத் தேவைகள் இருந்த போது சீகன்பால்கு நூல்களைச் சேகரித்தார். அவைகள் சரியாகப் பத்திரப்படுத்தப்பட்டு வைக்கப்படாதபடியினால் அவரது நூலகங்களில் காணப்பட்ட பல நூல்கள் அழிந்து விட்டன. எங்களது தற்போதைய பள்ளி ஆசிரியர் மாணவ ராக இருந்தபோது' குளிர் காய்வதற்கென்று ஓலைச்சுவடிகள் அடங்கிய பெட்டி ஒன்றிலிருந்து சுவடிகள் சிலவற்றை எடுத்து எரித்தார். அச்சுவடிகள் சீகன்பால்க் சேகரித்து வைத்தவைக ளாகும்.

சீகன்பால்க் சேகரித்த சுவடிகள் சிலவற்றை ஈண்டு காண்போம்:

தொல்காப்பியம், காரிகை, நன்னூல், திவாகரம், நிகண்டு திருவாசகம், திருவள்ளுவர், திருவள்ளுவருரை, சிந்தாமணி பாரதம், பாரத உரை, கந்தபுராண உரை, அரிச் சந்திரன் கதை, அரிச்சந்திர புராணம், வேதாளக் கதை, பலஞானச்சுவடி, சினேந்திரமாலை, பாரத அம்மனார், கலிங்கத்துப்பரணி, அலங்கார உதாரணம், திருப்புகழ், வாதூர்ப் புராணம், கெர்மபரனுதருலா, அபிராமியந்தாதி• ஞானப் பொஸ்தகம், வருணன்வுலாதித்தன், மடல், கோயில் கலம்பகம், தேவாரம், பஞ்சதந்திரக் கதை, நாகபாசப் படலம், வள்ளியம்மை வெண்பா, சிதம்பரமாலை, வெங்கிட மாலை, நீலி நாடகம், வள்ளியம்மனார், திருவாமுருலா, குமாரப்பிள்ளை திருநாமம், இரஞ்சியனம்மனார், கும்பகாரனப் படலம், அனுமரம்மனார், ஆசாசோவை, காயாலேராணர் உலா, கீழ்வளூர்க் கலம்பகம், நீதிசாரம், தியான வெண்பா, மனைவழி சாஸ்திரம், உத்திரபோதகம், சிவபாக்கியம், குமாரர் பேரில் வணக்கம், தத்துவ விளக்கம், நளன் கதை, வாணல் கோவை, அம்பிகை மாலை, பரம ராசிய மாலை, குசலவன் கதை சம்பந்த பிள்ளைத் திருநாமம் ஆகியவைக ளாகும்.

மேற்கூறிய தமிழ்ச் சுவடிகளைச் சேகரித்ததின் வழியாக தமிழ் இலக்கியத்தையும் தமிழரின் பழக்க வழக்கங்களையும் அறிய முயற்சித்த சீகன்பால்கு மேற்கொண்ட ஈடுபாடு நோக்கத்தக்கது.

# 6. நற்செய்தித் தொண்டர்கள் அடைந்த இன்னல்கள்

டென்மார்க் நாட்டு வணிகக் கழகத்தினரும் ஏனைய ஐரோப்பியர்களும் பொருள் சம்பாதிப்பதையே முக்கியக் குறிக்கோளாகக்கொண்டு ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து, குடித்து வெறித்து வாழ்ந்தனர். இதனால் நற்செய்தித் தொண்டர்கள் வந்து சமயத்தைப் போதித்தால் தங்கள் பிழைப்பையும், வாழ்க்கையையும் பெரிதும் பாதித்துவிடும் என அஞ்சி இவர்களின் வருகையை மறைமுகமாக ஆரம்ப முதலே எதிர்க்கலானார்கள்.

தரங்கையில் வாழ்ந்த இரு டென்மார்க் நாட்டு குருக்கள் நற்செய்தித் தொண்டர்களின் வருகை தங்களது அதிகாரத்தையும் சலுகைகளையும் பாதித்துவிடும் என்று அஞ்சினாலும் சீகன் பால்குவையும், புளுச்சோவையும் சீயோன் ஆலயத்தில் ஆராதனைகள் நடத்த சில சமயங்களில் அனுமதித்தார்கள். தரங்கையிலிருந்து ரோமன் சபையின் குருவும் தனக்கு எதிரான கொள்கையுடையவர்கள் எனக் கருதி நற்செய்தி தொண்டர்களுக்குப் பல வகையில் தொல்லை கொடுத்தார். வைதீக இந்துக்களும் சீகன்பால்குவுக்குத் தொல்லை கொடுத்தார்கள். சீகன்பால்குவுக்கு இரண்டு ஆண்டுகளாக தமிழ் மொழியையும், இந்து சமயநெறியையும் சொல்லிக் கொடுத்த ஆசிரியரை ஊரைவிட்டே துரத்தினார்கள். சீகன்பால்குவின் அறிவு, திறமை, வெற்றிக்கு இந்த ஆசிரியரே காரணம் என்று இவர்கள் நினைத்ததால் அவ்வாறு செய்தார்கள்.

### பொருளாதாரக் குறைவு

தரங்கை ஊழியம் புதிதாக ஆரம்பிக்கப்பட்டதால் அதை சிறப்பாக நடத்தத் திட்டமிட்டு அதுபற்றித் தமக்கு

எழுதி அனுப்பும்படி அரசன் சொல்லி இருந்தார். அப்போது கடல் பயணம் மட்டுமே இருந்ததால் அரசருக்குப் பணியைப் பற்றிய செய்திகள் கிடைப்பதில் காலதாமதம் ஏற்பட்டதால் அரசனின் உதவி கிடைப்பதும் தடைப்பட்டது.

ஆயினும் நற்செய்தித் தொண்டர்கள் தங்களது ஊழியத்தின் ஆரம்பத்திலேயே அனாதைப் பிள்ளைகளைத் தத்தெடுத்து அவர்கள் தங்கியிருக்க ஓர் அனாதை விடுதியையும் துவங்கி அவர்களைப் பராமரித்து, வந்ததோடு அவர்கள் படிக்க ஓர் கல்விக் கூடத்தையும் ஏற்படுத்தி பிள்ளைகளின் எல்லாத் தேவைகளையும் சந்தித்து வந்தார்கள்.

ஓர் ஆலயத்தையும் கட்டி ஏழை கிறிஸ்தவர்களுக்கும் மற்றவர்களுக்கும் உதவி செய்ததோடு ஊழியத்திற்காகப் பலரை நியமித்து அவர்களுக்கு ஊதியமும் கொடுத்து வந்தார்கள். இத்தனை செலவுகளையும் சமாளிப்பதற்கு அவர்களிடம் பணம் இல்லாமல் போனபோது இவர்கள் பொருளாதாரச் சிக்கலுக்குள்ளாகி அவதிப்பட்டார்கள். இவர்கள் இருவருக்கும் டென்மார்க் அரசர் வருட ஊதியமாக ரூ. 300 மட்டுமே கொடுத்தார். அது தவிர இவர்களுக்கு வேறு வகையில் பணம் வரவில்லை. இப்படிப்பட்ட இக்கட்டான நிலையில் தரங்கம்பாடியிலிருந்த டென்மார்க் வணிகக் குழுவினர் இவர்களுக்கு ஆரம்ப முதலே எதிர்ப்பாகி விட்டதால் எவ்வித உதவியும் செய்ய மறுத்துவிட்டார்கள். அதோடு தரங்கையிலிருந்த எந்த ஐரோப்பியரிடமும் எவ்வித உதவியும் வாங்கக்கூடாதபடி தடை செய்யப்பட்டிருந்தார்கள். இரகசியமாக ஒரு சிலர் இவர்களுக்கு உதவி செய்தார்கள். அதை வைத்து இவர்கள் எப்படியோ சமாளித்தார்கள். ஒரு சிலர் முன் வந்து இவர்களுக்கு கடன் உதவி செய்து டென்மார்க்கிலிருந்து பணம் வந்தபின் வாங்கிக் கொள்வதாகக் கடன் தந்து உதவினார்கள்.

தாங்கள் அடைந்த இன்னல்களைப்பற்றி சீகன்பால்கு கீழ்கண்டவாறு குறிப்பிடுகின்றார்.

'தரங்கை அரசு அதிகாரிகளின் தொல்லையும் ஐரோப்பிய கிறிஸ்தவர்களின் எதிர்ப்பும் கணக்கில் அடங்காது. எங்களது நற்செய்தித் தொண்டை எப்படியாவது கலைத்துவிட வேண்டும் எனத் திட்டமிட்டு முயற்சித்தார்கள். இவர்கள் பொறுமையினால் இழைத்த இன்னல்களைக் கண்ணுற்ற கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள்கூட வேதனைப்பட்டார்கள். நாங்கள் உண்மையை எவ்வளவுக்கு எவ்வளவு கடைபிடித்தோமோ அவ்வளவுக்கு துன்பமும் அதிகப்பட்டது.

**பணம் கடலில் மூழ்கியது**

தங்கள் திருப்பணிக்காக வெளிநாட்டிலிருந்து கப்பல் எப்போது வரும் வரும் என்று எதிர்பார்த்திருந்த நற்செய்தித் தொண்டர்களின் மகிழ்ச்சி பெருக 1708ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதலாம் தேதி தரங்கை துறைமுகத்திற்கு ஓர் கப்பல் வந்தது. இந்தக் கப்பலைக் கண்ட இவர்கள் மனப் பாரம் நீங்கி ஆர்வத்தால் துள்ளிக் குதித்தார்கள். டென்மார்க் நாட்டு அரசரும் மக்களும் தரங்கைத் திருப் பணிக்காக ரூ. 3000 சேகரித்து அதை இரு கப்பல்களில் அனுப்பியிருந்தார்கள். தரங்கைக்கு வந்த கப்பலில் முதல் பகுதி அனுப்பப்பட்டு இருந்தது. ஆனால் கப்பல் மாலுமி குடித்து வெறித்த நிலையில் பணப் பெட்டியைப் பத்திரமாக படகில் ஏற்றத் தவறினான். பணப் பெட்டியைக் கப்பலில் இருந்து படகில் ஏற்றும்போது படகு அலையில் அடிபட்டு நகரவே பணப் பெட்டி தண்ணீருக்குள் மூழ்கியது. இதைத் தேடுவதில் ஏழு கப்பலாட்களும் இறந்துபோனார்கள்.

நற்செய்தித் தொண்டர்கள் இலவு காத்த கிளிபோல் ஆனார்கள். அவர்களுக்கும் அவர்களைச் சார்ந்திருந்த கிறிஸ்தவ மக்களுக்கும் ஒரு பெரிய அடியாக இது அமைந்தது. அவர்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி துக்கமாக மாறினது. கவலையும் கண்ணீரும் அவர்களது உள்ளத்தையும் முகத்தையும் வாட்டியது. சீகன்பால்க் இதுபற்றிஆளுநர் ஹசியசிடம் சொல்லியபோது அவர் இதுபற்றி, எவ்வித அக்கறையும் காட்டவில்லை. எந்த உதவியும் செய்யவில்லை. இதனால்

இதைக் கண்ட அனைவரும் இனி நற்செய்திப்பணி தொடராது, செய்த பணியும் இல்லாமல் போகும் என்று கூறத் துவங்கினார்கள்.

பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும் என்பது போல பாதிப் பணம் கடலிலே மூழ்கி விட்டாலும் அடுத்த கப்பலில் வரும் மீதிப் பணமாவது தங்களுக்குக் கிடைக்கும் என்று நம்பிக்கொண்டிருந்த இவர்களுக்கு அப்பாதிப் பணத்தைக் கொண்டுவந்த கப்பல் பயணத்தின் ஆரம்பத்திலேயே ஓர் பாறையில் மோதி சேதத்திற்குள்ளானதால் திரும்பவும் அப்பணம் தாய்நாட்டிற்கே சென்றுவிட்டது என்ற செய்தி, இவர்களை ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தியது. எப்படி ஆறுதல் அடைவது என்று தெரியாமல் கவலை இவர்களைக் கௌவிக் கொண்ட நிலையில் 'கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு அவர் உன்னை ஆதரிப்பார். நீதிமானை ஒருபோதும் தள்ளாட வொட்டார்' (சங். 55:22) என்ற வார்த்தைகள் இவர்களது வாழ்க்கையின் அனுபவமானது. இந்நிலையில் தஞ்சையிலிருந்து ரோமன் சபையைச் சேர்ந்த சிலர் இவர்களிடம் வந்து, ரோமன் சபை தங்களை அதிகம் துன்புறுத்துவதாகவும், கோவிலும் குருவும் இன்றி தாங்கள் அவதிப்படுவதாகவும் கூறி இதனால் தாங்கள் லுத்தரன் சபையில் சேர விரும்புவதாகவும் இருமுறை வற்புறுத்தியும் சீகன்பால்க் இந்த இக்கட்டான நிலையை மனதில் கொண்டு அவர்களின் விண்ணப்பத்திற்கு விருப்பம் தெரிவிக்காமலேயே விட்டுவிட்டார்.

விதவைக்கு நியாயம்

தரங்கையில் வாழ்ந்த டென்மார்க்கு நாட்டு அதிகாரிகளின் அட்டூழியங்களும், அநீதியான தீர்ப்புகளும் சகிக்க முடியாதவைகளாக இருந்தன. இந்த அநியாயம் நற்செய்தித் தொண்டர்களையும் விட்டுவைக்கவில்லை. நற்செய்தித் தொண்டர்களின் வாழ்விலும் ஊடுருவ ஆரம்பித்தது. சீகன்பால்க் டென்மார்க் மன்னனுக்கு அபயமிட்டு நேரடியாகத் தனது நியாயத்தை எடுத்துக்கூறவேண்டிய அளவிற்கு அநியாயம் தலைவிரித்தாடியது.

தன்னையும் தம்மால் கிறிஸ்தவர்களாக்கப்பட்டவர்களை யும் கிறிஸ்தவர்களாக விருப்பம் தெரிவித்து அதற்கான உபதேசம் பெற்றவர்களையும் அதிகாரிகள் தொல்லை கொடுத்து அதன்மூலம் நற்செய்திப் பணிக்கு எப்போதும் இன்னல் அளித்துக்கொண்டே வந்தார்கள். கிறிஸ்தவர்க ளானவர்களில் பெரும்பாலோர் ஏழைகளும் ஐரோப்பியர் களின் வேலையாட்களுமாக இருந்ததினால் அவர்களை ஒடுக்கு வது அதிகாரிகளுக்கு எளிதாக இருந்தது. திருமுழுக்கு பெற்ற தங்கள் வேலையாட்களை ஐரோப்பியர் தங்கள் விருப்பம் போல பல இடங்களுக்கு விற்று சபையின் அங்கத்தினர்களைக் குறைத்தார்கள். அதோடு திருமுழுக்கு பெற வருகிறவர்களை யும் தடுத்து நிறுத்தி தொல்லை கொடுத்தார்கள். சீகன் பால்கு இதில் தலையிட்டபோது அவரையும் அதிகமாய்ப் பகைத்து வெறுத்தார்கள். இந்த அநியாயங்களைக் கண்டிக்க வும், நற்செய்திப் பணியையும் கிறிஸ்தவர்களையும் சேத மின்றிக் காக்கவும் டென்மார்க் நாட்டு அரசருக்கு அபயமிட் டார். இதனால் நற்செய்தித் தொண்டர்கள் இன்னும் பல இன்னல்களுக்குள்ளானார்கள்.

தாழ்மையும், பொறுமையும் சீகன்பால்குவின் சிறந்த குணங்களாக இருந்தபோதிலும் எளியவர்களின் உரிமையைக் காப்பதில் எப்போதும் ஆர்வமும் அஞ்சா நெஞ்சமும் உடையவராகவே இருந்தார். 'துன்பம் உறவரினும் செய்க துணிவு ஆற்றி இன்பம் பயக்கும் வினை.

ஓர் ஏழை விதவைத் தரங்கையிலிருந்த அதிகாரிகளிடம் தன் வழக்கை விசாரித்துத் தரவேண்டும் என்று பலமுறை முறையிட்டும் பயனில்லாமல் இறுதியில் அவள் சீகன்பால்கு விடம் வந்து தனது நிலையை எடுத்துரைத்தாள். தனக்காக அரசு அதிகாரிகளிடம் வாதாடும்படி கெஞ்சினாள். இவளது முறையீடு நியாயமானது என்று கண்ட சீகன்பால்கு அரசு அதிகாரி ஒருவரிடம் சென்று அதுபற்றி பேசியபோது அந்த அதிகாரி சீகன்பால்குவை அடிக்கவே வந்துவிட்டார். ஆனாலும் சீகன்பால்கு விடவில்லை.

அந்த விதவையின் வழக்கைப்பற்றி மேல் அதிகாரிக்கு ஒரு கடிதம் எழுதி அந்த விதவையைச் சரியான முறையில் விசாரிக்க வேண்டும் என்றும் அதற்காக தானே வந்து நிற்கத் தயார் என்றும் குறிப்பிட்டிருந்தார். சீகன்பால்க் எழுதிய இக்கடிதம் ஆளுநரிடம் சென்றபோது அக்கடிதத்தின் மொழிநடை தங்களைப் பெரிதும் பாதிப்பதாக இருக்கிறது என்று சதிசெய்து இதுவே தனது அதிகாரத்தைக் காண்பிக்கக்கூடிய சரியான தருணம் என்று தனக்குள்ளே திட்டமிட்டு சீகன்பால்குவை உடனடியாகக் கைதுசெய்யும்படி உத்தரவிட்டு ஆயுதந்தாங்கிய போர் வீரர்களை அனுப்பி வைத்தான்.

ஆளுநரின் ஆணையின்படி 1708ஆம் ஆண்டு நவம்பர் 19ஆம் நாள் போர் வீரர்கள் சீகன்பால்குவைக் கைது செய்யச் சென்றபோது அவர் இரவு உடையில் இருந்தார். இரவு உடையுடன் இருந்த அவரை போர் வீரன் அடித்து இழுத்த போது சீகன்பால்கு போர் வீரர்களிடம் தாம் உடுத்திக் கொண்டு ஜெபித்துவிட்டு வருவதாகக் கூறிச் சென்றார். 'என் ஆபத்துநாளில் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன், நீர் எனக்கு மறுமொழியருளுவீர்' (சங். 86:7), என்ற நம்பிக்கையில் 'கர்த்தாவே, நீரே என் அடைக்கலம், நான் ஒருக்காலும் வெட்கப்பட்டு போகாதபடி செய்யும்' (சங். 31:1) என்று சங்கீதக்காரன்போல அந்த இக்கட்டான சூழலில் சீகன்பால்கு கடவுளிடம் நீண்ட நேரம் மன்றாடினார். படைவீரர்களின் தலைவன் தனது பொறுமையை இழந்து அவரைக் கேவலமாகப் பேசி ஜெபிப்பதை விட்டுவிட்டு வரும்படி அதட்டி, அவரைப் பிடித்து இழுத்துக் கேவலப்படுத்தித் திரளான மக்கள் பார்க்க அவரை ஆளுநரிடம் அழைத்துச் சென்றான்.

'நீண்ட பொறுமையினால் பிரபுவையும் சம்மதிக்கப் பண்ணலாம். இனிய நாவு எலும்பையும் நொறுக்கும்' (நீதி. 25:15) என்றார் போல சீகன்பால்கு ஆளுநரைப் பார்த்த போது அவருக்கு வணக்கம் செலுத்தி தன்னை முறைப்படி விசாரிக்க தனது வாக்குமூலத்தைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டபோது அவன் மறுத்துவிட்டான். அவன் மறுத்துவிட்ட

தால் அதற்குப்பின் அவன் சீகன்பால்குவிடம் கேட்ட கேள்வி களுக்கு அவர் எந்த பதிலையும் கூறவில்லை. இதனால் அவன் அதிகக் கோபமடைந்து சீகன்பால்குவைச் சிறையிலிட உத்தர விட்டான்.

இதோடு நில்லாமல் தன்னிடம் பணியாற்றிய எல்லா ஊழியர்களையும் பறையடித்து அறிவிப்பு கொடுத்து அழைத்து இனி எவரும் ஜெர்மனிய நற்செய்தித் தொண்டர்களோடு பேசவும் அவர்களது ஆலயத்திற்குப் போகவும் கூடாது என்று உத்தரவிட்டான். எவ்வித பண உதவியும் செய்யக்கூடாது என்றும் ஆணை பிறப்பித்தான். இந்த அறிவிப்பு ஐரோப்பியர் களுக்காகக் கட்டப்பட்ட சீயோன் ஆலயத்திலும் ஞாயிறு வழி பாட்டின்போது அறிவிக்கப்பட்டது. அறிவிப்போடு நில்லா மல் இவர்கள் வாழ்ந்த வீடுகளை எல்லாம் சோதனையிட்டு அவர்களுக்கும் காவல் போட்டான். அதோடு இவர்களின் ஆலயத்திற்கு வந்த சபையாரைத் துரத்துவதற்குரிய ஒழுங்கை செய்தான். நற்செய்தித் தொண்டர்களுக்கும் தமிழ் கிறிஸ்தவர்களுக்கும் அவர்களின் எதிரிகள் என்ன கொடு மையை இழைத்தபோதும் அதைக் கேட்காமல் விட்டு விட்டார்கள். இக்கொடுமைகளைப்பற்றி:

> 'கொடிய உள்ளம் படைத்தவர்கள் எங்களுக்கு விரோதமாகச் சீறி சினம் கொள்கின்றார்கள். எங்கள் சபைகளையும் சிதறடிக்கின்றார்கள். இருந்தபோதிலும் எங்கள் நிலையைக் கண்ணுற்ற பலர் கண்ணீரை மாலை மாலையாக வடிக்கின்றார்கள். இடைவிடாமல் எங்க ளுக்காக வேண்டுதலும் செய்கின்றார்கள்'

என்று சீகன்பால்கு தனது கடிதத்தில் குறிப்பிட்டிருக் கின்றார்.

### சிறைவாசம்

சீகன்பால்கு 19–11–1708 முதல் 26–3–1709 வரை உள்ள 128 நாட்கள் சிறையிலே அடைக்கப்பட்டிருந்தார். சீகன்பால்குவுக்கு கொடுக்கப்பட்ட அறை மிகவும் வசதி குறைந்த அறை. அதுவும் சமையலறைக்கு அருகாமையி

விருந்ததால் அதிக வெப்பமாகவே எப்போதும் இருந்தது. வெயிலின் கொடுமை ஒரு பக்கம், சமையல் அறையின் நெருப்பு மறுபக்கம் அவரை வாட்டியது. சீகன்பால்கு கடும் சிறைவாசத்தை அனுபவித்தார். சிறையில் அல்லும் பகலும் சிறைவாசலைக் காத்தார்கள். சீகன்பால்கு செய்யக்கூடாத தவற்றை செய்துவிட்டதுபோல சீகன்பால்குவைக் கொடுமை யாக நடத்தினர்கள். சீகன்பால்குவைப் பார்க்கக்கூடா தென்றும் பேசக்கூடாதென்றும் கடுமையான கட்டளையிட் டிருந்தார்கள். சிறகு இழந்த பறவைபோல சிறைக்கூடத்தி லிருந்தாலும், ஜெபத்தாலும் ஞானப் பாட்டுகளினுலும் சிறைக்கூடத்தைச் சிறப்பித்து தானும் தாம் துவங்கிய நற் செய்தித் தொண்டும் தனது சிறையிருப்பினுல் எவ்வகையி லும் பாதிக்கப்பட்டுவிடுமே என்று பயந்தார். அதிகாரிகளின் தொல்லையினுல் திருமுழுக்குக்கு ஆயத்தப்படுபவர்கள் பயந்து ஓடிவிடுவார்களோ என்று தனக்குள் அஞ்சினர்.

பேனு, மை, காகிதம் எதுவும் சீகன்பால்குவுக்கு கொடுக் கப்படவில்லை. அவைகளைக் கொடுக்கக்கூடாது என்ற கட்டளையும் பிறப்பிக்கப்பட்டது. இதனுல் சீகன்பால்கு ஏற் கெனவே துவங்கி இருந்த புதிய ஏற்பாட்டு மொழி பெயர்ப்பை செய்யலாம் என்ற விருப்பம் நிறைவேறுமல் போனதுபற்றி அதிக வருத்தப்பட்டார். எனவே கடவுளின் ஊழியத்தைப்பற்றியே எப்போதும் சிந்தித்து ஆழ்ந்த தியா னத்தில் ஈடுபட்டிருந்தார். திருமறையில் பல அடியார்கள் உண்மைக்காகவும் விசுவாசத்திற்காகவும் பட்ட பாடுகளை எப்போதும் நினைத்து அதைப்பற்றி தியானித்து தனக்குள் மகிழ்ந்து ஆறுதலை அடைந்தார். ஆயினும் தனது தியானத் தில் உருவான சிந்தனைகளை எழுதிவைக்க தனக்கு வழி இல்லாமல் போய்விட்டதே என்று தனக்குள்ளேயே புழுங்கி னர்.

சீகன்பால்குவிற்குரிய உணவை புளுச்சோ கொடுத்து வந்தார். கொடுக்கப்பட்ட உணவு, பாத்திரம் அனைத்தும் பரிசோதனைக்குப் பின்னரே கொடுக்கப்பட்டது. புளுச்சோ சீகன்பால்குவிடம் பேச அனுமதிக்கப்படவுமில்லை! சீகன்

பால்கு சிறையிடப்பட்ட அறைக்கு பக்கத்தில் போகவும் அனுமதிக்கப்படவில்லை. புளுச்சோ தங்களது பழைய மொழி பெயர்ப்பாளர் அலப்பு (Aleppo) என்பவரின் உதவியால் தமிழ் மக்களிடையே ஊழியம் செய்கிறார் என்று அறிந்த அதிகாரிகள் அலப்பு என்பவருக்கு ஆசையை ஒரு புறம் காட்டியும், மறுபுறம் மிரட்டியும் அவரைப் புளுச்சோவிட மிருந்து பிரித்துவிட முற்பட்டார்கள். ஆனால் அலப்பு அதைப் பற்றி கோபத்தோடு பேசினார். இதைக் காரணமாய் வைத்து அலப்புவையும் சிறையிலடைத்தார்கள். சிறையில் அவர் உண்ணுவிரதம் இருந்ததால் தமிழ் மக்களிடையே தங்களுக்கு எதிர்ப்பும் கலவரமும் ஏற்படலாமென்று அஞ்சி அவரை விடுதலை செய்து விட்டார்கள்.

தரங்கம்பாடியிலிருந்த போர்த்துக்கீசிய சபையில் உபதேசியாராய் இருந்த யோகன்-டி-அல்மெடோ (Johann de Almedo) புளுச்சோவுடன் நட்புடனிருக்கின்றார் என்பதை அறிந்த அதிகாரிகள் அந்த நட்பையும் வெட்டி விட்டார்கள். இதோடு நில்லாமல் நற்செய்தித் தொண்டர்களுக்கு கிடைக்க வேண்டிய சம்பளத்தையும் கொடுக்காமல் அதை அரசாங்க கஜானாவில் செலுத்த உத்தரவிட்டார்கள். இதனால் உணவிற்கே சிரமப்பட வேண்டிய அவலநிலையை நற்செய்தித் தொண்டர்களுக்கு ஏற்படுத்தினார்கள். இவர்களோடு இவர்களைச் சார்ந்திருந்த அனாதைக் குழந்தைகள், பள்ளி மாணவர்கள், கிறிஸ்தவர்கள் அனைவரும் பெரும் இன்னல்களுக்குள்ளானார்கள்.

ஆழ்ந்த தியானத்தில் தம் நாட்களை சீகன்பால்கு செலவிட்டு வரும்போது ஒரு நாள் நள்ளிரவில் யோகன் ஜியார்ஜ் மன் என்பவரும் கிறிஸ்டியன் லூட்விக் என்பவருமான இரு படைவீரர்கள் சீகன்பால்கு தங்கியிருந்த சிறைக்கூடத்தின் கதவுக்கருகில் சென்று சீகன்பால்குவிற்கு காகிதம், எழுது கோல் ஆகியவற்றைக் கொடுத்தார்கள். இவர்கள் இருவரும் ஜெர்மானிய வழிபாட்டின் போது ஆலயப் பணியாளர்களாகப் பணியாற்றியவர்கள். அந்த நேரத்திலிருந்து சீகன்பால்கு பல அரிய செய்திகளைப்பற்றி எழுதத் துவங்

கிறுர். கடவுள் திருப்திபடும் கிறிஸ்தவனின் நிலை (The God Pleasing state of a Chiristian) என்பது பற்றியும், கடவுள் திருப்திபடும் போதிக்கும் பணி (God Pleasing Profession of Teaching) என்பது பற்றியும் எழுதினுர்.

இந்த இரு பிரதிகளிலும் தனது சிறையிருப்பின் அனுபவத்தை ஆங்காங்கே சுட்டிக்காட்டி தனக்கு சிறையில் ஏற்பட்ட இன்னல்களையும் இத்தருணத்தில் கடவுள்மீது தாம் வைத்திருந்த அசைக்க முடியாத நம்பிக்கையையும் பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றுர்.

சிறையிருப்பின் போது அவர் யாரிடமும் கோபமோ பகையோ கொண்டதில்லை. உன்னைப் பகைக்கிறவனிடத்தில் அன்புகூறு என்பதற்கிணங்க சிறையிலிருக்கும்போது வருடப் பிறப்பு நாளில் தனக்கு அநியாயத் தீர்ப்பிட்ட அதிகாரி களுக்கு புத்தாண்டு வாழ்த்துக் கடிதங்கள் எழுதி அனுப் பினுர். சீகன்பால்குவின் இப்பண்புகளைக் கண்ட ஆளுநர் சீகன்பால்குவிற்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று விரும்பி அவரிடம் கேட்டபோது சீகன்பால்க் தமது தமிழ் எழுத்தரை மட்டும் தம்மிடம் வந்து போகும்படி உத்தரவு தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையில் பொது மக்களில் சிலர் சீகன்பால்குவிடம் வந்து அவர் தமது காரியங்களைப்பற்றி டென்மார்க் அரசருக்குத் தெரிவிக்க வேண்டும் என்று யோசனை கூறிய போது அவரும் அதற்கு இணங்கியதோடு தரங்கை ஆளுநருக் கும் சில காரியங்களைத் தெரிவிக்க விரும்பி அவருக்கு ஓர் கடிதத்தை எழுதினுர். அதில் மதிப்பிற்குரிய ஆளுநர் அவர்களே! மேன்மைக்குரிய வணிக சங்கத்தாரே! மெய் மகிழ்ச்சியுடன் சுயநிலையில் இருந்து எழுதியதுபோலவே சிறைக்கூடத்திலிருந்தும் எழுதுகின்றேன். எனக்கு தங்களால் இடப்பட்ட தீர்ப்பைப்பற்றி நான் வருந்தவில்லை. இதற்காக தங்கள்மீது நான் எவ்வித பகைமையும் என் உள்ளத்தில் கொண்டதில்லை. ஐக்கியமும், மன அமைதியும் மக்களிடம் நிலவவேண்டும் என்பதற்காகவே நான் பாடுபட்டு வரு கின்றேன்.

எல்லாம் அறிந்த கடவுள் முன்னிலையிலும், மேன்மைக்குரிய மன்னன் முன்னிலையிலும் நான் குற்றமற்றவன் என்று அறிக்கையிடுகின்றேன். தற்போது எனது உதவி இல்லாமல் தவிக்கும் கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவரல்லாதவர்களின் வேதனைக்கு நான் பொறுப்பாளி அல்லன். நீர் செய்வது யாதென்று அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை மறவாதீர். நீர் எனக்கு விரோதமாக அல்ல, கடவுளுக்கும் உமது மன்னனுக்கும் விரோதமாக செயல்படுகின்றீர். உம்மிடம் எனக்கு எவ்வித பயமும் இல்லை. நான் என்னை காத்துக் கொள்ளாமல் உண்மையைக் காத்துக் கொள்ளும் வரைக்கும் இதே மன தைரியத்துடனிருப்பேன்.

எனக்குத் தேவையான பலவற்றை நீர் கொடுக்க மறுத்தாலும் ஒன்றை உம்மால் மறுக்கவே முடியாது. உமக்காக நான் ஜெபம் செய்வதை இப்போதும், எப்போதும் உம்மால் தடுக்கவே முடியாது என்று மிகத் துணிவுடன் எழுதி அனுப்பினார்.

இந்தத் துணிவான கடிதத்தால் அவருக்கு சிறைத் தண்டனைதான் நீடித்தது, தொல்லைகள் அதிகரித்தன. ஆயினும் 'சுடச்சுடரும் பொன்போல' சீகன்பால்குவின் விசுவாசமும் உறுதியும் இன்னும் சிறப்பாகப் பளிச்சிட்டு புதுப்பிக்கப்பட்டன. ஆயினும் தன் உடன் ஊழியன் புளுச்சோ சபைகளைத் தைரியமாக காத்து வருகின்றார் என்று கேள்விப்பட்டு மனம் மகிழ்ந்தார். தனது எதிரிகள் இன்னும் அதிகமாகத் தனக்கும் சபைக்கும் தீங்கிழைக்க திட்டமிட்டபோது சபையின் பேரில் இருந்த ஆர்வத்தால் ஆளுநரும் அவரது மனைவியும் தன்னை வந்து பார்க்க வேண்டும் என்று சீகன்பால்க் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்கள் வந்து பார்த்தார்கள். சீகன்பால்கு அவர்களிடம் மிகவும் மரியாதையோடும் கண்ணியத்தோடும் நடந்துகொண்டார். இதைக் கண்ணுற்ற ஆளுநரின் உள்ளம் இளகியது. இருவரும் ஏழு மணிநேரம் பேசினார்கள். இதன்பின் ஆளுநர் பகைமையை மறந்து நியாயமாக அவரை விசாரிக்க ஒப்புக் கொண்டதோடு ஆளுநருக்கும் சீகன்பால்குவிற்குமிடையே சமரசம் ஏற்

பட்டது. இருவருக்குள் இருந்த வழக்கை நிறுத்தி நடந்த காரியங்களை அரசருக்குத் தெரியப்படுத்திக் கொள்வதென்று முடிவு செய்து இருவரும் ஒருவருக்கொருவர் அன்புசெறிந்த வார்த்தைகளுடன் பிரிந்தனர்.

சீகன்பால்கு விடுதலை செய்யப்பட்டார் என்ற செய்தி வாடிய செடிகளின்மீது பொழிந்த வானத்து மழையாக தமிழ் கிறிஸ்தவர்களின் உள்ளத்தைக் குளிரச் செய்தது. தமிழ் கிறிஸ்தவர்கள் சீகன்பால்குவை ஒரு தேவதூதன் போல கண்ணேக்கி ஆனந்தக் கண்ணீரோடு வரவேற்றார்கள். தொல்லைகள் தாங்கமுடியாமல் சிதறிப்போன ஏழுபேர் தவிர ஏனையோர் அனைவரும் திரும்பி வந்தார்கள்.

ஆயினும் பொருளாதார நெருக்கடி இன்னும் அவர்களை விட்டு நீங்கவில்லை. வெளிநாட்டிலிருந்து வரவேண்டிய உதவி தாமதப்பட்டது. இதனால் நற்செய்தி வேலைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. பள்ளிப் பிள்ளைகளுக்கு உணவு அளிக்கவும் ஆசிரியர்களுக்கு ஊதியம் கொடுக்கவும் வழிகாணது தவித்தார்கள். இந்நிலையில் ஜெபத்தில் மட்டுமே உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.

துன்பங்களால் நற்செய்தித் தொண்டர்கள் தளர்ந்து போகவே இல்லை. கடவுள் தமது அரசை எங்கே நிறுவ விரும்புகின்றரோ அங்கே சாத்தான் அதை தடுத்து நிறுத்தப் பல தந்திரங்களைச் செய்வான் என்பதை நற்செய்தித் தொண்டர்கள் நன்றுகவே அறிந்து செயல்பட்டார்கள். புயற்காற்று மரம் செடிகளை அசைத்து அலைக்கழித்தாலும் அக்கொடிய காற்றல் அவைகளின் வேர்கள் இன்னும் ஆழமாகக் கீழ் நோக்கி சென்று அவைகளைப் பலப்படுத்துவது போன்று நற்செய்தித் தொண்டர்கள் இத்துன்பங்களால் அதிக பலத்தையே அடைந்தார்கள்.

# 7. பலவகைப் பணிகள்

சீகன்பால்குவும் புளுச்சோவும் இந்தியா வருமுன் ரோமன் சபையைச் சேர்ந்த நற்செய்தித் தொண்டர்கள் இந்தியாவில் பணியாற்றினார்கள். இருப்பினும் சீகன்பால்குவும் புளுச்சோவும் ரோமன் சபையின் நற்செய்தித் தொண்டர்கள் பின்பற்றிய எந்த முறையையும் பின்பற்றாமல் தாங்களாகவே தங்களுடைய சூழலுக்கேற்ப புதிய முறைகளையும் வழிகளையும் சிந்தித்து உருவாக்கி நற்செய்திப் பணியாற்றினார்கள். முன்பின் அறியாத நாட்டில் பழக்கமில்லாத மக்களிடத்தில் வேறுபட்ட மதமும் கலாச்சாரமும் நிலவிய நாட்டில் யாருடைய அன்பையும் உதவியையும் எதிர்பார்க்க முடியாத நிலையில் கடவுளையே முற்றிலும் சார்ந்து தங்களது திருப்பணியைச் செய்து வந்தார்கள்.

### உடன் பிறப்புக்களிடம் ஊழியம்

தரங்கைக்கு வந்து இறங்கி தங்களது திருப்பணியைத் துவங்கிய நற்செய்தித் தொண்டர்கள் முதன் முதலில் படை வீரர்களாகவும், பல்வேறு அரசுப் பணியாட்களாகவும் இருந்த தங்கள் சொந்த நாட்டை சேர்ந்த உடன் பிறப்புகளுக்கு வழிபாடு நடத்தி திருமறையைப்பற்றின அறிவைப் புகட்டி வந்தார்கள். அதன் பின்பு 'இந்தச் சிறியரில் யாருக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்' (மத். 25:40) என்ற இயேசுவின் அன்புக் கட்டளையை நிறைவேற்றுபவர்களாகப் போர்த்துக்கீசியர் என்னும் பொதுப் பெயர்பெற்ற ஐரோப்பியர்களுக்கும் இந்தியர்களுக்கும் பிறந்து, ஆதரிக்க எவருமில்லாமல் அனாதைகளாகிவிட்ட சிறுவர்களுக்கு ஒரு பள்ளியை நிறுவி அவர்களுக்கு சமய உண்மையையும் புகட்டி வந்தார்கள். அடிமைகளாக வாழ்ந்த

பல குழந்தைகளை நற்செய்தித் தொண்டர்கள் விலை கொடுத்து வாங்கியும் அவர்களை ஆதரித்தார்கள்.

இந்தியாவிற்கு வந்த இன்னொரு நற்செய்தித் தொண்டரான குருண்லர் இந்தக் காப்பகத்தைக் கண்டு கூறியது:

'தரங்கையிலிருந்த காப்பகத்தில் பதின்மூன்று பிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் சாப்பிடத் துவங்கினார்கள். அப்பொழுதுதான் முதல் தடவையாக இந்தியர் உணவருந்துவதைப் பார்த்தேன். தரையில் சம்மணம்போட்டு உட்காருகின்றார்கள். மண் பாத்திரம் ஒன்று ஒவ்வொருவர் முன்பும் வைக்கப்பட்டது. பாத்திரம் நிறைய சோறும், மீன் துண்டு ஒன்றும், குழம்பும் கொடுக்கப்பட்டது, அவ்வளவுதான். பகலிலும் இரவிலும் ஒரேவித உணவுதான். கத்தி, முள் கரண்டி எதுவும் தேவையில்லை. விரல்களால் பிசைந்து சாப்பிடுகின்றார்கள். படுக்கையைப்பற்றியும் அவர்கள் கவலைப்படவில்லை. கோரைப் பாயைத் தரையில் விரித்து தலையணையும், படுக்கை விரிப்பும் (Matress) இன்றிப் படுத்து தூங்குகின்றார்கள்.

இடுப்பில் ஒரு துண்டு கட்டியிருந்தார்கள். இரவில் அதுதான் அவர்கள் உடலை மூடும் போர்வை. வெறுங்காலால் கூச்சமின்றி நடக்கின்றார்கள.'

நற்செய்தித் தொண்டர்கள் இந்தியாவிற்கு வந்த பத்து மாதங்களில் ஐந்து தமிழர்கள் 1707 மே மாதம் திருமுழுக்கு பெற்றார்கள். இவர்கள் அனைவரும் ஐரோப்பியர்களுக்கு அடிமைகளாக இருந்தவர்கள். 'ஞானிகளை வெட்கப்படுத்தக் கடவுள் பைத்தியக்காரர்களைத் தெரிந்தெடுத்தார்' (1 கொ. 1:27) என்பதற்கிணங்க இது நடந்தேறியது. இந்த ஐவருக்கும் சுமார் ஆறுமாத காலம் நற்செய்தியின் உண்மைகளைப் போதித்து அதன்பின்னர் திருமுழுக்கு கொடுத்தார்கள்.

பலர் கிறிஸ்தவத்தின் உண்மைகளை அறிந்துகொள்ள இவர்களிடம் வந்ததால் அவர்களுடன் கிறிஸ்தவக் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளவும், தனித்துப் பேசவும் கிறிஸ்த

வத்தைத் தழுவ விரும்புவோருக்கு சமய உண்மைகளைப் போதிக்கவும் வசதியான இடம் ஒன்று தேவை என்பதை உணர்ந்தார்கள். ஆரம்பத்தில் தரங்கைக்கு வெளிப்புறத்தில் ஒரு சிறிய பள்ளிக்கூடம் மட்டுமே கட்டி அதில் தங்களது தேவைகளை நிறைவேற்ற நினைத்தார்கள். பின்னர் இந்த எண்ணத்தைக் கைவிட்டு அரசால் அளிக்கப்பட்ட இடத்தில் ஒரு சிற்றாலயத்தைக் கட்ட முடிவு செய்தார்கள்.

## ஆலயம் கட்டுதல்

சபை வளரத் தொடங்கினதால் சபை மக்கள் வழிபாடு செய்ய ஆலயம் கட்ட விரும்பினார்கள். ஆனால் அதைக் கட்டுவதற்குரிய பணம் இவர்களிடம் இல்லை. இவர்களது இந்த நல்ல எண்ணத்தைப் பாராட்டி உதவி செய்யவும் அப்போது தரங்கையில் எவரும் இல்லை. ஆயினும் இவர்கள் கொஞ்சமும் தளராது தங்கள் மனதில் தோன்றியபடி ஆலயத்திற்கு அஸ்திபாரத்தைத் தோண்டினார்கள். இதைப் பார்த்த இவரது எதிரிகள் எள்ளி நகையாடினார்கள். ஆனால் அவர்களது ஏளனம் சீகன்பால்குவிற்கு இன்னும் அதிக உற்சாகத்தையே கொடுத்தது. இதுபற்றி சீகன்பால்கு:

> ஆலயம் கட்டும் வேலையை நாங்கள் மிக எளிமையில் துவங்கினோம். ஆனால் கடவுளிடம் முழு நம்பிக்கையோடு இருந்தோம். எங்களிடம் இருந்த எல்லாவற்றையும் ஆலயம் கட்டுவதற்காகவே அர்ப்பணித்தோம். எவ்வாறு இப்பெரிய செயலை செய்து முடிப்போம் என்று நாங்கள் அறியாமல்போனாலும் கடவுள் எங்களைக் கைவிட மாட்டார்; எங்களைப் பலப்படுத்துவார் என்பதில் நாங்கள் கொஞ்சமும் ஐயப்படவேயில்லை.
>
> பலர் எங்களைப் பார்த்து 'ஆண்டிகள் சேர்ந்து மடம் கட்டுகின்றார்கள்' என்று பழித்தார்கள். ஆனால் கர்த்தர் ஒருசிலரை உதவி செய்யும்படி அவர்கள் மனதில் பேசினதால் அவர்கள் எங்களுக்கு உதவிசெய்ய முன் வந்தார்கள்.

என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

ஆலயத்தின் கட்டிட வேலை ஆரம்பித்து எவ்விதத் தடையும் இன்றி இரண்டே மாதங்களில் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு 1707ஆம் ஆண்டு ஆகஸ்டு 14ஆம் நாள் 'எருசலேம் ஆலயம்' என்ற பெயரில் திருநிலைப்படுத்தப்பட்டது. அப்போது சங். 122:9இல் சீகன்பால்கு தமிழில் மிக உருக்கமாக அருளுரையாற்றினர்.

இவ்வாலயத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் தமிழிலும் போர்த்துக்கீசிய மொழியிலும் இருமுறை வழிபாடுகள் நடந்தன. விசுவாச அறிக்கையின்பேரில் சமய உண்மைகள் எடுத்துக் கூறப்பட்டன. புதன் வெள்ளிக்கிழமைகளில் ஞான உபதேசத்தின்பேரில் கேள்விப் பிரசங்கம் செய்தார்கள். நிருப, நற்செய்தி பகுதிகளும் சுருக்க மன்றாட்டுகளும் வழிபாட்டில் இடம்பெற்றிருந்தன. வழிபாட்டின்போது கிறிஸ்தவரல்லாதவர்களும் ஆலயத்திற்குள் வந்து அமர்ந்திருந்து வழிபாட்டையும் போதனைகளையும் கவனித்து வந்தார்கள். டென்மார்க் நாட்டு திருச்சபையின் வழிபாட்டு முறைமையே பயன்படுத்தப்பட்டது. ஆனால் தமிழ் மொழியில் வழிபாடு நடந்தது.

1707ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் தடவையாக இவ்வாலயத்தில் திருமுழுக்கும், திருவிருந்தும் ஒரே நாளில் நடைபெற்றன. சபை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது. சபை வளர்ந்து பெருகியதால் 'எருசலேம்' என்ற பெயரால் கட்டப்பட்ட இச்சிறு ஆலயத்தில் எல்லோரும் ஒரே நேரத்தில் அமர்ந்து வழிபடமுடியாத இடநெருக்கடி ஏற்பட்டது.

ஆகவே 1717ஆம் ஆண்டு மீண்டும் பெரியதொரு ஆலயத்தைக் கட்டி எல்லோரும் ஒரே நேரத்தில் அமர்ந்து வழிபட வழிவகுத்தார்கள். இவ்வாலயம் 'புதிய எருசலேம்' என்ற பெயரால் திருநிலைப்படுத்தப்பட்டது. இப்பேராலயம் இன்றும் தரங்கம்பாடியில் நினைவுச் சின்னமாகத் திகழ்கின்றது. புதிய ஆலயம் கட்டியபின் சபை இன்னும் அதிக வளர்ச்சி அடைந்துகொண்டே இருந்தது. 1707ஆம் ஆண்டிற்குள் 35 தமிழர்கள் திருச்சபையின் அங்கமானர்கள்.

1708ஆம் ஆண்டு இத்தொகை 101 ஆக பெருகியது. பணி வளர்ந்ததால் பல பணியாளர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

1707ஆம் ஆண்டில் தமிழ்ப் பள்ளிகளை நிறுவினார்கள். மாணவருக்கு இலவசமாக உணவு, உடை, உறைவிடம் அனைத்தும் தந்து தங்கள் தாய்மொழியில் கல்வி கற்க சீகன் பால்கு உதவினார். 'நாங்கள் இச்செயலை பொருள் இல்லாத போது துவங்கினாலும், எங்கள் ஆண்டவர் எங்கள் விசுவாசத்தையும், நம்பிக்கையையும் வெட்கப்படுத்தவில்லை. நாங்கள் பற்பல சூழல்களில் பொருளுக்குச் சிரமப்பட்டபோதி லும் எங்கள் முயற்சியை விட்டுவிட அவர் இடங்கொடுத்ததே இல்லை' என்று மனதை தொடும்படியாகக் கூறுகின்றார்.

உரையாடல் (Dialogue) ஊழியம்

சீகன்பால்கு வெட்கப்படாத ஊழியக்காரராயும் சத்திய வசனத்தை நேர்மையாய்ப் போதிக்கிறவராயும் கடவுளுக்கு முன் தன்னை உத்தமனாய் நிறுத்துகிறவராயும் (2 தீமோ. 2:13) பணியாற்றி வந்தார். அவரது பல பணிகளுக் கிடையே நேரம் கிடைக்கும்போதெல்லாம் தமிழ் மக்களி டையே சமய உண்மைகளைப்பற்றிய உரையாடல்களை அடிக்கடி செய்துவந்தார்.

நடு ஊரில் நன்மரம் பழுத்தாற்போல சீகன்பால்கு இருந்தார். பழுத்த மரத்தைத்தேடி பறவைகள் செல்வது போல அவரைத் தேடி பல்வேறு மக்கள் வந்துகொண்டே இருந்தார்கள். வந்தவர்களோடு சீகன்பால்கு சமய உண்மை களை எடுத்துக்கூறி வந்தார். நேரில் சந்திக்க முடியாதவர்க ளோடு கடிதத் தொடர்புகொண்டு கிறிஸ்துவத்தின் உண்மை களைப் பகிர்ந்துகொண்டார். இந்து, இஸ்லாம் சமயத்தினர் அனைவருடனும் எப்போதும் சமய உரையாடல் செய்து அவர்கள் கூறுவதைக் கேட்டும், கிறிஸ்தவத்தின் தனித் தன்மையை அவர்களுக்கு எடுத்துக்காட்டியும் வந்தார். இந்த உரையாடல் முறைமையின் வாயிலாகப் பல உண்மைகளைக் கண்டுகொண்டதாகச் சீகன்பால்கு குறிப்பிடுகின்றார்.

'கிறிஸ்தவரல்லாதார் கடவுளைப்பற்றியும், மீட்பைப் பற்றியும் இன்னும் போதுமான அளவு அறியவில்லை என்பதை அறிந்துகொண்டேன். ஆனால் அவர்களுடன் உரையாடும்போது, அவர்களிடம் ஆழ்ந்த அறிவும் இறைவனைப்பற்றிய ஆழ்ந்த பக்தியும் இருந்தது என்பதை அறிந்து பல காரியங்களை நான் அவர்களிடமிருந்து கற்றுக்கொண்டேன் என்பதைத் தெளிவாய் வெளியிடுகின்றேன்.

விஞ்ஞான அறிவில் பிற நாட்டவர்கள் இதுவரைக்கும் ஆராயாத கோட்பாடுகள் பலவற்றை அவர்களிடமிருந்து கற்றுக்கொண்டேன். ஐரோப்பிய கிறிஸ்தவர்கள் இந்துக்களை இன்னின்ன முறையில் கிறிஸ்தவத்தைத் தழுவச் செய்யலாம் என்று அங்கிருந்துகொண்டே எளிதாகக் கூறிவிடுகின்றார்கள். ஆனால் அவர்கள் இங்கு வந்து, இந்துக்களுடன் பேசிப்பார்த்தால் ஐரோப்பியர் கூறும் ஒவ்வொரு காரணத்திற்கும் இந்துக்கள் பத்து காரணங்களைத் திரும்பிச் சொல்லும் நிலையில் இருக்கின்றார்கள் என்பதை உணர்ந்துகொள்ளுவார்கள்.

இந்துக்களுக்குப் போதனை செய்ய விரும்புகின்றவர் சிறந்த அறிவாளியாக இருக்கவேண்டியது மிக மிக அவசியம். இந்துச் சமயம் தவறு, கிறிஸ்தவம்தான் உண்மையானது என்று நிரூபிப்பது அவ்வளவு எளிதன்று. தர்க்க முறையால் இது முடியவே முடியாது. இதைச் செய்யக் கடவுள்தான் ஞானத்தைக் கொடுக்க வேண்டும். இதைச் செய்ய விரும்புவோர் திரியேகக் கடவுளுடன் இடையறா உறவில் வாழ்ந்து, இவ்வரத்தை ஈவாகப் பெற்றால்தான், அதைப் பிறருக்கும் பகிர்ந்து கொடுக்க முடியும்'

என்பதை சீகன்பால்கு அன்றே குறிப்பிட்டுக் காட்டினார். அவர் குறிப்பிட்டது இன்று உண்மை என்பதை கிறிஸ்தவ உலகம் உணர்கின்றது.

# 8. நற்செய்திப் பணி விரிவடைதல்

ஆராய முடியாத பெருங் காரியங்களைச் செய்கிறவரும் எண்ணி முடியாத அதிசயங்களை நடப்பிக்கிறவருமாகிய (யோ. 5:9) இறைவனின் ஆசீர்வாதத்தால் 1709ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20ம் நாள் டென்மார்க்கிலிருந்து வந்தக் கப்பலில் குருண்லர் (Grundler), ஜோர்டான் (Jordan) போவிங் (Bovingh) என்ற மூன்று நற்செய்தித் தொண்டர்கள் ஜெர்மனி நாட்டிலிருந்து தரங்கைக்கு வந்தார்கள். இவர்கள் டென்மார்க்கு அரசால் தரங்கையில் நடக்கும் நற்செய்திப் பணியை இன்னும் விரிவுபடுத்துவதற்காக அனுப்பப்பட்டவர்கள்.

இவர்கள் தங்களுடன் தாய் நாட்டிலிருந்து அன்பும் ஆறுதலுமான கடிதங்களையும், அதிகமான பொருளுதவியையும் கொண்டு வந்தார்கள். இவர்களிடம் கடிதம் கொடுத்தனுப்பியவர்களில் டென்மார்க்கு நாட்டு அரசியும், அரசிளங்குமரியும் மிகவும் குறிப்பிடத்தக்கவர்கள். புதிய நற்செய்தித் தொண்டர்களின் வருகை சீகன்பால்குவுக்கு 'கன்றினைக் கண்ட பசுபோல' புளுச்சோவிற்கு 'கார்த்திகை பிறையைக் கண்டதுபோல' மகிழ்ச்சியையும், அதிக ஆறுதலையும் அளித்தது. 'காந்தம் இரும்பைப் பற்றுவதுபோல' ஒருவரையொருவர் கட்டித் தழுவி வரவேற்றுக்கொண்டார்கள்.

'நெருக்கத்திலிருந்து கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன். கர்த்தர் என்னை விசாலத்திலே வைத்தார்' (சங். 118:5) என்பதற்கிணங்க ஊழியம் விசாலமானது.

புதிதாக வந்த நற்செய்தித் தொண்டர்கள் கொண்டு வந்த பொருளுதவியினால், ஏற்கெனவே இருந்த கடனையெல்லாம் திருப்பிக் கொடுத்தார்கள். இவர்கள் அனைவரும் வசிக்கும்படியான ஒரு பெரிய வீட்டை 1000 வெள்ளிக்கு

விலைக்கு வாங்கி, அந்த இல்லத்தை நற்செய்திப் பணிக்கென பிரதிஷ்டை செய்து, ஞானப் பாட்டாலும், மன்றாட்டுகளினாலும் அவ்வீட்டை நிரப்பினார்கள். புதியவர்களின் வருகையால், ஒளியைக் கண்ட இருள்போல, இன்னல்கள் பறந்தோடின.

புதிதாக வந்த மூவரில் குருண்லர் மிகச் சிறந்த அறிஞர். இவர் ஹல்லே பல்கலைக் கழகத்தில் பயின்றவர். கிறிஸ்துவை அறியாத மக்களிடம் சாட்சி கொடுக்கவேண்டும் என்று நீண்ட நாளாக ஆசைகொண்டிருந்தவர். இந்தியாவில் அத்தகைய சேவைக்கு வாய்ப்பு ஏற்பட்டபோது, அதிக உற்சாகத்தோடும், விருப்பத்தோடும் அதற்குத் தன்னை அர்ப்பணித்தார்.

குருண்லர் இந்தியா வந்தது முதல், சீகன்பால்குவுடன் சேர்ந்து உழைத்து, நற்செய்திப் பணிக்கு அதிக உதவியாக இருந்தார். இவர்கள் இருவரும் உடலும் நிழலும்போல, ஒன்றித்து பணியாற்றினார்கள். இவர்கள் தரங்கைக்கு அருகாமையிலுள்ள பொறையாற்றில் ஓர் தோட்டத்தை வாங்கி பல நற்பணிகளைச் செய்து, நற்செய்தியைப் பரப்பினார்கள். இந்தியாவில் தமது ஊழியத்தைப்பற்றி குருண்லர் குறிப்பிட்டிருப்பதாவது:

'என் தாய் நாட்டையும், என் அன்புள்ள நண்பர்களையும், விட்டு விட்டு பல ஆயிரம் மைல்களுக்கப்பால், முன் பின் அறியாத மக்களுடன் எப்படி வாழ்வது என்று நினைத்தபோது, மனதில் பயம் உண்டாயிற்று. ஆனால் இவர்களோடு 'வாழக் கடவுள் என்னை அனுப்பினார் என்றும் அவரது அன்பு என்னுடன் இருக்கிறது என்றும் அறிந்து இந்நாட்டில், இயேசுவின் நாமத்தை அறிவிக்க விரும்பினேன்.

இப்பணியில் துன்பமும், எதிர்ப்பும் உடல் நலம் குன்றுதலும் ஏற்பட்டாலும், என்னை அழைத்தக் கடவுளின் பாதுகாப்பு எப்போதும் எனக்குண்டு. அவரது கிருபையால் பல்லாண்டுகள் உழைப்பேன். இந்நாட்டி

லேயே நான் மரணம் அடைவது அவரது சித்தமானல் அது எனக்குக் கிடைத்த பாக்கியம். துன்பத்தைப் பொருட்படுத்தாது, கடவுள் எதிர்பார்க்கும் வேலையைச் செய்து முடிப்பதே என் கடன். என்னை அற்ப ஆயுத மாகக் கடவுள் தன் விருப்பம்போல் பயன்படுத்தட்டும்' என்று எழுதியுள்ளார்.

சீகன்பால்கு புளுச்சோ ஆகியவர்களைப்பற்றி இவர் குறிப்பிடுவது நம் மனத்தைத் தொடக்கூடியதாக உள்ளது.

> 1709ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20ஆம் நாள் நடுப் பகலில் நாங்கள் வந்த கப்பல் தரங்கையை வந்தடைந் தது. கப்பலை நோக்கி படகொன்று வந்தது. ஆனாலும் நாங்கள் உடனே கரைக்கு வர அனுமதிக்கப்படவில்லை. மறு நாள் மட்டும் ஆவலுடனும், ஆத்திரத்துடனும் காத்திருந்து கரை சேர்ந்தோம்.
>
> சீகன்பால்கு இருந்த வீட்டிற்கு எங்களை அழைத்துச் சென்றார்கள். எங்களை வரவேற்க வந்த நற்செய்தித் தொண்டர்கள் எங்கள் கழுத்தைத் தழுவிக் கட்டிப் பிடித்து வரவேற்றார்கள். சீகன்பால்கு வீட்டு வாயிற் படியில் சபையார் எல்லாரும் கூடியிருந்தார்கள். அவர் களை எனக்கு அறிமுகப்படுத்தி, இவர்களே இந்துச் சமயத்திலிருந்து வந்தவர்கள் என்று கூறியபோது, இந்திய பாணியில் எனக்கு அவர்கள் வணக்கம் செலுத் தினார்கள். நான் பதில் சொல்ல முயற்சித்தேன். ஆயினும் உணர்ச்சிப் பெருக்கால் என் நா எழவில்லை. என் கண்களில் கண்ணீர் மட்டுமே வந்தன. அதை அடக்கிக்கொள்ள முடியாமல் மறைவான இடத்திற்குச் சென்று மனம்விட்டு அழுதேன்.
>
> நற்செய்தித் தொண்டர்களும், தமிழ்க் கிறிஸ்தவர் களும் அடைந்த துன்பங்களையும், வேதனைகளையும் கேட்டபோது திரும்பத் திரும்ப அழுதேன். வேதனை யால் என் மனம் புழுங்கியது. ஆயினும் அவர்களைக் காணும் வாய்ப்புக் கிட்டியதை எண்ணி ஆனந்தக்

கண்ணீரையும் வடித்தேன். நாங்கள் முதல் முதலாகச் செய்த வேலை, முழங்காலில் நின்று ஆண்டவரைத் துதித்ததேயாகும்.

குருண்லர் முதலில் போர்த்துகீசியரிடம் திருப்பணி செய்தார். பிறகு தமிழ் மொழியும், தமிழ் மக்களின் பண்பும் அவருக்குப் பிடித்திருந்ததால் தமிழர்களிடையே பணியாற்றினர்.

ஜோர்டான் என்பவரும் ஊசியும் சரடும்போல சீகன்பால்குவிற்குப் பேருதவியாக இருந்தார். குன்றிமணியிடத்திலும் கறுப்புப் புள்ளியிருப்பதுபோல போவிஸ் என்பவர் ஓர் கரும்புள்ளியாக ஆரம்ப முதற்கொண்டு, நற்செய்தித் தொண்டர்களின் உடலில் உண்டான ஒரு முள்போல, 'நல்ல மரத்திலே புல்லுருவிபோல' இருந்தார். இவரது போக்கினுல் நற்செய்தித் தொண்டர்களின் எதிரிகள் திரும்பவும் அவர்களுக்குத் தொல்லை கொடுக்கத் துவங்கினுர்கள். இவர் திரும்பவும் தனது தாய் நாட்டிற்குத் திரும்பிப் போகுமட்டும், அதாவது 1711ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் வரை இவரால் நற்செய்தித் தொண்டர்கள் அதிக தொல்லைக்குள்ளானுர்கள். தாயகம் திரும்பிச் சென்றும், அங்கும் நற்செய்தித் தொண்டர்களுக்கு எதிராக எதை எதையோ கூறி, தரங்கை நற்செய்திப் பணிக்கு இடையூருகவே இருந்தார். தாயகத்திலிருந்து வந்தப் பொருளுதவி தடைப்பட்டதற்குப் போவிஸ் ஒரு காரணமாக இருந்தார்.

ஆயினும் தரங்கைப் பணி சிறிதும் எவ்விதத்திலும் தடைபடவே இல்லை. தொல்லைகள் ஏற்பட ஏற்பட, நற்செய்தித் தொண்டர்களும், தமிழ்க் கிறிஸ்தவர்களும் இன்னும் அதிகமாக விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஊக்கமாக உழைத்து வந்தார்கள். புதிய நற்செய்தித் தொண்டர்களின் வருகையால் நற்செய்திப் பணித் தளம், தரங்கையைத் தாண்டி பொறையார், நாகப்பட்டினம், சென்னை, கடலூர் போன்ற இடங்களுக்கும் பரவிச் சென்றது. நற்செய்திப் பணியோடு கல்விப் பணி போன்ற பிற பணிகளும் பல்வேறு இடங்களில் தோன்றியது.

# 9. பல இடங்களுக்குச் சுற்றுப் பயணம்

ஓரே இடத்தில் இருந்துகொண்டே ஆட்சிபுரியும் அதிகார வர்க்கத்தைப்போல் சீகன்பால்கு இருக்க விரும்பாமல் பல இடங்களுக்கும் சென்று பணியாற்றினர்.

1709ஆம் ஆண்டு புதிய நற்செய்தித் தொண்டர்கள் வந்ததால் அவர்கள் பார்வையில் தரங்கை ஊழியத்தை ஒப்படைத்துவிட்டு, பணித் தளத்தை இன்னும் விரிவுபடுத்தும் எண்ணத்தோடு இவர் 1709ஆம் ஆண்டு செப்டம்பர் 2ஆம் நாள் டென்மார்க்கு அதிகாரிகளின் அதிகாரத்திற்கு அப்பாற்பட்ட பல்வேறு இடங்களுக்குச் சென்று பணியாற்றினர்.

அவ்வாறு செல்கையில் அவரில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டார். இந்தியாவில் நற்செய்திப் பணியாற்ற வந்த இவர் தன்னை ஒரு இந்தியனுக்கிக்கொண்டு இந்தியர்களோடு பழகலானர். இந்தியரைப்போன்று தலையில் வெள்ளைத் தலைப்பாகை அணிந்து, சட்டைக்கு மேல் சிகப்பு கோடிட்ட அங்கவஸ்திரம் தரித்து, காலில் செருப்புப் போட்டுக்கொண்டு சென்றார். செல்லும்போது தன்னோடு வேறு சில தமிழர்களையும் அழைத்துச் சென்றார்.

முதன் முதலில் தஞ்சாவூர் மன்னனின் எல்கைக்குள் செல்ல விரும்பினர். ஆனல் எல்கைக் காவலன் தடுத்து நிறுத்தியதால் இவரது ஆசை நிறைவேறவில்லை. ஆகவே தரங்கைக்குத் தெற்கே இருந்த நாகப்பட்டினத்திற்கும் வடக்கேயிருந்த சென்னைக்கும் சென்றார். 1710ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதன் முதலில் சென்னைக்குச் சென்றார்.

'உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள். அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைபடுத்துவார்'

(நீதி. 4:6) என்பதற்கேற்ப, தமது பயணத்தில் எப்போதும் கடவுளையும் அவரது வார்த்தைகளையுமே சிந்தித்துக்கொண்டு சென்றதால் அவரது பாதை செவ்வையானதாகவே அமைந்திருந்தது. இவர் சென்ற இடங்களில் எல்லாம், மேலை நாட்டைச் சேர்ந்த குருக்களும், இந்தியர்களும் இவரை அன்புடன் வரவேற்றார்கள்.

கன்னியாகுமரி, இலங்கை ஆகிய இடங்களுக்கும் நற்செய்தியை அறிவிக்கச் செல்லவேண்டும் என்று விரும்பினார். அதற்காக அதிகப் பொருளுதவியையும் நற்செய்தித் தொண்டர்களையும் பெறவேண்டும் என்று அந்த நாளுக்காகக் கனவு கண்டுகொண்டிருந்தார்.

'இன்சுவைத் தேனை ஈக்கள் சுற்றுவதுபோல' மக்கள் கூட்டம் சீகன்பால்குவைச் சுற்றி எப்போதும் இருந்தது. அவரைச் சந்தித்தவர்கள் அவர் செய்யும் நீண்ட பயணம் அவருக்கு உடல் துன்பத்தைக் கொடுக்கும் என்று கூறி, அவரை அதிகமாகப் பயணம் செய்யவிடாமல் தடுத்தார்கள். ஆயினும் தமக்கு வரும் துன்பத்தை ஒரு பொருட்டாக அவர் எண்ணாமல், நற்செய்தியை அறிவிப்பதிலேயே அதிக அக்கறையும், ஆர்வமும் கொண்டு செயல்பட்டார்.

அவரது பயணம் அவருக்கு ஆபத்தை விளைவிக்கும் என்று பலர் எச்சரித்து—

> 'உம்மைப்பற்றி பல வதந்திகள் நிலவுகின்றன. நீர் தரங்கையில் இருப்பவர்களைக் கிறிஸ்தவராக்குகின்றீர். தமிழ்மொழியைப் பயின்று, கிறிஸ்தவக் கோட்பாடுகளைப் பரப்புகின்றீர். மேலை நாட்டிலிருந்து உமக்கு மூட்டை மூட்டை"யாகத் தங்கம் வந்திருக்கின்றது. அதைக்கொண்டு இந்துக்களையெல்லாம் கிறிஸ்தவராக்குகின்றீர் என்று உம்மைக் குறித்துப் பேசப்படுகின்றன. ஆகவே உம்மைப் பிடித்துச் சிறையில் அடைத்து, உம்மிடமுள்ள அனைத்தையும் பறித்துவிட திட்டமிட்டுள்ளார்கள்.

அதோடு உம்மை வெளியே விடவேண்டுமானல் நீர் பெரிய தொகையை அபராதமாகக் கட்டவேண்டுமாம். இல்லாவிட்டால் உம்மைச் சிறையிலேயே வைத்து விடுவார்களாம். எனவே நீர் வந்திருக்கும் செய்தி பரவுவதற்குள் திரும்பி உம் இருப்பிடம் சென்று விடும்'

என்று பயமுறுத்தினர்கள். இப்படிக் கூறிய அவர்களிடம் சீகன்பால்கு:

'கடவுளின் நாமத்தில் புறப்பட்டோம். கடவுளின் நற்செய்தியைக் கூறுவதே எங்கள் தொழில். திருப்பணி செய்யும் எங்களைக் கடவுள் காப்பாற்ருமல் போவாரா? அதோடு இந்திய நாட்டில் ஒரு பூச்சியைக் கொல்லவே மக்கள் தயங்கும்போது எங்களை எதற்காகக் கொல்லப் போகின்ருர்கள்?'

என்று மிகவும் உறுதியோடும், தைரியத்தோடும் அவர்களுக்குப் பதில் கூறி தமது பயணத்தைத் தொடர்ந்தார்.

செல்லும் வழியில் இவரே தாமாக மக்களை அணுகிப் பேச்சைத் துவங்குவார். இவரது பயணத்தின்போது இந்துக்கள், இஸ்லாமியர் போன்ற பல்வகைச் சமயத்தவர்களையும், பிராமணர்களையும் சந்தித்தார். பலர் இவரிடம் சமயத்தைப்பற்றியும், கொள்கை கோட்பாடுகள் பற்றியும் வாதம் செய்தார்கள். ஆனல் பலர் சீகன்பால்குவைக் கண்டபோது, இன்முகம் காட்டி, 'ஐயா! உம்மை எங்களுக்கு நன்ருகத் தெரியும். நீர் தமிழில் சொற்பொழி வாற்றும் தரங்கைப் போதகர்' என்று கூறி உற்சாகப் படுத்தினர்கள்.

தரங்கை அதிகாரிகளின் தொல்லை இன்னும் குறையாததால், சீகன்பால்கு சென்னையில் பலகாலம் தங்கினர். சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஊழியம் செய்து வந்தார். ஒரு நாள் திருப்பதியில் இந்துச் சமய திருவிழா நடப்பதைக் கேள்விப்பட்டு, அங்கு மக்கள் கூட்டம் வரும், அவர்களுக்கு நற்செய்தியை அறிவிக்கலாம் என்று அங்கு சென்ருர்.

செல்லும் வழியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் அவர் கால்நடையாகவே வயல்கள் வழியாகச் செல்ல நேர்ந்ததால், அவருடைய கால்களில் வீக்கமும், புண்ணும் ஏற்பட்டது. மேற்கொண்டு பயணம் செய்ய முடியாதவராய் சாலையில் அமைந்திருந்த ஒரு சத்திரத்தில் தங்கினார்.

அவர் சத்திரத்தில் தங்கியிருக்கும்போது அவரது உயிருக்கே பெரிய ஆபத்து நேர இருந்தது. சீகன்பால்கு விடம் சமயம் சம்பந்தமாக சில பிராமணர்கள் வந்து தர்க்கம் செய்தார்கள். சீகன்பால்கு விக்கிரக வழிபாட்டிற்கு எதிராக பேசினதால், அந்தப் பிராமணர்கள் கோபமடைந்து, தாங்கள் இதற்குமுன் செஞ்சிக்கோட்டைக்கு அருகில் இரு ரோமன் குருக்களை விஷமிட்டுக் கொன்றது போல இவரையும் கொல்லத் திட்டமிட்டார்கள்.

மறுநாள் சீகன்பால்கு தூங்கிக்கொண்டிருந்த நேரம் பார்த்து, அதிகாலை நான்கு மணிக்கு அப்பிராமணர்கள் சீகன்பால்கு இருந்த அறைக்குப் பக்கத்தில் வந்து, தெலுங்கு மொழியில் 'இவன் தூங்குகிறான், வாருங்கள் இவனைக் கொல்லுவோம்' என்று தங்களுக்குள் மெதுவாகப் பேசுவதை சீகன்பால்குவின் அப்போதைய மாணவனும் பின்னர் உபதேசியாராகப் பணியாற்றினவருமான தாவீது கேட்டு, சீகன்பால்குவையும், அவரது ஆட்களையும் விரைவாக எழுப்பி, தான் கேட்டதை அவர்களிடம் கூறினபோது, அதைப் பார்த்த பிராமணர்கள் ஓட்டம் பிடித்தார்கள். சீகன்பால்கு ஆண்டவரின் பெரிதான கிருபையால் உயிர் தப்பினார். 'நான் உங்களைத் தாங்குவேன், இனிமேலும் நான் ஏந்துவேன், சுமப்பேன், தப்புவிப்பேன்' (ஏசா. 46:4) என்ற வாக்குமாறாத கடவுளின் வார்த்தைகள் எத்தனை உண்மையானது என்பதை உணர முடிகின்றது.

சீகன்பால்கு திரும்பவும் சென்னை வந்தார். அவர் அங்கிருக்கும்போது நோயினால் அதிகமாக அவதிப்பட்டார். இதனால் சிலகாலம் திரும்பவும் சென்னையிலேயே தங்கினார். 1712ஆம் ஆண்டு திரும்பவும் தரங்கம்பாடிக்குத் திரும்பி

வந்தார். அங்கே அவரது உடன் ஊழியர்களாகிய குருண்ணலரும் மற்றவர்களும் அதிகாரிகளின் தொல்லைகளுக்கு இடையேயும் ஊழியத்தைத் திறம்பட நடத்திக்கொண்டிருப்பதைக் கேள்விப்பட்டு அகமகிழ்ந்தார். அப்போது தரங்கம்பாடியில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை இருநூறாக இருந்தது. இவர்களுள் ஐம்பது பள்ளி மாணவர்களும் இருந்தார்கள்.

# 10. திருமறை திருப்புதல்

## தமிழில் திருமறை

சீகன்பால்கு தமிழைக் கற்றதிலிருந்து எப்படியாவது திருமறையைத் தமிழில் மொழிபெயர்க்கவேண்டும் என்ற பேரவா அவரது உள்ளத்தில் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. கடவுளின் வார்த்தையை, தமிழ் மக்கள் அறிந்த மொழியில் அளித்துவிட்டால், அதன் வாயிலாக மக்கள் கிறிஸ்துவை ஏற்கவும், மீட்பின் அனுபவத்திற்குள் வரவும் ஏதுவாகவும், எளிதாகவும் இருக்கும் என்று எண்ணினர். திருமறையைத் தமிழில் மொழிபெயர்ப்பதன் மூலம், நற்செய்தித் தொண்டர்களிடம் வர விரும்பாத உயர்குல மக்களும், முகமூடி அணிந்த இஸ்லாமிய பெண்களும் கூட கடவுளின் வார்த்தையைப் படித்தறிய வாய்ப்பிருக்கும் என்று அவர் நினைத்தார். அதோடு நாட்டிலும், நகரிலும், பட்டிதொட்டி, மூலைமுடுக்குகள் எங்கும் நூல் வடிவிலுள்ள திருமறை பரவ வாய்ப்புண்டு என்ற தூரப் பார்வையையும் கொண்டிருந்தார்.

இப்பெரிய நோக்கத்தோடு 1708ஆம் ஆண்டின் இறுதியில் சீகன்பால்கு புதிய ஏற்பாட்டை மொழிபெயர்க்க ஆரம்பித்தார். ஆனால் இவர் ஆளுநரால் சிறையாக்கப்பட்டதால் இம்முயற்சி தடைபட்டது. இருப்பினும் விடுதலைப் பெற்றபின் இப்பணியைத் தொடர்ந்து, மிக வேகமாகவும், ஊக்கமாகவும் செய்தார். புதிய ஏற்பாட்டின் ஒவ்வொரு புத்தகமாக மொழிபெயர்த்து 1711ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 21ஆம் நாள் அதாவது மூன்றே ஆண்டுகளில் புதிய ஏற்பாட்டை மொழிபெயர்த்து முடித்தார். இந்திய மொழிகளில் முதன் முதல் தமிழ் மொழியில்தான் திருமறை மொழிபெயர்க்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

பழைய ஏற்பாட்டையும் மொழிபெயர்க்க ஆர்வம் கொண்டு அப்பணியில் ஈடுபட்டார். ஆனால் அவர் தமது தாயகம் செல்லவேண்டியிருந்ததாலும், சீக்கிரமே அவருக்கு கடவுளின் அழைப்பு இருந்ததாலும் ரூத்தின் ஆகமத்தோடு அப்பணி நின்றுபோனது. இந்தியப் போக்கைக் கடைபிடித்த வீரமாமுனிவர்கூட திருமறையைத் தமிழில் மொழிபெயர்க்க முற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சூத்திரர்கள் வேதத்தைப் படிக்கக்கூடாது என்ற கட்டுபாடு உடைய இந்நாட்டில் அனைவரின் கையிலும் 'வேதத்தை' தந்து கிறிஸ்தவர்களை 'வேதக்காரர்கள்' என்ற அடைமொழியை பெற்றுத்தந்த புரட்சியாளர் சீகன்பால்கு ஆவர்.

தாம் மொழி பெயர்த்த தமிழ் திருமறையைப்பற்றி சீகன்பால்கு,

'இந்தியாவிலுள்ள எல்லாச் செல்வங்களிலும்
மேலான செல்வம்'

என்று குறிப்பிட்டார்.

தாம் மொழிபெயர்த்த ஏடுகளை அதிகக் கவனத்தோடு திரும்பத் திரும்ப சரிபார்த்து, பின்னர் அவைகளை அச்சிட்டு வெளியிட விரும்பினார்.

### அச்சு இயந்திரம்

இங்கிலாந்து நாட்டு அரசியான அன்னாள் டென்மார்க்கு அரசரான ஜார்ஜ் என்பவரை மணம் புரிந்திருந்தார். இவர் தமது தாய்ச் சபையாகிய லுத்தரன் சபையை விட்டுவிட மனமில்லாமல், தமது அரண்மனைக் குருவையும் தம்முடன் இங்கிலாந்து நாட்டிற்கு அழைத்துச் சென்றார். இந்த அரசாங்க குரு ஹல்லே பல்கலைக் கழகத்தின் இறையியல் அறிஞர்களோடு நெருங்கிய தொடர்புகொண்டிருந்தவர்.

சீகன்பால்கு தமது பணி பற்றி மேலை நாடுகளுக்கு அனுப்பிய கடிதங்களைக் கண்ணுற்று அரசாங்க குரு ஆச்சரியப் பட்டதோடு, அந்தக் கடிதங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டு, தரங்கைப் பணிக்கு உதவி

செய்யும்படி இங்கிலாந்து நாட்டிலுள்ள குருமார்கள், செல்வந்தர்கள் அனைவரிடமும் விண்ணப்பித்தார். இச் செய்தியைக் கேள்வியுற்ற இங்கிலாந்து நாட்டின் பிரதம பேராயரும், ஏனையோரும் மகிழ்ச்சி அடைந்தார்கள். வெளி நாட்டில் இப்படிப்பட்ட பணி நடப்பதை அறிந்த அவர்கள் அப்பணிக்கென பொருளுதவி செய்ய முன்வந்தார்கள். அதோடு போர்ச்சுகீசிய மொழியில் புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களையும் அனுப்பிவைத்தார்கள்.

திருமறையின் பிரதிகளைக் கையால் எழுதிப் பரப்ப பெருந்தொகையும், நேரமும் செலவிடுகிறார்கள் என்று கேள்விப்பட்ட இங்கிலாந்து நாட்டு மக்கள், அச்சு இயந்திரம் ஒன்றையும், அத்துடன் ரோமன் எழுத்துக்களையும், அச்சு இயந்திரத்தை இயக்கிக் காட்டிக் கற்றுக்கொடுக்க யோனு பின்கே என்ற பக்தியுள்ள ஜெர்மனி நாட்டு நிபுணரையும் 1711ஆம் ஆண்டின் வசந்த காலத்தில் கப்பலில் அனுப்பினார் கள். அச்சு இயந்திரம் அனுப்புவதில் இங்கிலாந்திலிருந்த கிறிஸ்தவ அறிவு வளர்ச்சிக் கழகம் அதிக அக்கறை எடுத்துக் கொண்டது.

அப்போது ஆங்கிலேயருக்கும், பிரான்சு நாட்டவருக்கும் போர் மூண்டதால், அச்சு இயந்திரத்தை ஏற்றி வந்த கப்பலையும் மடக்கி கொள்ளையிட்டதோடு, பின்கே என்பவரையும் கைது செய்தார்கள். நிலைமைச் சரியானதும் கப்பல் பயணம் மீண்டும் தொடர்ந்தது. ஆனால் பின்கே என்பவர் விஷக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு, நன்னம்பிக்கை முனையை அடுத்த தீவில் காலமானார்.

அச்சு இயந்திரம் 1712ஆம் ஆண்டு தரங்கை வந்தடைந் தது. அதிர்ஷ்டவசமாகக் கப்பலோட்டிகளில் ஒருவருக்கு அச்சு இயந்திரம் பற்றித் தெரிந்திருந்ததால் அவரை அப்பணிக் கென அமர்த்தி, முதலில் போர்த்துகீசிய மொழியில் ஒரு சிறு நூலை அச்சிட்டு வெளியிட்டார்கள். 1712ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் போர்த்துகீசிய மொழியில் வழிபாட்டு முறைமைகளை நூல் வடிவில் அச்சிட்டு வெளியிட்டார்கள். 1713ஆம் ஆண்டில் லுத்தரின் சிறிய ஞான உபதேசத்தையும்

கிறிஸ்து பாடுபட்ட சரித்திரத்தையும், தரங்கையில் நடை பெற்ற ஊழியத்தைப் பற்றிய அறிக்கையையும் போர்ச்சுகீசிய மொழியில் அச்சிட்டு வெளியிட்டார்கள்.

தமிழ் எழுத்துக்கள் இன்னும் உருவாக்கப்படாமல் இருந்தன. இந்நிலையில் ஜெர்மனி நாட்டவர் இதற்கு உதவி செய்ய முன் வந்தார்கள். தமிழ் மொழியைச் சிறிதும் அறியாத இவர்கள், தமிழ் எழுத்துக்களின் உருவத்தை மட்டும் பார்த்து, எழுத்துக்களை உருவாக்கியதோடு, அவ்வெழுத்துக்களையும், அச்சு இயந்திரத்தை இயக்கும் பெர்லின், அட்லர் என்பவர்களையும் இந்தியாவிற்கு அனுப்பிவைத்தார்கள். இவர்கள் 16–9–1713இல் தரங்கைக்கு வந்தார்கள். பெர்லின் போர்த்துகீசிய பள்ளியிலும், அட்லர் அச்சுக்கூடத்திலும் பணியாற்றினார்கள்.

ஜெர்மனி நாட்டிலிருந்து வந்த எழுத்துக்களைக்கொண்டு புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு நற்செய்தி நூற்களையும், அப்போஸ்தலர் நடபடிகள் நூலையும் அச்சிட்டு வெளியிட்டார்கள். இதைத் தொடர்ந்து விசுவாச அறிக்கையையும், வேறு சில புத்தகங்களையும் அச்சிட்டு வெளியிட்டார்கள். 1714ஆம் ஆண்டு முதல் புதிய ஏற்பாடு தமிழில் அச்சிட்டு வெளியானது. இந்திய மொழிகளில் முதன் முதலில் தமிழ் மொழியில்தான் திருமறை அச்சிடப்பட்டு வெளிவந்தது. திருமறையைப் பண்டிதர் முதல் பாமரர் வரை பயன்படுத்த ஆரம்பித்தார்கள்.

1717ஆம்ஆண்டில் முதன்முதல் இந்தியாவில் நாள்காட்டி (Calendar) தரங்கை அச்சகத்திலிருந்து அச்சிடப்பட்டு வெளியானது. பல பாட்டுப் புத்தகங்கள், ஞான உபதேச நூல்கள் ஆகியவைகளும் தொடர்ந்து அச்சிடப்பட்டன.

ஜெர்மனி நாட்டில் செய்யப்பட்ட தமிழ் எழுத்துக்கள் மிகக் பெரியதாய் இருந்தமையால் தரங்கம்பாடியிலேயே சிறிய எழுத்துக்களைத் தயாரித்தார்கள். மேலை நாட்டிலிருந்து வந்த காகிதம் அதிக விலையுள்ளதாக இருந்ததால், தரங்கைக்கு அருகாமையில் ஒரு கடுதாசிப் பட்டறையை

இவர்களே துவக்கி நடத்தினார்கள். இன்றும் கடுதாசிப் பட்டறை இல்லாவிட்டாலும் அவ்விடம் 'கடுதாசிப் பட்டறை' என்றே அழைக்கப்படுகிறது.

ஜெர்மனியும், இங்கிலாந்தும் பற்பல வகைகளில் தரங்கைப் பணியை ஆதரித்து வந்தார்கள். டென்மார்க்கு மன்னர் நான்காம் பிரட்ரிக் தரங்கை ஊழியத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் தமது நாட்டின் தபால் வருமானத்திலிருந்து 2000 வெள்ளியை ஒதுக்கி அது தவறுமல் தரங்கைக்கு அனுப்பப்பட ஆணை பிறப்பித்ததோடு, இப்பணம் தனக்குப் பின்னும் தொடர்ந்து அனுப்பப்பட ஓர் உயிலையே எழுதி வைத்தார். அரசருக்குப் பின் அரச குடும்பத்தினர் இவ்வுதவிக்கு மேலாகத் தொடர்ந்து செய்துவந்தார்கள். தரங்கைக்கு சீகன்பால்கு வரக்காரணமாயிருந்தவர்களில் ஒருவரான லெட்கென்ஸ் அப்போது கோபன்ஹேகனில் இருந்தார். அவர் தரங்கைப் பணிபற்றியும், அப்பணிக்கு உலகெங்கிலுமிருந்து வரும் உதவிபற்றியும் கேள்விப்பட்டு 'இந்த நல்ல செய்தியைக் கேட்கவே நான் உயிரோடிருந்தேன். இனி நான் மகிழ்ச்சியுடன் என் கண்களை மூடுவேன். அரசரைக் கடவுள் ஆசீர்வதிப்பாராக' என்று கண்ணீர்மல்கக் கூறினார்.

சீகன்பால்கு தமிழில் சிறந்த ஓர் அகராதியைத் தொகுத்தார். இவர் தொகுத்த அகராதியானது மூன்று பகுதிகளைக் கொண்டதாக இருந்தது. தமிழ்ச் சொல், அதை உச்சரிக்கும் முறை, ஜெர்மன் மொழியில் அதன் பொருள் ஆகிய முக்கூறுகள் இடம்பெற்றிருந்தன. முதலில் 20,000 சொற்களையும், சொற்றொடர்களையும் கொண்டிருந்தது. நான்கு ஆண்டுகளுக்குப் பின் மேலும் பல சொற்களைச் சேர்த்து மொத்தம் 40,000 சொற்களுடன் வெளியிட்டார்.

14-9-1708இல் இவர் தமது நண்பனுக்கு எழுதிய கடிதமொன்றில், தாம் தமிழ்மொழியில் பதினைந்து நூற்களை எழுதியதாகவும், அதுவும் தமிழ் கற்ற இரண்டு ஆண்டுகளுக்குள் எழுதியதாகவும் குறிப்பிடுகின்றார். அவைகள்:

1. ஒரு கிறிஸ்தவனுக்கும் தமிழனுக்கு மிடையே நடந்த உரையாடல்.

2. லுத்தரின் சிறிய வினா-விடைத் திருமறைப் பயிற்சி நூல்.

3. திருமுழுக்குப் பெறுவோர்க்குத் திருமுழுக்கு விவரங்கள் பற்றிய பரீட்சை.

4. திருவிருந்து அனுசரிப்பு.

5. திருச்சபையில் பாடப்பட வேண்டிய பாடல்கள்.

6. சில பாவமன்னிப்பு விருத்தங்கள்.

7. முழு கிறிஸ்தவச் சத்தியங்களும் அடங்கிய 26 பிரசங்கங்கள்.

8. கிறிஸ்துவின் வரலாறு அடங்கிய 14 ஞாயிறு பிரசங்கங்கள்.

9. சிறிய பள்ளி நூல் ஒன்று.

10. தமிழ், போர்ச்சுகீசிய மொழிகளில் சில சுற்றுக் கடிதங்கள்.

11. அறநெறி இறையியல்.

12. குருவிற்கும் சீடருக்குமிடையே கிறிஸ்தவக் கொள்கைகளைக் குறித்த கேள்வி–பதில் அமைப்பிலுள்ள 16 உரையாடல்கள்.

13. தமிழ் அகராதி—20,000 சொற்களுடன்.

14. தமிழ்ச் செய்யுள் அகராதி—தமிழ்ச் செய்யுள் நூல்களிலிருந்து 17,000 சொற்களடங்கியது.

இது தவிர ஜெர்மனி நாட்டிலுள்ள ஹல்லே நூல் நிலையத்தில் சீகன்பால்குவினுல் எழுதப்பட்ட பல நூல்கள் காக்கப்பட்டு வருகின்றன. அவைகளில்

1. Bibliotheca Malabarica.

2. Geneology of the Malabari Gods.
(ஜெர்மானிய மொழியில் உள்ளது.)

3. Malabarian Religion.

4. நீதிவெண்பா, கொன்றைவேந்தன் முதலியவற்றி லிருந்து எடுத்த சில தொகுப்புகள்.

5. Tamil German Dictionary.

6. Translation into Tamil of the New Testament

7. Malabar words and phrases ஆகியன குறிப்பிடத் தக்கவைகள்.

சீகன்பால்கு எழுதி, அச்சிட்டு வெளியிட்ட நூல்கள் பலரின் ஆன்மீகக் கண்களைத் திறக்க உதவியது. இவர்களில் குறிப்பிடத்தக்கவர் இராஜா நாயக்கன் என்பவர். இவர் ஆரம்பத்தில் ரோமன் சபையைச் சேர்ந்தவர். தஞ்சை மன்னரின் போர்ப்படையில் பணியாற்றியவர். இவர் சீகன்பால்குவின் நூல்களை வாசித்து லுத்தரன் சபையில் சேர்ந்தார். பிற்காலத்தில் உபதேசியாராகவும் பணியாற்றி னார். சீகன்பால்குவிற்கு தமிழ் கற்றுக் கொடுத்த ஆசிரியரின் புதல்வனான கனபாடி உபாத்தியாயர் சீகன்பால்குவிற்கு மொழி பெயர்ப்பு செய்து உதவியபோது, கிறிஸ்தவத்தின் உண்மையைக் கண்டு, கிறிஸ்துவின் அடியாரானார். இவர் பிற்காலத்தில் கிறிஸ்துவின் மீட்புச் செய்தியை செய்யுள் வடிவில் எழுதினார். இது சிறுவர்கள் எளிதில் நற்செய்தியை மனதில் வைத்துக்கொள்ள உதவியாக அமைந்தது.

# 11. சீகன்பால்கு தாயகம் சென்றது

தரங்கையில் ஆளுநர் கசியசோடு இன்னும் நிலைமை சீரடையாமலேயே இருந்ததால், 1709இல் சீகன்பால்கு தாயகம் சென்று, தமது பணியின் நிலைமையையும், அதற்கு ஏற்படும் இன்னல்களையும் எடுத்துக்கூறி அதைச் சரிப்படுத்த விரும்பினார். சீகன்பால்கு டென்மார்க்கு சென்றால் தனக்கு ஆபத்துவரும் என்று ஆளுநர் அஞ்சியதால், சீகன்பால்குவை அவர் போக அனுமதிக்கவில்லை.

இத்தருணத்தில் புளுச்சோவுக்கு உடல்நிலை பாதிக்கப் பட்டதால், 1711ஆம் ஆண்டு அவர் தமது தாயகத்திற்குத் திரும்பிப்போனார். அவர் அங்கு சென்று தரங்கைப் பணி பற்றியும், அதற்கு அதிகாரிகளால் ஏற்படும் தொல்லைகள் பற்றியும் சொல்லி, தங்களது பணிபற்றிக் குறைகூறித்திரியும் போவிஸ் போன்றவர்களின் முயற்சிக்கு முற்றுப்புள்ளிவைக்க விரும்பினார். புளுச்சோ தாயகம் சென்றபோது, சீகன்பால்கு தமது உடன் ஊழியரான அவரைப் புகழ்ந்து,

> 'நாங்கள் இருவரும் ஒரே ஆவியுடையவர்களாக இருந்தோம். எங்கள் ஊழியத்தில் ஒரே மனமுடையவ ராய் உழைத்ததின் பயனாக சிறந்த முன்னேற்றத்தை அடைந்துள்ளோம்'

என்ற வார்த்தைகள் அடங்கிய கடிதத்தை அவரிடம் கொடுத்தனுப்பினார். ஆனால் சீகன்பால்குவும், புளுச்சோவும் எதிர்பார்த்த அளவு எந்த மாற்றமும் ஏற்படவில்லை. புளுச்சோ தாயகம் திரும்பியும் தரங்கை அதிகாரிகளின் போக்கில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. அதோடு தாயகத்திலிருந்து எவ்வித பொருளுதவியும் வரவுமில்லை. இந்நிலையில் சீகன்பால்கு தாமே தாயகம் சென்று இப்

பிரச்சினைகளுக்கு ஓர் முடிவுகட்ட விரும்பி, தாயகம் செல்ல முடிவெடுத்தார்.

இத்தருணத்தில் கசியஸ் தனது உடன் அதிகாரிகளின் வெறுப்புக்குள்ளானதால், சீகன்பால்குவையும் அவன் தொடர்ந்து வெறுக்க விரும்பாமல், அவருடன் நல்லுறவு கொள்ள விரும்பினன். தனக்கும் சீகன்பால்குவிற்கும் உள்ள வழக்கை டென்மார்க்கு அரசரிடம் கொண்டுபோக விரும்பாமல், சீகன்பால்குவோடு ஒப்புரவாகிவிடுவது நலம் என்று கருதி 1714 அக்டோபர் மாதத்தில், கசியஸ் சீகன்பால்குவை விருந்திற்கு அழைத்து, தனது மேல் அதிகாரிகளான டென் மார்க்கு நாட்டு வர்த்தக கழகத்தின் தலைவர்கள் தனக்கு இரகசியமாக அனுப்பிய கடிதங்களையும், அக்கடிதங்களில் அவர்கள் தன்னை எப்படியாவது அரசர் உருவாக்கிய நற் செய்தித் தொண்டையும், அதைச் செய்யும் நற்செய்தித் தொண்டர்களையும் தடுக்கவேண்டும் என்றும் தனக்கு ஆணைப் பிறப்பித்திருப்பதையும் கசியஸ் சீகன்பால்குவிடம் காட்டியபோது, அவர் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந் தார். இனித் தரங்கையில் இருந்து காலம் தாழ்த்துவதில் எந்தப் பயனுமில்லை. உடனே தாயகம் சென்று, டென் மார்க்கு நாட்டு அரசரைக் கண்டு, ஊழியத்திற்கு ஏற்பட் டிருக்கும் தடைகளையும் இன்னல்களையும் எடுத்துக்கூறி, அவைகளை நீக்கும்படி செய்தாகவேண்டும் என்று முடி வெடுத்து, தாயகம் செல்லத் துடித்தார்.

இந்நிலையில் எழுத்துமூலம் சீகன்பால்கு தன்னோடு ஒப்புர வானதை எழுதிக் கொடுக்கவேண்டும் என்று கசியஸ் கேட்டதற்கும் இணங்கி, எழுத்துமூலம் எழுதிக்கொடுத்தார். இதனால் கசியஸ் அதிகமாக மகிழ்ந்து, சீகன்பால்கு டென் மார்க்கு நாட்டுக் கப்பலில் எவ்விதச் செலவுமின்றிப் பயணம் செய்ய உத்தரவு அளித்தான். தரங்கை அதிகாரிகளின் தலையீட்டால் சோர்ந்துபோன ஜோர்டானும் சீகன்பால்கு வுடன் தாயகம் திரும்பிவிட விரும்பியதால், சீகன்பால்கு அவரையும், தனது தமிழ் மறந்துபோகாமலிருக்க மலையப்பன் என்ற தமிழ் மாணவரையும் தன்னோடு அழைத்துச் சென்றார்.

1714ஆம் ஆண்டு அக்டோபர் 26ஆம் நாள் 'நான்காம் பிரடரிக்' என்ற கப்பலில் இவர்கள் பயணம் செய்ய ஆயத்த மானுர்கள். தமது உடன் ஊழியரையும், சபையாரையும் விட்டுப் பிரிவது சீகன்பால்குவிற்குச் சொல்லமுடியாத வருத்தத்தை ஏற்படுத்தியது. தமிழ்க் கிறிஸ்தவர்கள் சீகன்பால்கு விடம், கலங்கிய கண்களுடன் வந்து, அவரைத் தாயகம் செல்லவேண்டாம் என்று வற்புறுத்திக் கேட்டார்கள். ஆனுல் அதற்கு சீகன்பால்கு 'உங்கள் நலனேக்கருதியே நான் செல்லுகின்றேன். நான் போவதால் நற்செய்திப்பணி வளரும். நான் விரைவில் திரும்பி வருவேன்' என்று ஆறுதல் கூறினர்.

தாயகத்திற்குப் போகுமுன் சீகன்பால்கு செய்த அருளுரையைக் கேட்ட மக்கள் விம்மி விம்மி அழுதார்கள். சீகன்பால்கு புறப்படுவதற்கு முந்தின நாள் சபையார் எல்லோரும் அவரைச் சூழ்ந்துகொண்டு, தங்களது கவலையை வெளிப்படுத்தினபோது, அவர்களுக்கு அறிவுரைகூறி, ஆறுதல்படுத்தி, அவர்களே ஆசீர்வதித்தார். கப்பல் புறப்படும் வேளையில் மக்கள் திரளாகக் கடற்கரைக்கு வந்து, 'ஐயா, நீங்கள் அங்கேயே தங்கிவிடவேண்டாம். எங்கள் நம்பிக்கையை ஏமாற்றவேண்டாம். சீக்கிரமாகத் திரும்பி வாருங்கள் என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டு, பிரியாவிடை அளித்தார்கள்.'

கிறிஸ்தவர்கள் அல்லாத ஏனைய நண்பர்களும்கூட சீகன் பால்குவிற்குப் பிரியாவிடை கூறினுர்கள். அப்போது சீகன் பால்கு அவர்களிடம், 'நான் உங்கள் வார்த்தைகளே ஏற்றுக் கொள்ளமாட்டேன். ஏனென்ருல் நான் அளித்த நற் செய்தியை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லேயே' என்றபோது, அவர்கள், 'நாங்கள் கிறிஸ்தவ சமயத்திற்குள் வரமுடியாமல் போனுலும், கிறிஸ்தவர்களுடன் வாழவும், அவர்களுடன் கலந்துரையாடவும் எங்களுக்கு வாய்ப்புக் கிடைத்ததே' என்று சொல்லியதோடு, 'எங்களுக்கும், எங்கள் நாட்டிற்கும் வள்ளல்போல் உதித்த உங்களே நாங்கள் என்றும் மறவோம். நீங்கள் சீக்கிரம் திரும்பி வாருங்கள்' என்று கூறி பிரியா

விடை அளித்தார்கள். 1714 அக்டோபர் 26ஆம் நாள் சீகன்பால்கு தாயகம் புறப்பட்டார்.

சீகன்பால்கு கப்பல் பயணத்தின்போதும் சும்மா இருக்கவில்லை. கப்பல் தொழிலாளிகளிடம் நற்செய்திக் கூறினர். தரங்கம்பாடியில் அவர் துவங்கின பழைய ஏற்பாட்டைத் தமிழில் மொழிபெயர்க்கத் துவங்கி, யோசுவாவின் ஆகமத்தை மொழிபெயர்த்தார். ஒரு தமிழ் இலக்கணப் புத்தகத்தையும் உருவாக்கினர்.

கப்பல் நன்னம்பிக்கை முனையில் ஒருமாத காலம் நங்கூரமிட்டிருக்கையில், சீகன்பால்கு ஆப்பிரிக்க மக்களுடன் டச்சு மொழியில் பேசிப் பழகி அவர்களுக்கு நற்செய்தியைக் கூறினர்.

1715 ஜூன் மாதம் முதல் தேதி நார்வே நாட்டிலுள்ள பெர்கன் என்ற துறைமுகத்தைக் கப்பல் அடைந்தது. 'கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல' அங்கு முகாமிட்டிருந்த நான்காம் பிரட்ரிக் மன்னரைக் காணும் வாய்ப்பைப் பெற்றார். மன்னர் இவரைக் கண்ணியமாக நடத்தியதோடு மட்டுமல்லாமல், தன் முன்னிலையில் ஓர் அருளுரையாற்றவேண்டும் என்றும், தரங்கை ஊழியததைப் பற்றி ஓர் அறிக்கையைத் தனக்குக் கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அதன்பின் ஜூலை மாதம் கப்பல் டென்மார்க்கு சென்றது. சீகன்பால்கு டென்மார்க்கிலுள்ள கோபன்ஹேகனுக்குச் சென்று அரசருடனும், அங்கிருந்த நற்செய்திக் குழுவுடனும், தரங்கை ஊழியத்தைப்பற்றி எடுத்துக்கூறி, ஊழியத்திற்காக உதவிகள் பல பெற்றார். அதோடு 'ப்ரோவோஸ்டு' (Provost) அதாவது தரங்கை நற்செய்தி இயக்கத்தின் தலைவர் என்ற பட்டத்தையும் மன்னர் சீகன்பால்குவிற்கு அளித்தார். குருப்பட்டம் கொடுக்கவும் சீகன்பால்குவிற்கு அதிகாரம் அளித்தார். நற்செய்திப் பணியின் காரியங்களைக் கவனிக்க தனிக் குழுவையும் (Mission Collegium) அரசர் ஏற்படுத்தினர். இது சீகன்பால்குவிற்கு அதிக மகிழ்ச்சியையும், ஆறுதலையும் அளித்தது.

கசியகம், வர்த்தகக் கழகமும் நற்செய்திப்பணி வேலைக்குச் செய்த இடர்களையும், இழைத்தத் துன்பங்களையும் அரசரும், அரசவை அதிகாரிகளும் கேள்விப்பட்டு, அதிக வருத்தப்பட்டு தரங்கை ஊழியத்தை ஆதரிக்கும் ஒரு புதிய ஆளுநரை நியமிக்க முன்வந்தார்கள்.

சீகன்பால்கு அக்டோபர் மாதத்தில் தன் பிறப்பிடமான ஜெர்மனி சென்றார். ஹல்லே நகருக்குச் சென்று தமது ஊழியத்தைப்பற்றி எடுத்துக் கூறினார். இதைக்கேட்ட மக்கள் மகிழ்ச்சி அடைந்ததோடு, ஊழியத்தைப்பற்றிய புதிய ஆர்வமும்கொண்டார்கள். ஊழியத்தை எல்லா வகையிலும் ஆதரிக்க முன்வந்தார்கள். தரங்கம்பாடியில் ஒரு பெரிய ஆலயம் கட்டப்படவேண்டும் என்று சீகன்பால்கு கேட்டுக்கொண்டபோது அதற்குப் போதுமான உதவி கிடைத்தது.

### சீகன்பால்குவின் திருமணம்

ஹல்லே என்னுமிடத்தில் நீண்ட காலம் தங்கி இருந்த போது, தாம் முன்னே மெர்சேபுர்கில் படிப்பித்த தமது மாணவியாகிய சால்ஸ்மன் என்பவரின் புதல்வி மரியா டாரத்தியா சால்ஸ்மன் என்பவரைத் தம் மனைவியாக ஏற்றுக் கொண்டார். இவர் 'ஜாடிக்கு வாய்த்த மூடிபோல' சீகன்பால்குவிற்கு மிகவும் பொருத்தமான துணைவியாக அமைந்தார்.

அதன்பின் 1715 டிசம்பர் 2ஆம் நாள் ஜெர்மனி நாட்டைவிட்டு, ஹாலந்து, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்குச் சென்றார்கள். சீகன்பால்கின் ஊழியத்தைப்பற்றிக் கேள்விப் பட்ட ஆங்கிலேயர்கள் அவரை மிகவும் விருப்புடன் வரவேற்றார்கள். இங்கிலாந்து நாட்டு மன்னர் முதலாம் ஜார்ஜும், அரசக் குடும்பத்தினரும் இவருக்குப் பேட்டி அளித்தார்கள். ஆலயங்களிலும், முக்கிய இடங்களிலும் தரங்கை ஊழியம்பற்றி எடுத்துக்கூற சீகன்பால்கு கேட்டுக் கொள்ளப்பட்டார். இதனால் நற்செய்திப் பணிக்குப் பல நன்கொடைகள் கிடைத்தன. ஆங்கிலேயக் கம்பெனியின்

கப்பலில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதி பெற்றார்கள்.

1716ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் இங்கிலாந்தைவிட்டுப் புறப்பட்டு ஆகஸ்டு 12ஆம் நாள் சென்னை வந்தடைந்தார்கள். சென்னையிலிருந்த ஸ்டீவன்சன் என்ற ஆங்கிலேயக் குருவின் இல்லத்தில் சில நாட்கள் தங்கிவிட்டுப் பின் தரங்கை வந்து சேர்ந்தார்கள்.

'பட்டப் பகலில் விண்மீனைக் கண்டதுபோல்' மக்கள் மகிழ்ச்சி வெள்ளம் பொங்க கடற்கரையில் கூடி சீகன் பால்குவையும், அவரது துணைவியாரையும் அன்புடன் வரவேற்றார்கள்.

சீகன்பால்குவுடன் அவரது துணைவியார் மகிழ்வுடன் வாழ்ந்தார். 1716 ஆகஸ்டு 20ஆம் நாள் தமது சகோதரனுக்கு எழுதிய கடிதத்தில் மரியா டாரத்தியா, 'எங்களது திருமணம் கடவுளால் உருவாக்கப்பட்டது என்பதை உணர்கிறேன். கடவுளின் அதிசய வழிநடத்துதலில் நான் மகிழ்கிறேன்' என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

நற்செய்திப் பணிக்கு இடறலாயிருந்த கசியஸ் சீகன் பால்கு வந்த அதே ஆண்டில் தாய் நாட்டிற்குத் திரும்பும்படி உத்தரவு பெற்றான். அவனுக்குப் பதிலாக புருன் என்பவர் ஆளுநராக அமர்த்தப்பட்டார். இவர் நற்செய்திப் பணிக்கு அதிக உதவியாக இருந்தார்.

# 12. இறுதிகாலப் பணிகள் (1716–1719–2½ ஆண்டுகள்)

தரங்கையில் திருச்சபை 'நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக' வளர்ந்தது. இதனால் 1707இல் கட்டிய 'எருசலேம்' என்ற சிற்றாலயம் எல்லோரும் ஒரே நேரத்தில் அமர்ந்து வழிபாடு செய்ய வசதி இல்லாமல் இருந்தது. இதனால்தான் சீகன்பால்கு தாயகம் சென்றிருந்தபோது, ஒரு பெரிய ஆலயத்தைக் கட்டுவதற்குப் பொருளுதவிப் பெற்று வந்தார். 1716ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் தரங்கையில் திரும்பவும் புதிய உற்சாகத்தோடு தம் பணியைத் துவங்கினார்.

புதிய ஆலயத்திற்கு 1717 பெப்ருவரி 9ஆம் நாள் அடிக்கல் நாட்டப்பட்டது. புதிய ஆளுநரான புருன் அடிக்கல்லை நாட்டினார். அன்று 1 கொ. 3:11இல் சீகன்பால்கு நீண்ட அருளுரையாற்றினார். அதன் சுருக்கத்தை ஈண்டு காண்போம்:

> கிறிஸ்துவே திருச்சபையின் அடிக்கல். ஆகவே எவரும் திருச்சபையை மேற்கொள்ளவோ அழிக்கவோ முடியாது. (இதைப் பல திருமறை வசனங்களால் எடுத்துக் காட்டினார்). கோபுரங்களிலும், ஆலயங்களிலும் மட்டும் நம்பிக்கை வைப்பது தவறு. (இதற்கு ஆதாரமாக எரேமியா ஏழாம் அதிகாரத்தைச் சுட்டிக்காட்டினார்).
>
> ஆலயங்களில் பரிசுத்தக் கடவுளின் வார்த்தை சுத்தமாய்ப் போதிக்கப்பட்டு, சாக்கிரமந்துகளும் ஒழுங்காய்ப் பரிமாறப்படுகிறது. ஆகவே கடவுளின் வார்த்தையைக் கேட்டு, சாக்கிரமந்துகளில் பங்கு பெற்று அதற்கிசைய

நடக்காதவர்கள் கடவுளுக்குப் பிரியமாயிருக்கமுடியாது.

கிறிஸ்து திருச்சபையின் அடிக்கல்லாக இருந்தாலும், அவர் ஆலயத்திற்கு வெளியேயும் செயல்படுகின்றார். ஆண்டவரும், அப்போஸ்தலர்களும் மலைகளிலும், படகுகளிலும், கடை வீதிகளிலும் நின்று திருவசனத்தைப் பிரசங்கித்து, ஆறுகளில் திருமுழுக்குக் கொடுத்து, தனி வீடுகளில் திருவிருந்து வழிபாடு நடத்தினார்கள். இருப்பினும் அனைவரும் ஒன்றுகூடி கடவுளைத் தொழவும், கடவுளின் வார்த்தையைக் கேட்கவும் ஆலயம் நமக்கு வாய்ப்பது, கடவுள் அளிக்கும் நல்ல ஈவுகளில் ஒன்று என்பதற்கு ஐயமில்லை.

கிறிஸ்தவ சமயத்தைப் பரப்ப முயலும் ஆசிரியரும், போதகரும், இயேசுவின் வசனத்தைக் கேட்போரை, திரியேகக் கடவுள் வசிக்கக்கூடிய உயிருள்ள ஆலயமாகத் தங்களால் ஆனமட்டும் முயன்று கடவுளின் சாயல் அவர்களில் பூரணப்பட உதவவேண்டும் சிலுவையில் அறையுண்ட இயேசுகிறிஸ்துவை எங்களால் ஆனமட்டும் பிரசங்கிக்கிறோம். எங்களது முயற்சி தோல்வி அடையாதபடி எங்களை ஆசீர்வதித்த ஆண்டவரைப் புகழுகின்றோம். எங்களின் அற்ப சேவையைப் பயனுள்ளதாக்கி, கடவுள் ஓர் சிறிய சபை உருவாகக் கருணை கூர்ந்துள்ளார். இச்சபை வளருகின்றது. எனவேதான் இப்புதிய ஆலயத்தைக் கட்டத் தீர்மானித்தோம்.

இவ்வாலயத்தின் வாயிலாகப் பொய்ப் போதகம் முற்றிலும் அழிக்கப்பட்டு, கடவுளின் சுத்தமான வசனம் பிரசங்கிக்கப்பட, இவ்வேலையைத் துவங்குவதற்கு அருள் புரிந்த கடவுள் இக்கட்டிட வேலை முடியும்வரை ஆசீர்வதித்து உதவி செய்வார்

என்று பொருளுள்ளதும், மனதைத் தொடக்கூடியதுமான அருளுரையைச் சீகன்பால்கு ஆற்றினார்.

ஆலயக் கட்டிட வேலை மிகவும் துரிதமாக நடந்தது. புதிதாகக் கட்டப்பட்ட ஆலயம் 1718ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 11ஆம் நாள் 'புதிய எருசலேம்' என்ற பெயருடன் திருநிலைப்படுத்தப்பட்டது. எரே. 6:19–21இல் சீகன்பால்கு அருளுரை ஆற்றினார். அதுமுதல் புதிய எருச லேம் ஆலயத்திலேயே வழிபாடுகள் நடந்தன.

ஆலயம் சிலுவை வடிவில் கட்டப்பட்டது. அக்காலத் தில் சாதிக் கொடுமைத் தலைவிரித்தாடியது. இதனால் ரோமன் சபையில் பின்பற்றிய ஒழுங்கையே சீர்திருத்தச் சபையின் நற்செய்தித் தொண்டர்களும் பின்பற்றவேண்டிய தாயிற்று. மேல் சாதியினருக்கு ஒரு பக்கமும், கீழ் சாதியின ருக்கு மறு பக்கமுமாக ஆலயத்தில் இடம் ஒதுக்கப்பட்டது. அதோடு மேல் சாதியினர் திருவிருந்து எடுத்து முடிந்த உடனேதான் கீழ்சாதியினருக்கு திருவிருந்து பரிமாறப் பட்டது. எனினும் இந்நிலையை மாற்ற விரும்பி, கீழ்சாதி மக்களின் குழந்தைகளுக்கு ஐரோப்பிய உடை உடுத்தி, சுய மதிப்போடு அவர்களை நடத்தி அவர்கள் முன்னுக்கு வர பல வகைகளில் நற்செய்தித் தொண்டர்கள் உதவியும், உற்சாக மும் அளித்தார்கள்.

'புதிய எருசலேம்' என்ற ஆலயம் கட்டப்பட்டதும், பழைய ஆலயத்தை உபதேசியார்களும், சபை ஊழியர்களும் குடியிருப்பதற்கு கொடுத்தார்கள். ஆலயக் கட்டிடம் கட்டப் படும்போது அதனால் நற்செய்திப் பணி கொஞ்சமும் பாதிக்கப்படவில்லை. 1717இல் 30 பேர் திருமுழுக்குப் பெற்றார்கள். ஆனால் 1718இல் 50 பேருக்குமேல் திரு முழுக்குப் பெற்றார்கள்.

ஆலயத்தை மட்டும் கட்டினால் போதாது. கிறிஸ்தவர்க ளாக மாறுகிறவர்களை, கிறிஸ்தவ பராமரிப்பில் பேணி வளர்க்க நல்ல மேய்ப்பர்களையும் பயிற்றுவிக்கவேண்டும் என்பதை உணர்ந்து, கிறிஸ்தவ ஆசிரியருக்கும், ஏனையோ ருக்கும் ஓர் இறையியல் கல்விக்கூடத்தை (Seminary) நிறுவினார்கள். இதை நிறுவுவதில் சீகன்பால்குக்குப் பெரும் பங்கு இருந்தது.

இங்ஙனம் ஊழியம் நடைபெற்று வரும்போது, சீகன் பால்கு கடலூரிலும், சென்னையிலும் பள்ளிகளை ஆரம்பிக்க முயற்சித்து, இரு இடங்களிலும் பள்ளிகளை உருவாக்கினார். இப்பள்ளிகள் நற்செய்தித் தொண்டர்களின் மேற்பார்வை யில் இருந்ததால், கல்வியும், நற்செய்திப் பணியும் விரி வடைந்தன.

சீகன்பால்குவும் அவரது உடன ஊழியரும் செய்த திருப் பணியைப் பாராட்டி கடிதங்களும், பல்வேறு வகையான உதவிகளும் வந்தவண்ணமாகவே இருந்தன. இங்கிலாந்து நாட்டிலுள்ள கிறிஸ்தவ அறிவு வளர்ச்சிக் கழகத்தின் தலைவ ரான காண்றர்புரித் தலைமைப் பேராயர் வில்லியம் காண்றர் என்பவர் சீகன்பால்குவின் திருப்பணிச் சிறப்பைக் கீழ்க் கண்டவாறு சித்திரித்துப் பாராட்டி அவருக்கு ஓர் கடிதம் எழுதினார். அதின் சுருக்கம்:

> சபைப் பெரியார்கள் அனைவரின் முயற்சியிலும் உங்கள் பணி சாலச் சிறந்தது என நான் கருதுகின்றேன். அவர்கள் தலைவர்களாகவும், முதற் பெரும் பேராயர்க ளாகவும், போப்புவின் போதகப் பிதாக்களாகவும் இருப்பார்களாக. பொன்னாலும் இரத்தாம்பரத்தாலும் அலங்கரிக்கப்பட்டு விளங்குவார்களாக. தலை வணக்கத் தையும், முழங்கால் வணக்கத்தையும், வணக்கத்திற் குரிய வழிபாடுகளையும் பெறுவார்களாக.
>
> நீங்கள் அவர்கள் யாவரிலும் சிறப்புள்ள பெருமை யைப் பெற்றிருக்கின்றீர்கள். நாள் ஒன்று வரும். அப்பொழுது நல்ல மேய்ப்பர் தம் ஆடுகளுக்கு, அதனதன் பணிக்கேற்ற பரிசுகளை அளிப்பார். அப்போது உங்க ளுக்கும் உரிய பதவியும், பெருமையும் அங்கே காத்திருக் கும்.
>
> ஏனெனில் நீங்கள் தீர்க்கர், நற்செய்திப் பணியாளர், திருத்தொண்டர் என்பவர்களின் தூய குழுவில் சேர்க்கப் படுவீர்கள். அவர்களோடு நித்திய காலமாய்ச் சுடர் விடும் விண்மீன்போல் திகழ்வீர். ஆகவே, பெருமை

பெற்றவரே, என் வாழ்த்துரைகளுடனும், இறைவனை ஏறெடுக்கும் விண்ணப்பத்துடனும் இதனை முடிக்கின்றேன்.

இப்படிக்கு
உங்களுடன் கிறிஸ்துவின் திராட்சைத் தோட்டத்தில்
பணிபுரியும் உடன் உழைப்பாளன்
வில்லியம் காண்றர்

ஆனால் இந்த ஆறுதலான கடிதம் சீகன்பால்குவின் கைக்கு வந்து கிடைக்குமுன் சீகன்பால்கு தம் ஓட்டத்தை முடித்து, பரம இளைப்பாறுதலை அடைந்தார்.

# 13. சீகன்பால்குவின் மரணம்

1718ஆம் ஆண்டின் பிற்பகுதி சீகன்பால்குவிற்கு தரங்கை அதிகாரிகளாலும், பிறராலும் பல்வகையான துன்பங்கள் ஏற்பட்டன. அவரது வாலிப வயதில் அவருக்கு ஏற்பட்ட வயிற்றுநோய் திரும்பவும் வந்ததால் 'மத்திட்ட தயிர்போல' வேதனையின் சுழற்சிக்குள் சிக்கி அதிக துன்பத்திற்குள்ளானார். அதற்காக சிகிச்சைப் பெற்றும், வியாதியின் கொடுமை அதிகரித்ததே தவிர குறையவே இல்லை.

இந்நிலையில், டென்மார்க்கில் புதிதாக ஏற்படுத்தப் பட்ட நற்செய்திப் பணிக் கழகத்தின் தலைவர்கள் தரங்கைப் பணியைப்பற்றி திருப்தி இல்லாமல் இருந்தார்கள். 'தரங்கம்பாடி ஒரு தரும பண்டகசாலை' என்று குறை கூறத் துவங்கினார்கள். ஆதி அப்போஸ்தலர்கள் நற்செய்தியைப் பிரசங்கித்துச் சபைகளை உருவாக்கினதுபோல, சீகன்பால்கு குருண்லர் செய்யாமல், தரங்கம்பாடியிலே தங்கி இராமல், ஊர் ஊராகப் போக விரும்புகின்றார்கள். பெரிய வீடுகளை தாங்கள் தங்கி இருப்பதற்கென்று வாங்கி, நற்செய்திப் பணிக்காகக் கொடுக்கும் பணத்தை வீணடிக்கிறார்கள் என்று குறை கூறினார்கள். நற்செய்தித் தொண்டர்கள் பள்ளிக் கூடங்களைக் கட்டியது அவர்களுக்குத் திருப்தி தராத செயலாகவே இருந்தது. இதனால் அவர்கள் இரண்டு ஆண்டுகளாக நற்செய்திப் பணிக்காக எவ்வித பணமும் அனுப்பாமல், நற்செய்திப் பணிக்காக டென்மார்க்கு மக்கள் கொடுத்த நன்கொடைகளை எல்லாம் டென்மார்க்கி லேயே, திருமறையை அச்சிட்டு வெளியிடுவதற்கும், அதன் பணிக்கும் செலவிடத் துவங்கினார்கள். இப்போக்கு சீகன்பால்குவிற்கு ஒத்துவராததால், பல கண்டிப்பான

கடிதங்களை எழுதி அவர்களின் போக்கை எச்சரித்தார். ஆனால் அவர்களின் கோபம் அதிகரித்ததே தவிர, எவ்வித மாற்றமும் அவர்களிடம் ஏற்படவே இல்லை.

இவ்வித வேதனைகளோடு, வளர ஆரம்பித்த தரங்கை சபையிலும் சில ஒழுக்கக்கேடுகள் நடந்து சீகன்பால்குவைப் பெரிதும் துன்பத்திற்குள்ளாக்கியது. 'பிடித்த கொம்பும் ஒடிந்து மிதித்த கொம்பும் ஒடிந்தாற்போல' சீகன்பால்குவின் நிலை ஆனது. சீகன்பால்கு இவ்வித தீமைகளை அகற்ற அவர்களோடு பல மணி நேரம் பேசி, அவர்களுக்காக மன பாரப் பட்டதால் அவரது உடல்நலம் மேலும் பெரிதும் பாதித்தது. 1718ஆம் ஆண்டின் பிற்பகுதியில் சீகன்பால்குவின் உடல்நிலை கவலைக்குரியதாக மாறினது. அடிக்கடி வயிற்றுவலி, இடைவிடா இருமல் இருந்தது. ஆயினும் தாம் ஆரம்பித்த அனைத்து ஊழியங்களையும் மேற்பார்வை இட்டு வந்தார். அதற்குப் பின் எதுவும் செய்ய முடியாமல் படுத்த படுக்கையாகிவிட்டார். முழுபலம் இல்லாதிருந்தும், அவரது குரல்வலிமைக் குறைந்திருந்தும் 1719ஆம் ஆண்டின் கிறிஸ்மஸ், புத்தாண்டு ஆகிய சிறப்பான நாள்களில் சீகன்பால்கே ஆலயத்தில் அருளுரையாற்றினார். இதுவே அவர் கட்டிய ஆலயத்தில் கடைசியாகச் செய்த அருளுரை.

தமது உடல்நிலை நாளுக்குநாள் நலிவுறுவதை உணர்ந்த சீகன்பால்கு 1719ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 10ஆம் நாளன்று தமது உடன் ஊழியர் குருண்லரைத் தன் படுக்கைக்கு அருகில் அழைத்து, தரங்கை நற்செய்திப் பணியின் முழுப் பொறுப்பையும், கணக்குகளையும் கொடுத்துச் சாவிகளையும் ஒப்படைத்தார். அதோடு ஊழியத்தைப்பற்றியும், தமது துணைவி, தனது இரு குழந்தைகள் பற்றிய ஓர் உயிலையும் எழுதி அவரிடம் கொடுத்தார். அடுத்த நாள் திருவிருந்து பெற விரும்பினார்.

ஆனால் அன்று இரவு அவரது உடல் நிலை முன்னிலும் அதிக மோசமானது. குருண்லரைக் காண ஆவலாயிருந்தும், அதிகாலை ஐந்து மணி வரைக்கும் அவரைக் காணமுடியாமல் போனது. இந்நிலையில் சீகன்பால்குவின் துணைவியார் இரவு

முழுவதும் விழித்திருந்து, யோவான் நற்செய்தியில் 14 முதல் 17 அதிகாரங்களையும், ரோமருக்கு எழுதிய எட்டாம் அதிகாரத்தையும், 2 கொரிந்தியர் 5ஆம் அதிகாரத்தையும் சீகன்பால்குவிற்குச் சத்தமாய் வாசித்துக்கொண்டேயிருந்தார். குருண்லரை அதிகாலையில் கண்டதும், திருவிருந்தைத் தனக்கு உடனே கொடுக்கும்படி கேட்டார். குருண்லரிடமிருந்து அதிக ஜெபத்தோடும், கண்ணீரோடும் திருவிருந்தைப் பெற்றுக்கொண்டபின், அந்த நாளின் மாலையில் சபை மக்களைத் தம்மிடம் வரவழைத்து, உருக்கமான புத்திமதிகளைக் கூறினார்.

சீகன்பால்குவின் முகத்தில் சிறிது தெளிவு ஏற்பட்டதைப் பார்த்த சபையார் அவர் பிழைத்துக்கொள்வார் என்று நினைத்தார்கள். ஆனாலும் சீகன்பால்குவின் நிலை மோசமாகவே இருந்தது. பெப்ருவரி 23ஆம் நாள் காலை 9 மணி அளவில் குருண்லர் சீகன்பால்குவைச் ஜெபத்தாலும், வேத வசனத்தாலும் தேற்றினார். சீகன்பால்குவின் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த ஒருவர் சீகன்பால்குவிடம், 'இது உமது கடைசிப் போராட்டம். நீர் கிறிஸ்துவின் பலத்தால் தைரியம்கொண்டு பவுலைபோல், நல்ல போராட்டத்தைப் போராடினேன்; என் ஓட்டத்தை முடித்தேன்" என்ற வார்த்தைகளைச் சொல்லித் தியானியும் என்று கூறின போது, சீகன்பால்கு அவரிடம், 'ஆம் நான் அப்படிப்பட்ட மகிமையின் கிரீடத்தைப் பெறும்படி கிறிஸ்துவின் மூலமாய் இப்போராட்டத்தைச் சகிப்பேன்' என்றார். அதற்குப்பின், 'இனி நான் பேசமுடியாது. நான் பேசினதைக் கர்த்தர் ஆசிர்வதிப்பாராக' என்று சீகன்பால்கு கூறினபோது, குருண்லர்: 'நீர் பேசினவற்றைக் கர்த்தர் நித்திய ஆசீர்வாதமாக்குவார்' என்று சொன்னார்.

பின்பு சீகன்பால்கு, 'பிதாவே, நான் எங்கே இருக்கிறேனோ, அங்கே என் ஊழியனும் இருப்பான் என்று கிறிஸ்து கூறினாரே' என்ற வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டே தன் இரு விழிகளையும் தமது கையால் மூடிக்கொண்டு சீகன்பால்கு சொன்னதாவது, 'எல்லாம் எனக்குத்

தெளிவாய்த் தெரிகின்றன, என் கண்ணுக்குள் சூரியன் பிரகாசிப்பதுபோல் இருக்கிறதே' என்றார்.

அதற்குப்பின் 'என்னை மீட்டுத் தாங்கிய இயேசு ஜீவனுள்ளோராமே' என்று துவங்கும் ஞானப்பாட்டை (281ஆம் ஞானப்பாட்டு) ஆர்களை வாசித்து பாட்டு முழு வதையும் எல்லோரும் பாடக் கேட்டுக்கொண்டார் அவர் கேட்டுக் கொண்டபடியே எல்லோரும் கண்ணீர்மல்கப் பாடினார்கள். பாட்டின் எல்லாக் கவிகளையும் பாடின பின்பு, சீகன்பால்கு கட்டிலிலிருந்து தூக்கி சாய்வு நாற்காலியில் தம்மை உட்காரவைக்கும்படி கேட்டுக் கொண்டார். உட்கார்ந்த ஒரு சில மணித்துளிகளில் முற்பகல் 11 மணிக்கு சீகன்பால்கு கர்த்தருக்குள் நித்திரை யடைந்தார்.

சீகன்பால்கு தமது 36 வயதில் இறைவனடி சேர்ந்தார். ஓடி மறையும் மின்னலைப்போல தமது இளமையிலேயே மறைந்தார். சீகன்பால்குவின் துணைவியார் சுடுமணலில் சிக்கிய புழுபோல துடித்தார். விம்மினார். வெதும்பினார். சீகன்பால்குவைப்பற்றி அவரது துணைவியார், 'என் கணவர் வியாதிப்பட்டதிலிருந்து, மரணமடையுமட்டும், அவர் காட்டிய பொறுமையும், சகிப்புத்தன்மையும், சாந்தமும், கடவுளின் சித்தத்திற்கு முற்றிலும் அடங்கியிருந்ததும் என் ஆயுள் உள்ள மட்டும் நான் மறக்கக்கூடியவை அல்ல' என்று உருக்கத்தோடும், கண்ணீரோடும் கூறினார்.

மறுநாள் பெருங்கூட்டம் புடைசூழ, சீகன்பால்கின் சடலம் புது எருசலேம் ஆலயத்திற்குக் கொண்டுபோகப் பட்டது. மேலை நாட்டவரும், கிறிஸ்தவர்களும், இந்துக் கள், முகமதிய சமயத்தினரும் பெருங்கூட்டமாய்க் கூடி இருந்தார்கள். ஆலயம் இடம்கொள்ளாமல் மக்களால் நிறைந்திருந்தது. குருண்லர் யோ. 3:29,30இல் துக்கப் பிரசங்கம் செய்தார். 'மணவாட்டியை உடையவனே மண

வாளன். மணவாளனுடைய தோழனோ அருகில் நின்று அவருடைய சத்தத்தைக் கேட்டு மணவாளனுடைய குரலினால் மிகவும் மகிழ்ச்சியடைகின்றான். என்னுடைய இந்த மகிழ்ச்சி பரிபூரணமாயிற்று. அவர் பெருகவேண்டும், நானோ சிறுகவேண்டும்' என்ற வார்த்தைகளின் பேரில் ஆறுதலான அடக்க ஆராதனைப் பிரசங்கத்தைச் செய்தார்.

அதன்பின் சீகன்பால்கு கட்டிய 'புதிய எருசலேம்' என்ற ஆலயத்தின் பீடத்தின் அருகே சீகன்பால்குவின் உடல் உயிர்த்தெழுதலின் நன்னம்பிக்கைக்கென்று நல்லடக்கம் செய்யப்பட்டது. புதிய எருசலேம் ஆலயத்தைக் கட்டியவர் சீகன்பால்கு; அவ்வாலயத்தில் முதல் பிரசங்கம் செய்தவர் சீகன்பால்கு. அதே ஆலயத்தில் அடக்கம் செய்யப்பட்டவரும் அவரே. சீகன்பால்குவின் மரணச் செய்தியைக் கேட்டு வருந்தாத உள்ளங்களே இல்லை.

சீகன்பால்கு கிறிஸ்துவின் அன்பை ருசித்து, அதைப் பிறருக்கும் வழங்கத் துடித்தார். அவரது விருப்பத்தை இந்திய மண்ணில் நிறைவேற்றி முடித்தார். கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியை இந்திய மக்கள் ஏற்றுக்கொள்ள சீகன்பால்கு சிறந்த கருவியாக இருந்தார்.

சீகன்பால்கு இறந்த பதிமூன்று மாதங்களுக்குள் குருண்லரும் இறந்தார். இவ்விருவரும் இறந்தது மேல் அதிகாரிகளைப் பாதித்தது. எனவே தரங்கை நற்செய்தித் தொண்டர்களுக்கு இன்னல்கொடுத்து அவர்களது குறுகிய கால மரணத்திற்குக் காரணமாயிருந்த டென்மார்க்கு நற்செய்திப்பணி மன்றத்தின் தலைவர் (Mission Director Board) வெண்ட் என்பவர் பதவியினின்று விலக்கப்பட்டார் சீகன்பால்கு கடைபிடித்த முறைமைகளில் தொடர்ந்து. நற்செய்திப்பணி நடந்தேற அனைத்து வசதிகளும் செய்யப்பட்டன.

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று

என்ற வள்ளுவரின் வாக்கை தமது வாழ்வில் நிறைவேறச் செய்தவர் சீகன்பால்கு, சீகன்பால்கு அன்று தமிழகத்தில் நட்ட நற்செய்தி என்ற செடி இன்று வளர்ந்து ஆலமரமாய்ப் பரவி, படர்ந்து, தமிழக மெங்கும் கிளைகளைப் பரப்பி விழுதுகளையெல்லாம் வேராக்கி செழித்து தழைத்து ஓங்கி நிற்கின்றது.

# 14. சீகன்பால்குவின் பணியைப்பற்றிய ஒரு மதிப்பீடு

1. **விசுவாச வீரர்**

சீகன்பால்கு ஆறு வயதாயிருக்கையில் பெற்றோர் மரித்தனர். தொடர்ந்து சகோதரிகள் மரித்தனர். இந்த இழப்புகளால் சீகன்பால்குவின் பக்தியில் இழப்பு ஏற்படவே யில்லை. பக்தியுள்ள பெற்றோருக்குப் பிறந்த அவர் பக்தியில் சிறந்தே விளங்கினர்.

அவரது பள்ளி வாழ்விலும், பல்கலைக் கழக வாழ்விலும் ஆன்மீகத்தில் தொடர்ந்து வளர்ந்துகொண்டே இருந்தார். அவருக்குப் பணியின்போது ஏற்பட்ட எண்ணற்ற இடுக்கண்ணிலும் அவரது விசுவாசத் தீ மங்கவும் இல்லை, அணைய வும் இல்லை. மரிக்கும் வரைக்கும், மரித்தபோதும் ஓர் விசுவாச வீரராகவே வாழ்ந்து திகழ்ந்தார்.

2. **சூழிசைவு சார்ந்தவர் (He was contesual)**

மேலைநாட்டு நாகரீகத்தில் பிறந்து வளர்ந்த சீகன்பால்கு நற்செய்தியின்பொருட்டுத் தம்மை எல்லாருக்கும் எல்லா மாக்கிக்கொண்டு யாருக்கு நற்செய்தியைக் கூற வந்தாரோ அவர்கள் மொழி கற்கவும்—பேசவும் செய்து, தம்மை அவர் களில் ஒருவராக இணைத்துக்கொண்டார்.

இந்தியமயமாக்குதல், தன்னுட்டுமயமாக்குதல் என்ப தெல்லாம் இன்று பெரிதாகப் பேசப்படுகின்றன. சீகன்பால்கு இவைகளை மூன்று நூற்றுண்டுகளுக்கு முன்னரே செயல்படுத் தினர். தாய்மொழியிலேயே திருமறை, தாய்மொழியிலேயே வழிபாட்டுமுறைமை, தாய்மொழியிலேயே அருளுரை என்பனபோன்ற பல காரியங்களில் தன்னுட்டுமயத்தைப் புகுத்தினர்.

### 3. இலக்கியவாதி

'ஒரு நல்ல புத்தகம், ஒரு நல்ல மனிதனுக்கு ஒரு நல்ல சொத்து' என்பது முன்னோர் வாக்கு. கிறிஸ்துவின் நற்செய்தியை வாயினால் மட்டுமல்லாது, பல்வகைப்பட்ட நூல்களாக அச்சடித்து என்றும் நிலைக்கும் நிரந்தர இலக்கியங்களாக்கியவர் சீகன்பால்கு.

இவ்விலக்கியங்களால் தன்னை அணுக மறுத்த மேல்குல மக்களையும், தான் அணுகமுடியாத இஸ்லாமிய தாய்க் குலத்தையும் தமது இலக்கியங்களால் அணுகி, அவர்கள் கிறிஸ்துவைக் காணும்படி செய்தார்.

ஓலைச்சுவடிகளுக்கு வேலையில்லாமல் செய் [illegible] ததை அறிமுகப்படுத்தி, அச்சு நூல்களைக் கண்கள் காணும்படி செய்தவர் சீகன்பால்கு.

### 4. சுய சார்பாளர்

சீகன்பால்கின் வருகைக்கு முன்னரேயே ரோமன் சபையைச் சேர்ந்த நற்செய்தித் தொண்டர்கள் இந்தியாவில் பணியாற்றி வந்தார்கள். இவர்களுக்குப்பின் சீகன்பால்கு வந்தாலும் இவர் ரோமன் சபையின் நற்செய்தித் தொண்டர்கள் பின்பற்றிய முறைமைகளைப் பின்பற்றாமல், தமக்கென ஒரு புதிய பாணியை உருவாக்கிக்கொண்டு ஊழியம் செய்தார். சூழலுக்கேற்ப சுயமாகச் சிந்தித்து செயல்பட்ட சுய சார்பாளர் சீகன்பால்கு. இவர் ரோமன் சபையின் நற்செய்தித் தொண்டர்களோடும் பழகினார். ஆனால் அதே நேரத்தில் சீர்திருத்தச் சபையின் தனித்தன்மையை நிலை நாட்டினார்.

### 5. உரையாடலின் தந்தை

அகில உலகமும் இன்று 'உரையாடலை' (Dialogue) ஓர் சிறந்த அணுகுமுறையாகக் கைக்கொண்டு வருகின்றது. தங்களது சமயக் கருத்துக்களைப் பிற சமய அன்பர்களோடு உரையாடல்மூலம் இன்று பகிர்ந்துகொள்கின்றார்கள்.

சிறந்த அணுகுமுறையாகக் கருதப்படும் இந்த உரையாடல் முறையை மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னரேயே சீகன்பால்கு தன் ஊழியத்தின் ஓர் அம்சமாகக் கொண்டார்.

பிற சமய அன்பர்களோடு நேரிலும், நேரில் சந்திக்க முடியாதவர்களோடு கடித முறையிலும் தொடர்புகொண்டு கிறிஸ்தவத்தின் பேருண்மைகளைப் பகிர்ந்துகொண்ட அவரே உரையாடலின் தந்தையும் ஆகின்றார்.

## 6. தூரப்பார்வையாளர்

திருச்சபைகளால் இன்று கல்விக்கூடங்கள், விடுதிகள், இறையியல் கல்லூரிகள் நடத்தப்படுகின்றன. எழில்மிகு ஆலயங்கள் கட்டப்படுகின்றன. இவைகளுக்கெல்லாம் துவக்கவிழா நடத்தியவர் சீகன்பால்கு.

தமிழகத்தில் திருச்சபை என்று ஒன்று உருவாகாத ஆரம்பகாலத்திலேயே தூரப்பார்வையுடன் பள்ளிகள், விடுதிகளை உருவாக்கியதோடு நில்லாமல் இறையியல் கூடத்தையும் (Seminary) உருவாக்கினார்.

மிகக் குறைந்த அளவு கிறிஸ்தவர்களே இருந்த துவக்க நிலையில் பல நூறுபேர்கள் அமர்ந்து வழிபடக்கூடிய பெரியதொரு ஆலயத்தை அமைத்தார் என்றால் அவரது தூரப் பார்வையைக் கண்டு வியக்காமல் இருக்கமுடியுமா?

ஒரு இலட்சம் ஆத்துமாக்களையும், ஏறத்தாழ நூறு குருசேகரங்களையும், எண்ணூறும் கல்விக்கூடங்களையும், விடுதிகளையும்கொண்ட தமிழ் சுவிசேஷ லுத்தரன் திருச்சபை அவரது தூரப்பார்வைக்குள்ளானதே.

## 7. இரும்பு மனிதர்

சீகன்பால்கின் சொற்கள் கரும்பாக இனித்தது. அவரது உள்ளமோ இரும்பைப்போன்று உறுதிகொண்டது. சொந்த வீட்டை, நாட்டை விட்டுவிட்டு திருப்பணியாற்ற வந்த சீகன்பால்கு அடையாத இன்னல்களே இல்லை. உடல் நோய் ஒருபக்கம், அதிகாரிகளின் துன்புறுத்தலால் மனநோய் மறுபக்கம்.

இருப்பினும் அத்துணைத் துன்பங்களையும் அவர் சந்தித்தார். துன்பங்கள் அவரது குறிக்கோளினின்று அவரைப் பின்வாங்கிடச் செய்யவில்லை. எதையும் தாங்கும் உறுதி கொண்ட உள்ளம் படைத்தவராக வாழ்ந்தார்.

8. கர்மவீரர்

சீகன்பால்கு தமது 24 வயதில் தரங்கையில் காலெடுத்து வைத்தார். தமது 36 வயதில் இறைவனடி சேர்ந்தார். இடைப்பட்ட 13 ஆண்டுகளில் அவர் எண்ணற்ற பல காரியங்களைச் செய்து உலகத் திருச்சபை வரலாற்றில் உன்னத இடத்தைப் பிடித்துவிட்டார். அவரது வாழ்க்கையைப் படிக்கும்போது, நமது கண்கள் நம்பமுடியாத அளவிற்கு, அரும்பெருங்காரியங்களைக் குறுகிய காலத்தில் செய்து முடித்தவர் கர்மவீரர் சீகன்பால்கு.

சீகன்பால்கு இன்றைய இளைஞர்களுக்கு ஓர் சவாலாக அமைகின்றார்.

9. முன்னோடியாளர் (Fore-runner)

சீகன்பால்கு பல காரியங்களுக்கு முன்னோடியாயிருக்கின்றார். இன்று பேசப்படும் சத்துணவு, சீருடை ஆகியவை சீகன்பால்கு தமது காலத்திலேயே செயல்படுத்தி, அவைகளின் முன்னோடியாய் அமைகின்றார்.

ஆதரிப்பாரற்று அனாதைகளாக்கப்பட்ட பல தமிழ்க் குழந்தைகளை எந்தத் தமிழனும் ஏறிட்டும் பார்க்காத நேரத்தில், எங்கோ பிறந்த வெள்ளைமனம்கொண்ட சீகன் பால்கு அவர்களுக்கு வாழ்வளிக்க, கல்விக் கண்ணைத் திறக்க முன்வந்தார். தமிழ்க் குழந்தைகளையும் ஆங்கிலேயக் குழந்தைகள்போல் உடுத்துவித்து 'எல்லோரும் சமம்' என்ற தத்துவத்தை இந்தியக் கிறிஸ்தவத்தில் முதல் முதல் நிலை நாட்டிய முன்னோடி சீகன்பால்கு ஆவார்.

## 10. பரந்த மனம்கொண்டவர்

சீகன்பால்கு திறமைகள் மிகுந்தவர். தரங்கைத் திருப் பணிக்குத் தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்தியவர். இருப் பினும் தம்மைப்போல இன்னும் பல நற்செய்தித் தொண்டர் கள் வரவேண்டும் என்ற பேருள்ளத்தோடு புதியவர்களை ஏற்றுக்கொண்டவர்.

புதிய நற்செய்தித் தொண்டர்கள் தரங்கைக்கு வந்த போது, அவர்களை வேறு இடங்களுக்கு அனுப்பிவைக்காமல், தரங்கை ஊழியத்தின் பொறுப்பை அவர்களிடத்தில் விட்டு விட்டு தாம் பல்வேறு இடங்களுக்குச் சென்று ஊழியம் செய்து பணித்தளத்தை விரிவுபடுத்திய அவர் பரந்த மனம் கொண்டவர்.

## 11. சமூக நீதிக்காக போராடியவர் (Fight for the social justice)

தரங்கையைச் சார்ந்த ஒரு ஏழை விதவைப் பெண்மணி மீது வழக்கு போடப்பட்டது. அவ்வழக்கில் சீகன்பால்கு விதவைப் பெண்மணிமீது குற்றம் இல்லையென வாதாடினார். இதனால் சீற்றமடைந்த டேனிஷ் ஆதிக்கம் அவரைச் சிறையில் தள்ளியது. சமூக நீதிக்காக இறையியலாரும் போராட வேண்டும் என்ற துணிவை முதன் முதலில் ஊட்டியவர் சீகன் பால்கு என்றால் மிகையாகாது.

'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல்வேண்டும்' என்ற செயற்கரிய செயலை முதன் முதலில் சீகன்பால்கு செய்துமுடித்தவர். தமிழ் இலக்கிய இலக் கணங்களை ஐரோப்பிய மொழிகளில் அறிமுகப்படுத்தியும் மேற்கு நாட்டுச் சிந்தனைகளைத் தமிழுக்கு வழங்கியும் மேற்குக் கும் கிழக்குக்கும் முதன் முதலில் பாலம் அமைத்தவர் சீகன் பால்கு என்றால் மிகைபடக் கூறுவது ஆகாது.

1813ஆம் ஆண்டில் கிழக்கு இந்திய கம்பெனிச் சட்டம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அச் சட்டத்தில்தான் கிறிஸ்துவ சமயத்தை இந்திய நாட்டில்

தடையின்றி பரப்ப அனுமதிச் சட்டம் முதன் முதலாக வழங்கப்பட்டது. சமயத்தைப் பரப்பும்பொருட்டு பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவ மனைகள் போன்றவை இந்தியத் துணைக் கண்டத்தில் தோன்ற வழிவகுக்கப்பட்டது. தமிழகத்திற்கு டேனிஷ் ஆளுகைக்கு உட்பட்ட தரங்கம்பாடி வழியாக 1706இல் சீகன்பால்கு இந்திய நாட்டிற்கு வராவிடில்' மேலைநாட்டு கல்விமுறை மற்றும் அறிவியல் கண்டுபிடிப்புகள் இந்தியநாடு பெற்றிட ஒரு நூற்றாண்டு பின் தங்கிய நிலையை அடைந்திருக்குமென வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இன்று ஆசியக் கண்டத்தில் எல்லா துறையிலும் முன்னேற்ற நிலையைப் பெற்றிட காரணமாக இருந்தவர் சீகன்பால்கு. எனவேதான் அவர் இந்தியநாட்டின் விடிவெள்ளி என்று அழைக்கப்படுகிறார். இந்திய துணைக் கண்டத்தில் கிறிஸ்துவின் திருச்சபை விழுதுகள்விட்டு வளர்ந்து பரவ தமது உடலையே தமிழ் மண்ணுக்கு உரமாகக் கொடுத்த பெருந்தகையாளர் சீகன்பால்கு ஆவார்.

## நூலாசிரியர்கள்

தமிழ் சுவிசேஷ லுத்தரன் சபையில் நெடுங்காலம் திருப்பணி ஆற்றியதோடு, தமிழ்நாடு இறையியல் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் திகழ்ந்த **அருள்திரு. டாக்டர் லாரன்ஸ் அடிகளார்** பல நூல்களையும் எழுதியுள்ளார்.

**அருள்திரு. டாக்டர் டி. அருள்தாஸ்** அவர்கள் தமிழ்நாடு இறையியல் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றுவதோடு தமிழ் இறையியல் நூலோர் குழுவின் செயலாளராகவும் திகழ்கிறார்.

CLS

ZIEGENBALG : THE MORNING STAR OF INDIA

By

S. LAWRENCE, T. ARULDOSS

**விலை ரூ. 35.00** (இந்தியாவில் மட்டும்)